தமிழ்

இசைச் சங்கம்

1946-47



Direction : PATTU IYER
Cinematographic Direction : Mo. RAHAMAN (Courtesy Renuka Films)
Story : B. S. RAMIAH
Songs : SIVAN & RAJAGOPALIYER
Music : S. V. VENKATRAM

with
SEENU · VIJAYAKUMARI · CHELLAM
T. R. RAMACHANDRAN · SOWDAMINI
GOPINATH · BABY KAMALA & OTHERS

SREEKAMAL Productions

G. H. RAO

North Arcot, South Arcot and Chingleput :
Sri Haranath Pictures, Vellore
Salem, Coimbatore and Nilgiris :
N. M. R. Pictures Circuit, Gugai, Salem

Malabar :
Swamy Films, Kottayam
Andhra and Ceded :
Royal Film Exchange, Secunderabad (Dn.)

Ceylon and F. M. S. : **Ceylon Theatres Ltd., Colombo**
Other Territories : **T. P. Sundaram, Balajinagar, Madras 14**

Telephone 2617. Telegrams: EMPEECO

MADRAS PALAYAKAT
MANSOOR
BEST QUALITY

REGD. TRADE MARK

மன்சூர் பலயகாட்
கம்பெனி

117-118, ராமசாமி தெரு,
ஜி. டி., சென்னை.



"பலயகாட்"
கைத்தறி
லுங்கி வியாபாரம்

☆

நீண்ட காலம் உழைக்கக் கூடியதும் சாயத்திற்கு உத்தரவாத மானதுமான நவீன கைத்தறிகளால் தயாரிக்கப்படும் எங்கள் "மன்சூர்" மார்க், "S.D." மார்க் சாரம் கம்பாயம் சர்ட்டிங், கைக்குட்டைகள் வாயில்கள் இவைகளை வாங்கி அணியுங்கள்.

☆

கிளைகள் :

1. 29, ஏகாம்பரநாதர் சன்னதி,
பெரிய காஞ்சிவரம்.
2. 95, செகண்டு கிராஸ் தெரு,
கொளும்பு.
3. 96, லோயர் சிக்பூர் ரோடு,
கல்கத்தா.
4. 26, மேலக் கோபுர வாசல்,
மதுரை.



Direction: **B. N. RAO** Studio: **PRAGATI**

For Particulars apply to :

A. P. M. S. KHIZAR & CO.

Managing Agents: **MUBARAK PICTURES LTD.**

47, Langs Garden Rd. :: PUDUPET, MADRAS 2

THE MADRAS DIRECTORY
&
WHO'S WHO 1947
SECOND YEAR OF PUBLICATION

The only authoritative & Comprehensive Directory of Madras Presidency containing a mine of detailed Information of every important Town & District.

Names & addresses of merchants, manufacturers, agents etc., will be published **FREE OF COST** in any one place in the Directory.

Bold Type Entries Rs. 5 each

Ordinary Extra Entries Rs. 2 each

ONE ENTRY **FREE** TO ALL

Price Rs. 10.
(Postage Rs. 1-12 Extra)
CASH WITH ORDER

CONTENTS

* Classified List of Trades & Professions
* Commercial & Industrial Directory
* Government of Madras
* Members of the Legislature
* Chambers of Commerce
* Stock Exchange Associations & their rules
* Madras Port Trust Details
* Newspapers & Periodicals in the Presidency
* Joint Stock Companies
* List of Factories
* Universitities
* Educational Institutions
* Benevolent Institutions
* Hospitals
* Clubs & Associations
* Race Clubs
* Railways
* Madras Street Directory
* Famous Industrial & Commercial Houses

& WHO'S WHO ILLUSTRATED

INVALUABLE AS AN ADVERTISING MEDIUM

ADVERTISEMENT CHARGES ON APPLICATION

ALL DETAILS SUCH AS Names, Addresses, Business lines handled etc., for publication should be sent to us sufficiently early.

ENQUIRIES TO :

MADRAS DIRECTORY & WHO'S WHO
117, ARMENIAN STREET, MADRAS
PHONE : 3402

இந்தியன் மெர்கண்டைல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.,

(ஸ்தாபிதம்: 1907)

☆

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

மெட்ராஸ் பிராஞ்சு: கோயமுத்தூர்.

உன்னதமான செல்வ நிலையும், உயர்தரமான நிர்வாக அங்கத்தினர்களும், சிக்கனமான பரிபாலனமும், விரிவான பாலிசி விகிதங்களும், இணையற்ற பற்பல பாலிசி திட்டங்களும், உரிமை கொடுப்பதில் பெருநோக்கமும், கண்ணியமான நடத்தையும் அமைந்துள்ளதுமான மிகப் பழமையான சுத்த சுதேசியக் கம்பெனி.

ஆயுள், தீ, கப்பல், மோட்டார், விபத்து முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

தமிழ் நாடெங்கும் ஏஜண்டுகள் தேவை:

இக்கம்பெனிக்கு உழைப்பது வெகு லாபத்தையும் பேரானந்தத்தையும் தரும்.

☆

விபரங்களுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதுக:—

C. சுப்பிரமணியம் B. A.

பிராஞ்சு மானேஜர்

இந்தியன் மெர்கண்டைல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி நெ. 4.

கோயமுத்தூர்.

தமிழ் இசைச் சங்கம்

சென்னை

நான்காவது ஆண்டு தமிழ் இசை விழா

(23-12-46—1-1-47)

வரவேற்புக் கழகம்

இராவ்பகதூர் டி. எம். சின்னையாப் பிள்ளை, M.A., B.L.,
(தலைவர்)

திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை M.A., B.L.,

இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார், B.A., B.L.,

திரு. எம். எஸ். இராமசாமி செட்டியார்

திரு. எம். இராதாகிருஷ்ண பிள்ளை, B.A., B.L.,

திரு. பி. எம். ஆதிகேசவலு நாயக்கர்

திரு. எஸ். தெய்வசிகாமணி, B.A., B.L.,

திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம்

திரு. டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

இனிய தமிழ் பாடி
இசை வளர்ப்போம்

தமிழ் இசைக் கல்லூரி, சென்னை

(தோற்றம்: 1943)

சென்னைத் தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் நடைபெறுவது

★

கல்லூரி ஆலோசனைக் கழகம்:

இராவ்பகதூர் டி. எம். சின்னையாப் பிள்ளை, M.A., B.L., (தலைவர்)
திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, M.A., B.L.,
கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை
திருப்பாம்புரம் டி. என். சாமிநாத பிள்ளை
இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர்
தஞ்சை க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை
பண்டித லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்
கீவளூர் எஸ். மீனாட்சிசுந்தரம் பிள்ளை
இராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார், B.A. (கௌரவ காரியதரிசி)
டி. வி. கமலசாமி, B.A., துணைக்காரியதரிசி
} உரிமையினால் இடம் பெறுவோர். (*Ex-Officio.*)

★

ஆசிரியர்கள்:

இயலிசைப் புலவர் கீவளூர் எஸ். மீனாட்சிசுந்தரம் பிள்ளை
தஞ்சை க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை
சித்தூர் வி. இராமச்சந்திரன்

வகுப்பு நேரம்:

ஞாயிறு நீங்கலாக மற்ற 6 நாட்களிலும் நாள்தோறும் மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இந்த ஆண்டில் 8 மாணவர்களும் 13 மாணவிகளும் இசை பயில்கிறார்கள்

தகுதி உள்ளவர்களுக்கு உபகாரச் சம்பளம் உண்டு

தமிழ் இசை பயில உங்கள் குழந்தைகளை நீங்களும் ஏன் அனுப்பலாகாது?

Doctor's Prescriptions
Accurately Executed



WINDSOR & Co.,

SCIENTIFIC OPTICIANS,

10/9, BROADWAY .: MADRAS.

SRI RAMA BHAVAN

296, Thambu Chetty St., MADRAS

CATERERS

Tamil Isai Sangam

CONFERENCE

From 23-12-46 to 1-1-1947.

VISIT

Our Refreshment Stall

AT THE

MADRAS BEACH STATION

PLATFORM

TELEGRAMS: "JYOTI"

KESERISHIH VALLABHDAS

R. S. PURAM, P. O., COIMBATORE.

Direct Importers of:

Textile Mill Stores and Machinery parts

Large stocks always held of:

Leather beltings of all sizes; Canvas and hair beltings American Calf skins.

ENGLISH PICKERS
BUFFERS
PICKING BANDS

CHINA CLAY
DEXTRINE
TALLOW
SOFT SOAP, GUMS &c.

SHUTTLES
REEDS AND HEALDS
& BOBBINS

Dobby harness, Heald cord, Heald piecing yarn, Hydraulic Ram rings, Loom Sundries and Spinning accessories, Roller cloth, Clearer cloth, Sizing flannel, Endless flannel, Green plush and Frictional flannel. Nelson's original isinglass, Australian isinglass and Devson's Gelatine.

Tubular, card, scroll, rim and bundle bandings, Egyptian quality spindle tapes of all sizes Roller varnish-black & chocolate colours.

ALL SORTS OF MACHINERY SPARE PARTS

உள்ளே:

காணிக்கை 11

இராவ்பகதூர். டி. எஸ். கச்சாபிகேச முதலியார், B. A.,
கௌரவ காரியதரிசி, தமிழ் இசைச் சங்கம்

இசை வளர்ச்சி 13

கனம் டாக்டர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்
கல்வி அமைச்சர், மத்திய இந்திய அரசாங்கம், தில்லி

தமிழ் வீரர் பாட்டு 15

யோகி சுத்தானந்த பாரதியார்
அரவிந்தர் ஆச்சிரமம், புதுவை

பண்ணும் பாடலும் 17

பேராசிரியர் மு. வரதராசனுர், B. O. L., M. O. L.,
தமிழ்ப்பகுதித் தலைவர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை

தமிழில் ஆளத்தி செய்தல் 21

டாக்டர் ஆ. அ. வரகுண பாண்டியன்
கருணநிதி வைத்தியசாலை, தஞ்சை

இசையும் கூத்தும் 25

வித்துவான் ஔவை. சு. துரைசாமி பிள்ளை
தமிழ் விரிவுரையாளர், அண்ணமலைப் பல்கலைக் கழகம், அண்ணமலை நகர்

இசையும் தமிழ்க் கல்வியும் 28

எஸ். ஆறுமுக முதலியார், M. A., B. O. L., L. T.
தமிழ் விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, சைதாப்பேட்டை

கருணமிர்த சாகரம் கண்டவர் 33

டாக்டர் ஆ. ஜோதி பாண்டியன், A. R. P. S.,
கருணநிதி வைத்தியசாலை, தஞ்சை

இசை அரங்கு நடத்தல் 37

இயலிசைப் புலவர் கீவளூர் எஸ். மீனுட்சி சுந்தரம் பிள்ளை
ஆசிரியர், தமிழ் இசைக் கல்லூரி, சென்னை

இசையும் மகளிரும் 40அ

ஜி. கே. ஞானம்பாள், B. A.
லேடி வில்லிங்டன் மகளிர் பயிற்சிக் கல்லூரி, சென்னை

தாய்மொழியில் சங்கீதம் 42

நாரண—துரைக்கண்ணன்
ஆசிரியர், 'பிரசண்ட விகடன்', சென்னை

வரவேற்பு உரை 45

இராவ் பகதூர் டி. எம். சின்னையாப் பிள்ளை M.A., B.L.
தலைவர், இந்து அறநிலையப் பாதுகாப்புக் கழகம், சென்னை

இசையரங்கு நிகழ்ச்சிகள் 49

☆

பதிப்பாசிரியர்:

அன்பு கணபதி

☆

Phone No. 597 Telegrams: "BRILLIANT"

THE TRAVANCORE TEXTILES

TRIVANDRUM

Factory at: **NEMOM**

The place for all that is Best in Handloom Fabrics

Unsurpassed for:

UNCHALLENGED DURABILITY — **ATTRACTIVE DESIGNS, EXCELLENT TEXTURE** — **FANCY & FAST COLOURS SUPERFINE FINISH.**

SHIRTINGS, COATINGS, — BEDSPREADS, DRESS MATERIALS, — FURNISHING FABRICS, TURKISH TOWELS Etc.

The Handloom Industry in India Employs more than ten million people who work over three million looms helping to build up the future of india and its prosperity. It is rightly called the "Backbone of India". It is therefore the duty of every patriotic Indian to encourage this industry out and out. Handloom Fabrics are the choice of every thinking man and woman, because

HANDLOOM FABRICS LAST LONGER

The best of these are the **TRAVANCORE TEXTILE PRODUCTS**

Silky to the Touch, Lustrous to the Eye, Comfortable for wear and Decidedly Economical

TRAVANCORE TEXTILES,
MEENA TEX
TRIVANDRUM.

PRICES TO SUIT EVERY PURSE :: VARIETY TO SUIT EVERY TASTE

ole Selling Agents for India:

T. S. RAMASWAMY IYER & CO.,

Head Office: Lalita Sadanam, Lloyds Road, Royapettah, Madras.

Branch: Main Road, Trivandrum.

ஸ்ரீ கண்ணா பிலிம்ஸ்

தயாரிக்கும்

திருமழிசை ஆழ்வார்...

இசை அரசு

M. M.

தண்டபாணி தேசிகர்

நடிப்பது

டைரக்ஷன் D.S.கோட்னிஸ் & P.S.செட்டியார்

கதை,வசனம்	பாட்டு	சங்கீதம்	நடனம்	கலை
P.S.செட்டியார்...	பாபநாசம் சிவன்...	S.V.வெங்கட்ராமன்...	R.T.கிருஷ்ணமூர்த்தி...	தனபால்

Production executive.. C.SUNDARARAJULU..... *Studio*... SOBHANACHALA

காணிக்கை

நம் தமிழ் இசைச் சங்கம் சென்ற நான்கு ஆண்டுகளாக ஆற்றி வரும் தொண்டு தமிழ் மக்கள் அறிந்ததே. தமிழிசை பற்றிய வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் மறைந்தன. இப்போது ஆக்கவேலை நடைபெறுகிறது.

நம் சங்கத்தில் 800-க்கு மேற்பட்ட ஆதரவாளர் சேர்ந்து, சங்கத்தை ஊக்கி வளர்த்து வருகிறார்கள். மாதந்தோறும் இரண்டு இசை அரங்குகளைச் சங்கம் தவறாது நடத்தி வருகின்றது. முன்னணி வித்துவான்களைக் கொண்டு ஒன்றும், இளம் வித்துவான்களைக் கொண்டு மற்றொன்றும் ஆக இரண்டு இசை அரங்குகளை நடத்தி வருகிறது. இந்த வகையில் இளம் வித்துவான்களைச் சங்கம் ஊக்கி முன்னுக்குக் கொண்டுவருகிறது; ஆதரவாளர்களும் அன்பர்களும் தமிழிசை கேட்டு மகிழ்கிறார்கள். வருகிற ஆண்டிலும் ஆதரவாளர்களின் பேராதரவு, சங்கத்திற்குப் பரிபூரணமாக உண்டு என நம்புகிறோம்.

நம் சங்க ஆதரவில் நடக்கும் தமிழ் இசைக் கல்லூரியும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. கல்லூரியில் இப்போது 8-மாணவர்களும், 13-மாணவிகளும் இசை பயில்கிறார்கள். வெளியூர்த் தமிழிசைப் பள்ளிகளுடன் தொடர்பு கொண்டு, பொதுவான பாட திட்டங்கள் வகுத்து வகுப்புகள் நடத்தி வருகிறோம். எல்லாக் கல்லூரி மாணவர்களுக்கும் நம் சங்கமே பரீட்சை நடத்துகிறது. சென்ற ஏப்ரலில் நடைபெற்ற பரீட்சையில் தேவகோட்டை, காஞ்சீபுரம் தமிழிசைப் பள்ளிகளின் மாணவர்கள் வந்து கலந்துகொண்டார்கள். தேவகோட்டை மாணவர்கள் 13-பேரில் 10-பேரும், காஞ்சிபுரம் மாணவர்கள் 2-பேரில் ஒருவரும் பரீட்சையில் தேறி இசைச் செல்வம் (*Preliminary*) பட்டம் பெறுகிறார்கள். நம் கல்லூரி மாணவர் மூவரில் இருவர் பரீட்சையில் தேறி இசை மணி (*Final*) பட்டம் பெறுகிறார்கள். இவர்கட்கெல்லாம் இந்த இசை விழாவில் பட்டங்கள் வழங்கப்படும். வருகிற ஆண்டில், தமிழ் நாட்டிலுள்ள மற்ற எல்லாத் தமிழிசைப் பள்ளிகளிலிருந்தும் மாணவர்கள் வந்து பரீட்சையில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

சென்ற ஏப்ரலில் ஒன்றும், நவம்பரில் ஒன்றும் ஆக 2 'இசை மலர்'களை நம் சங்கம் வெளியிட்டது. முதல் மலரைவிட இரண்டாவது மலர், பல அறிஞர்களின் உயர்ந்த கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்திருக்கிறது. வருகின்ற ஆண்டிலும் தொடர்ந்து 'இசை மல'ரை இரண்டு மாதத்திற்கு ஒன்று எனத் தவறாது வெளியிட எண்ணியுள்ளோம்.

'தமிழ் நாட்டு இசைச் சங்கப் பிரதிநிதிகள் மூன்றாவது மாநாடு' வருகிற டிசம்பர் 27-ல் நடைபெற இருக்கிறது. தமிழ் இசைச் சங்கங்கள் ஒன்று கூடி உழைத்தால் தான் தமிழிசைக்கு உயர்ந்த வாழ்வு உண்டு என்பதை, தமிழ் நாட்டு இசைச் சங்க அன்பர்களுக்கு நாம் கூற

வேண்டுவதில்லை. அவர்களின் ஒன்று கூடிய உயர்ந்தபணியைத் தமிழகம் எதிர்நோக்கி நிற்கிறது.

வழக்கம்போல, டிசம்பர் 23-ல் நான்காவது தமிழிசை விழாவை இந்து அறநிலையப் பாதுகாப்புக்கழகத் தலைவர் இராவ் பகதூர் டி. எம். சின்னையாப் பிள்ளை M. A, B. L., அவர்களின் வரவேற்புத் தலைமையில், சென்னை அரசாங்கத்தின் பொதுப்பணி அமைச்சர் கனம் M. பக்தவத்சலம் B. A., B. L., அவர்கள் அன்போடு தொடங்கி வைக்கிறார்கள். தொடர்ந்து 10-நாட்கள் அதாவது 1-1-47 வரை நாள்தோறும் செயின்ட் மேரி மண்டபத்தில் இசை மணிகளின் இன்னிசை முழங்கும். கண்டு கேட்டு மகிழுமாறு அன்பர்களை வேண்டுகிறோம்.

இந்த விழா மலர், உருவிலும் பொருளிலும் முன்னைவிட உயர்ந்து விளங்குகிறது; நல்லறிஞர்களின் சொல் ஓவியங்கள் மலரை அலங்கரிக்கின்றன. மலர்தரும் மணம் எத்தகையது என்பதை உள்ளே சென்று நீங்களே உணருங்கள்!

தில்லைக் கூத்தனின்
திருவடி களுக்கு
நல்ல இம்மலர்
நம்கா ணிக்கை.

— டி. எஸ். கச்சாபிகேசன்,

‘என் ஆவல்’

“இசைக் கலையால் நமது நாடு முழுதும் ஒன்றுபட இடமுண்டு. தமிழர் அனைவரும், கலைக்கோயிலில் அன்புமயமாக விளங்கும் நாளே தமிழர் நன்னாள். அந்நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.”

— தமிழிசை முதல் மாநாட்டில் ராஜா-சர்.

தமிழிசை இயக்கம் உண்டானது ஏன்?

“என்னுடைய தமிழில் ஒரு பாட்டைக் கேட்கும்போது என்ன ஆத்ம திருப்தி உண்டாகிறதோ, அந்த திருப்தி எனக்கு வேறு எந்த பாஷையில் பாட்டுக் கேட்டாலும் உண்டாகாது. ஆகையினால், தமிழிசை 2000-வருஷத்திற்கு முன்பிருந்தே இருக்கிறதோ இல்லையோ, விசேஷமோ என்னவோ, தமிழனாகப் பிறந்த எனக்குத் தமிழிசைதான் வேண்டியிருக்கிறது. அதைப்பற்றி நான் யாரிடமும் மன்னிப்புக் கேட்கவேண்டிய அவசியமுமில்லை; கேட்பதாய் உத்தேசமுமில்லை. சாதாரணமாக மனிதர்களுக்கு இயற்கையாக உண்டாகும் உணர்ச்சியின் காரணமாகத் தமிழிசை இயக்கம் உண்டாயிற்று”

— தமிழிசை முதல் மாநாட்டில் சர். ஆர். கே. எஸ்.

இசை வளர்ச்சி

தமிழ் நாட்டில் இசை வளர வேண்டும். இசை வளர்ச்சி என்றால் கச்சேரிகள் நடப்பதால் பெருகுவது மட்டுமல்ல. எல்லாரும் பாட வேண்டும். வீடுகள் முழுதும் இசையொலி நிறைந்து போக வேண்டும். எல்லாரும் பாடி மகிழ்ச்சி கொண்டாட்டம் கொள்ள வேண்டும்! இதுவே பிரதான வளர்ச்சியை ~~உண்டாக்க~~ தமிழிசைத் தொண்டர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

இசையென்பது மனிதர்களை நல்லவர்களாக்கும் ஔஷதம். [illegible] நாதம் என்பது நம்மை உருக்கி அழுக்கும் பிசிறும் [illegible] போகச்செய்து நன்மை ஒன்று சேர்ந்து விடுகிறது. பாடுவோர்களும் கேட்பவர்களும் நல்லவர்களாகி விடுகிறார்கள். இதுவே இசைக்கலையின் எல்லாச் சிறப்புகளுக்கும் [illegible]. வாழ்க! [illegible] வளர்க! தமிழ் நாட்டில் [illegible] இசை வளர

வேண்டும். தமிழிசைச் சங்கம் இந்த நோக்கத்தை மேற்கொண்டு வேலை செய்ய வேண்டுமென்பது என் ஆசை.

பெண்பிள்ளைகள் மட்டும் பாடக் கற்பது போதாது. ஆண்பிள்ளைகளும் [illegible]. இருவர்க்குமே நல்ல பாட்டுக்களை நன்றாகப் பாடக் கற்க வேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து ~~[illegible]~~ தமிழ் மக்களுக்கு ~~[illegible]~~ இசை இன்பம் அளிக்கும். [illegible] ~~[illegible]~~

~~[illegible]~~ தமிழ்நாட்டில் இசைவளர்ச்சி உண்டாக்குவது அவசியமான காரியம். இதற்குச் [illegible] [illegible] செய்து [illegible] ~~[illegible]~~ என்பது என் அபிப்பிராயம். இசைவளர்ச்சி உண்டானால் [illegible] [illegible] [illegible] [illegible].

7-11-46 [illegible]

தமிழ் இசை மலருக்கு அன்பளிப்பு :

தமிழ் வீரர் பாட்டு

இராகம் : செஞ்சுருட்டி] [தாளம் : ஜம்பை.

செந்தமிழ் மொழி தந்த பராபரன்
சிந்தனை — யுடன் — முந்துவோம்.
கொந்த ளித்திடும் வீறுடன் பேரிகை
கொட்டுங்கள் — விண்ணை — எட்டவே.

வைய மெங்கும் தமிழ் முழக்கம் செய்ய
வாருங்கள் — ஒன்றாய்ச் — சேருங்கள்.
கைகள் செந்தமிழ் ஆலயங் கட்டிடக்
காணுங்கள் — வெற்றி — பூணுங்கள்.

தேனின் இன்னிய தெய்வத் தமிழ் இசை
தேறுவோம் — நலம் — கூறுவோம்.
நானி லத்திலும் தாயின் மணிக்கொடி
நாட்டுவோம் — வீரம் — காட்டுவோம்.

அப்பர் சுந்தரர் சம்பந்தர் போற் பணி
ஆற்றுவோம் — நலந் — தோற்றுவோம்.
ஒப்புயர் வற்ற வள்ளுவர் வேதத்தை
ஓதுவோம் — சங் — கூதுவோம்.

துங்க மான தமிழ்மொழி யாவிற்கும்
தொன்மொழி — பூவின் — முன்மொழி.
தங்க மான தமிழ்மொழி நந்திநத்
தாய்மொழி — தேவர் — வாய்மொழி.

கொற்ற வீரக் குரிசில்கள் யாவரும்
கூடுவோம் — வாகை — சூடுவோம்.
ஒற்றுமை யுடன் ஓங்கும் புதுத்தமிழ்
உலகினைச் — செய்வோம் — இலகவே.

துள்ளித் துள்ளித் துடிதுடித் தன்புசெய்
தொண்டர்முன் — பகை — அண்டுமோ ?
வெள்ள மாகப் பெருகும் சுதந்தர
வேகமும் — பழு — தாகுமோ ?

துணிந்த வீரத் தமிழர் திருப்படை
தூங்கவோ — பின் — வாங்கவோ ?
அணிந்த போரில் அதிசய வெற்றிகள்
ஆக்குவோம் — கொடி — தூக்குவோம்....
செந்தமிழ் மொழி தந்த பராபரன்

—சுத்தானந்த பாரதி.

ஒரு கம்பீர புருஷராகத் தோன்றுங்கள்

நீங்கள் வாலிபத்தை அடைய விரும்புகிறீர்களா? அப்படியானால் நிபுணரான டாக்டர் நாருவைக் கலந்து ஆலோசியுங்கள். அவர் உங்களை ஒரு கம்பீர புருஷராகச் செய்வார். இதோ ஓர் நற்சாக்ஷிப் பத்திரம் இருக்கிறது. அதைப் படியுங்கள்:

என் பலஹீனத்திற்காக டாக்டர் நாருவால் சிகிச்சை செய்யப்பட்டு மீண்டும் வாலிபத்தை அடைந்திருக்கிறேன்.

(*Sd.*) ஏ. அய்யஸ்னார், வேட்டப்பாளையம்

வீர்யம் ஜீவசக்தியின்மை, நரம்புத் தளர்ச்சி, வெள்ளை, வெட்டை, மாதவிடாய்க் கோளாறுகள், வெட்டைச் சூடு, ஸ்வப்ன ஸ்கலிதம் மற்றும் ஆண் பெண் வியாதிகள் அனைத்தும் சொஸ்தப்படுத்துவோம்.

டாக்டர் நாரு ஸ்திரீ புருஷ வியாதிகளில் நிபுணர். நாரு ஆஸ்பத்திரி நெ. 24, பிராட்வே, மதராஸ். நேரம்:—காலை 8 மணிமுதல் 12 மணிவரை; மாலை 4 மணிமுதல் 8 மணிவரை. ஞாயிறு காலை 8 மணிமுதல் 12 மணி வரை மட்டும்; ஞாயிறு மாலை ஆஸ்பத்திரி கிடையாது. பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்பவும்.

N. B.—மூல வியாதி ஒரே வாரத்தில் ஆபரேஷனில்லாமல் குணப்படுத்தப்படும். அந்தரங்கமாக வைத்தியம் செய்யப்படும்.

EIGHTH SCIENTIFIC WONDER OF THE WORLD

T. R. K. RAO, Car Street, China Bazaar, Madras.

My dear Doctor,

As I know the favour of health and happiness that God has again bestowed upon me through your agency can never be repaid in terms of money or material human values, I write this letter of thanks to convey at least my abundant gratitude which I today feel towards you on having all my energies being restored to me through your agency—This is a renascence of my life which only a few months ago was horeless wreck and I used to feel that I was only dragging my life along instead of living—I was almost at the point of committing suicide. I was a perpetual nuisance to my wife who just could not bear to see in me as some one as her husband.

Today the regeneration brought about by you compels the same wife of mine as though through magic to kiss the dust that I tread beneath my feet. The new strength that your treatment has infused in my disease-ridden and broken-down constitution has opened before me field of happiness which were not dreamt of before by me. I feel today to be the shiniest hour of my life. The entire credit for this goes to you by virtue of being the architect doctor of my new life.

May God Bless you.

You may do with this letter what you please—I am quite indifferent to its being even published in the papers, as I feel vigorous to a degree that I wanted it to be trumpeted right around the world.

Specialist in Male and Female Chronic Private Diseases:

Dr. NARU, (Sexologist) **Naru Hospital, 24, Broadway, MADRAS**

HOURS: 8 a.m. to 12 noon; 4 to 7 p.m. Sunday 8 a.m. to 12 noon only. Evening Closed.

N. B.—Treatment strictly confidential. Send postage stamp for reply.

மதுரகீதவாணி

ஸ்ரீமதி என்.ஸி. வஸந்தகோகிலம்

இசைத்த

சங்கீத விருந்து!

சில அபூர்வ ரிகார்டுகள்

N 18219	ஆனந்த நடனம் 2 பாகங்கள் (காம்போஜி)
N 18239	தந்தை தாய் 2 பாகங்கள் (ஷண்முகப்ரியா)
N.18249	நித்திரையில் வந்து வருவானோ வனக்குயிலே
N 18259	பாமாலை தித்திக்கும் செந்தமிழால்
N 18280	அந்த நாள் யாரோ வந்தென்னை

'HIS MASTERS VOICE'

SAMUEL

எல்லா அத்தாட்சி பெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்,

டம்டம், பம்பாய், மதராஸ், டெல்லி, லாகூர்

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ. 25

வசந்தா மில்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்

மானேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்

1934-௵ கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்கமெடல் நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 60 நெ. வரை, ஒத்தை, முருக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லாவித்மான ஜவுளி ரகங்களும், மல், ஷர்ட்டிங், லாங்கிளாத், கதர் வேஷ்டிகள் டவல், முதலியன தயாரிக்கிறோம்.

எங்களுடைய "வி" 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்!

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்!

பருத்தி காய்த்த புடவை!

★

பருத்தி புடவையாகக் காய்ப்பதில்லை. நூலாகவும் நூற்பதில்லை. பருத்தி தரும் பஞ்சை ஆலையிலிட்டுக் கொட்டை நீக்கி, நூலாக்கி, சாயம் ஏற்றி, கைத்தறி களிலும் மில் தறிகளிலும் துணிகளாக நெய்து அழகு பெற நமது கண்ணாடி அலமாரிகளில் அடுக்கி உங்களை "வாங்கோ, வாங்குங்கோ" என்று உபசரித்து உங்களுக்குத் தேவையானவை களைக் கொடுத்து திருப்தி செய்வதே வியாபாரம்

இவை யெல்லாம் யுத்தத்தால் ஏற்பட்ட கஷ்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. நமக்கு வேண்டியவை எல்லாம் கிடைப்பதில்லை. எனினும், தேவைக்கும் அதற்கு மேலும் இஷ்டம்போல் வாங்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை—
அதுவரையும்

பொறுத்துக் கொள்ளுங்கள்!

☆

ஜெனரல் சுதேசிஸ் லிமிடெட்

எஸ்பிளனேட் :: சென்னை

சுதேசி எக்ஸிபிஷனுக்குப் போனால் நமது ஸ்டாலுக்கு விஜயம் செய்யுங்கள்.

எல்லாவிதமான

இன்ஷ்யூரன்ஸ்களுக்கும்

ஆல் இந்தியா
ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி
லிமிடெட்

தலைமை ஆபீஸ்: **பம்பாய்**

☆

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 31,25,000

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் முதலிய
பலவிதமான இன்ஷ்யூரன்ஸ்களும் செய்யப்படுகின்றன.

☆

சென்னைக் கிளை நிலையம்

118, திருச்சி ரோடு, :: **கோயமுத்தூர்.**

சென்னை ஆபீஸ்: 308-309, லிங்க செட்டி தெரு

கிளை மானேஜர்:

P. V. K. ஷன்முகம்

S. R. B. M

கியாதி பெற்ற ஜவுளிக்கடை

கலியாணகால விசேஷங்களுக்கு ரம்மியமான ரகங்கள், நேர்த்தியான பார்டர்கள், புதுதினுசு முகதலைகள், அழகு நிறைந்த கலர்களில் கண்ணைக் கவரும் பனாரஸ், கொள்ளேகால் சேலைகளும், தாவணிகளும், பாவாடைகளும், வேஷ்டிகளும், துப்பட்டாக்களும், இதர ஜவுளி தினுசுகளும் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டு குவிந்துள்ளன. நேரில் பாருங்கள்

S. R. B. முத்துகிருஷ்ண அய்யர்

(பழைய விலாசம்: S. R. பாலுசாமி அய்யர் & சன்ஸ்)

111, நயினியப்பநாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.
போன்: 2314. Tel. "BALMO"

235, கீழமாரெட் வீதி,
மதுரை.
Tel. "MUTHUCO"

VISIT FOR STYLISH SAREES

N. C. B.

CORNER SHOP

Specialist in BENARES, BANGALORE AND KOLLEGAL SILK SAREES

N. C.
Baluswamy Iyer
& SON

Madura and Benares Cloth Merchants
84, Nainiappa Naick St.,
P. T., MADRAS
PHONE: 4345

Latest Leading Merchant
IN
MADRAS

N. C. M. R.

For all kinds of
SAREES & SILKS

Please pay a visit to

N. C. M. RAMALINGA IYER
SRI LAKSHMI SILK HOUSE
Nyniappa Naick Street, P. T., MADRAS

கண்ணைப்பறிக்கும் புடவைகள்

கரைக்குப் பொருத்தமாக சரியான கலர், அழகான டிசைன், ரம்மியமான பாட்டர்ன், சினிமாவின் மூலமும் இப்பொழுது புடவைகள் பெயர்பெற்றிருக்கின்றன. ஆனால் தியாகபூமி, மங்கம்மா, சிவகவி, அபரஞ்சி புடவைகள் வாங்கும்பொழுது அந்தந்த படங்களில் நடித்த நடிகைகளின் கீர்த்திக்கு, மதராஸ் கைத்தறி நெசவாளரின் திறமைதான் காரணமென்று உங்களுக்குத் தெரிந்திருக்காது.

மதராஸ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் நவநாகரிக புடவைகள் தயாரிப்பதில் மேற்சொன்ன முறையைத்தான் தினந்தோறும் கையாண்டு வருகிறது. அழகு, உபயோகம், நாள்பட்ட உழைப்பினால், மில் புடவைகளைவிட இவைகள் மிகவும் சிறந்தவை.

கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான்.

வேஷ்டிகள், புடவைகள், சட்டைகள், டவல்கள், பிரின்ட்ஸ் சிங்கம்ஸ், சின்ட்ஸ், வீடு அலங்கரிக்க துணிகள், மேஜைத் துணிகள், படுக்கை விரிப்புகள், கைக்குட்டைகள், லுங்கிகள், அங்கவஸ்திரங்கள், கொசு வலைகள், கவில்ட்ஸ், தலையணிகள்.

6-A, உட்ஸ் ரோடு, மவுண்டு ரோடு, மதராஸ்.

T.R. கழுகு மார்க்

No. 1, பட்டணம் பொடி

★

காரம், மணம்,
குணத்திலும் நிறத்திலும்
சிறந்தது

★

T. R. கிருஷ்ணா

பொடி கம்பெனி

★

வண்ணாரப்பேட்டை
மதராஸ்.

Phone: No. 3044

K. S. P. பாலகிருஷ்ணன் & கம்பெனி

38, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ். 1.

TRADE MARK

BALAKRISHNAN K.S. K.S.P. & Co. MADRAS

BEST PALAYAKAT

K. S. மார்க், பளயகாட் சாரம், கம்பாயம், ஷர்டிங், வாயல் தினுசுகள் எல்லா வகையிலும் சிறந்தவை.

பிராஞ்சுகள் & ஸ்டாக்கிஸ்டுகள் :

K. S. P. பாலகிருஷ்ணன் & Co.,
அம்மையப்பன் (தஞ்சாவூர் ஜில்லா)

K. S. P. பாலகிருஷ்ணன் & Co.,
12, ஏகாம்பரநாதர் சன்னதி (காஞ்சிபுரம்)

K. S. P. பாலகிருஷ்ணன் & Co.,
134, இரண்டாங்குறுக்கு தெரு (கொளும்பு)

தி சௌத் இந்தியா பளயகாட் Co.,
2, மால்வடம்போக்கி தெரு

தி சௌத் இந்தியா லுங்கி Co.,
116, காங்கிரஸ் மன்றம் ரோடு (குடியாத்தம்)

தி சரஸ்வதி ஜவுளி ஸ்டோர்ஸ் (லிமிட்.)
எல்லையம்மன் சன்னதி விஜயபுரம்போஸ்ட்டு
திருவாரூர்

CHEVROLET

THE PRE-WAR LEADER IN SALES

THE POST-WAR LEADER IN VALUE

CHEVROLET

All the outstanding qualities that made Chevrolet foremost in popular favour in prewar years, and all the features of construction and design that made it first in value, are to be found in the new 1946 Chevrolet. Here is a car you can trust because it is built to the same high engineering and manufacturing standards as it was before the war, of materials as high, or even higher, in quality.



Distributors :

SUNDARAMS MOTORS LTD.,
Mount Road, Madras.

T. V. SUNDARAM IYENGAR & Sons Ltd.
Madura, Trichinopoly, Tirunelveli,
Pudukottai.

A PRODUCT OF GENERAL MOTORS

பண்ணும் பாடலும்

மு. வரதராசன், B. O. L., M. O. L

இலக்கியம் கற்பதற்குத் துணையாக இலக்கணம் கற்க வேண்டும். இலக்கணம் கற்ருல் இலக்கியக் கல்வி சிறப்படையும். இதில் யாருக்கும் ஐயம் இல்லை; கருத்து வேறுபாடும் இல்லை. ஆனல் சிலர் இலக்கணம், இலக்கணம் என்று இலக்கணத்திற்கே முதல் இடம் கொடுக்கிருர்கள்; புறநானூற்றிலோ அகநானூற்றிலோ உள்ள எந்தப் பாட்டைப் படித்தாலும் அதிலுள்ள வீரத்தையோ காதலையோ மறந்து விடுகின்ருர்கள்; செயவெனெச்சம், செய்தெனெச்சம் என்று இலக்கணத்தை மட்டுமே போற்றுகின்ருர்கள்; இன்னும் சிலர் ஒருபடி கீழே இறங்கிச் சென்று, இலக்கண உதாரணங்கள் கிடைக்கும் என்று நாடி அந்த அருமைப்பாட்டுக்களைத் தேடிக் காலம் கழிப்பதும் உண்டு. அவர்களுடைய வாழ்க்கையில், தலைக்காகக் குடை வேண்டும் என்பது போய், குடைக்காகத் தலை வேண்டும் என்று ஆகிவிட்டது.

தருக்கமும் இலக்கணம் போல் ஒரு கருவி நூல். பேசும் பேச்சிலும் எழுதும் எழுத்திலும் கருத்துக்களைத் துணிந்து அறிவதற்குத் தருக்கம் பயன்படும். ஆனல், வாழ்க்கைக்கு முதல்இடம் தாராமல் தருக்கத்திற்கு முதல்இடம் கொடுத்த கலைஞன் கதை ஒன்று நாட்டில் வழங்குகின்றது. அவன் அறியாமையும் அந்தக் கதையில் விளங்குகின்றது. தொன்னைக்கு நெய் ஆதாரமா? நெய்க்குத் தொன்னை ஆதாரமா? என்று ஆராய்ச்சி செய்யப்போய், கையைக் கவிழ்த்து நெய்யை இழந்து தொன்னையைக் காப்பாற்றின அறியாமையைக் கண்டு இரங்குவதா? எள்ளுவதா? சிலர் அவனைப் போல் கேட்கும்பேச்சு எதுவாயினும் படிக்கும் எழுத்து எதுவாயினும் அதில் தருக்க ஆராய்ச்சி செய்கின்ருர்கள்; அந்தப் பித்து மெல்ல மெல்ல முற்றி, யார் என்ன கூறினும், என்ன எழுதினும் அவற்றில் குற்றம் காண்பதே கடமையாக் கொள்கிருர்கள். படிப்படியாக இவர் போய்ச்சேரும் எல்லை இதுதான்: கருத்துக்களை மறந்து விடுவார்கள்; சொற்களையும் சொற் பொருள்களையும் பற்றிக்கொண்டு குற்றங்கூறித் திரிவார்கள். இவர்கள், கருத்துக்கு முதல்இடம் கொடுக்கத் தவறினவர்கள்; தருக்க நூலுக்குச் சிறப்புக் கொடுத்து மயங்கினவர்கள்.

உணவு உண்பது உயிர்வாழ்க்கை நடத்துவதற்காகவே; இதில் எவருக்கும் கருத்துவேறுபாடு இல்லை. ஆனல், ஒருவரிடம் நெருங்கி, "நீங்கள் ஏன் உயிரோடு வாழ்கின்றீர்கள்?" என்று கேட்டபோது, "இன்னும் கொஞ்சகாலம் வாயார உண்பதற்காகத்தான்" என்று அவர் உரைத்தால், அவருடைய மாற்றம் எப்படி இருக்கும்? அவரைக் கண்டு இரங்குவதா? எள்ளுவதா? ஆயினும், சிலருடைய வாழ்க்கை இவ்வாறு தான் அமைந்திருக்கின்றது. உணவுத்துறையில் இல்லாமல் இருக்கலாம்; வேறு துறையில் அமைந்திருக்கும். இலக்கியத்தைப் புறக்கணித்து இலக்கணத்தைப் போற்றுகின்றவர்களும், கருத்தை மறந்துவிட்டுத் தருக்கத்தை நினைக்கின்றவர்களும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே; "வாயார உண்பதற்கே உயிரோடு வாழ்கிறேன்" என்று சொல்லும் வயிற்றப்பனுக்கு இவர்கள் நெருங்கிய உறவினர்களே.

இளம்பிள்ளைகள் சிலர் கண்ணுக்காகவே கண்ணடி என்பதை மறந்துவிட்டு, அழகாக கண்ணடி வேண்டும் என்று ஆசைப்பட்டு அணிந்து கொண்டு, அதனல்

கண்ணைக் கெடுத்துக் கொள்ளுவதும் உண்டு. இவர்களுடைய வாழ்க்கையில் "கண்ணாடிக்காகவே கண்" என்பது வாய்மொழி ஆகின்றது. இதன் பயனைக் கண்ணைக் கெடுத்துக் கொள்ளுகின்றோமே என்பதை இவர்கள் உணர்வதில்லை; உணர்த்தினாலும் கேட்பதில்லை.

கண் எல்லோருக்கும் இயல்பாக அமைந்திருப்பது போலவே, பாட்டுணர்ச்சியும் எல்லோருக்கும் இயல்பாக அமைந்திருக்கின்றது. எல்லோருக்கும் இசைப்புலமை இருக்க முடியாது; ஆனால் எல்லோருக்கும் இசை வேட்கை இருக்கின்றது. சிலர் பாடுவதில் வல்லவர்களாக இருக்கலாம்; சிலர் பாட முயல்பவர்களாக இருக்கலாம்; சிலர் பிறர் காணாத இடத்தில் பிறர் செவிக்கு எட்டாத நிலையில் தமக்குத் தாமே மெல்லப் பாடிக் கொள்பவராக இருக்கலாம்; சிலர் சிறிதும் பாடத் தெரியாதவர்களாய் இருந்தாலும், பிறர் பாடும்போது கேட்கும் விருப்பம் உடையவர்களாக இருக்கலாம்; மிகச் சிலர், பாடவும் தெரியாமல், பாட்டைக் கேட்கவும் விரும்பாமல் பாட்டுணர்ச்சியே அற்றவர்களாய் இருக்கலாம். அவர்களை ஆங்கில நாட்டுப் புலவர் ஷேக்ஸ்பியர் 'மக்கட் பண்பு அற்ற கொடியவர்கள்' என்று ஒதுக்கி வைக்கின்றார். அப்படிப்பட்டவர்கள் மிகமிகச் சிலர் என்றே எண்ண வேண்டும்.

ஆகையால், பார்வையுணர்ச்சி எல்லோருக்கும் பொதுவாக இருப்பது போலவே, பாட்டுணர்ச்சியும் எல்லோருக்கும் பொதுவானது. பிறவிக் குருடர் ஒருசிலர் இருப்பது போலவே, பாட்டுணர்ச்சி அற்றவரும் சிற்சிலர் இருக்கின்றனர். ஆனால், இரங்கத்தக்கது இன்னொருவகை உண்டு. பிறக்கும்போது பார்வை யுணர்ச்சியோடு பிறந்தும் வாழ்க்கையில் கண்ணைக் கெடுத்துக்கொண்டு குருடர் ஆனவர்களை நினைத்தால் இரக்கம் தோன்றாதா? அது போலவே, இயல்பாகப் பாட்டுணர்ச்சிபெற்றுப் பிறந்து வளர்ந்தபோதிலும், இசை கற்கும் முறையில் தவறு செய்து பாட்டுணர்ச்சி கெட்டுப்போகின்றவர்களும் இரங்கத் தக்கவர்களே.

அவர்கள் யார்? ஐந்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட பல ஆண்டுகளாய்ச் சிறந்த இசையாசிரியரிடம் இசை கற்றுக் கொள்ளவேண்டும் என்று தம் மக்களுக்கு ஏற்பாடு செய்கின்றார்கள் பெற்றோர்கள். செல்வமும் செல்வாக்கும் பெற்ற குடும்பங்களில் பெண்மக்கள் இசைகற்றுக் கொள்ளவேண்டும் என்று பெற்றோர் தவறாமல் முயற்சி செய்கின்றார்கள். அந்த இளம் பெண்களும் ஆர்வத்தோடு கற்க முயல்கின்றார்கள்; பல ஆண்டுகள் கற்று முடிக்கின்றார்கள்; ஆனால் இசைக்கல்வி முடியவில்லை; தொடங்கவே இல்லை என்றும் கூறலாம்; இசைக்கல்வி கற்கப்படுவதற்கு மாறாக, இசைக்கல்வி கொல்லப்பட்டது என்றும் கூறலாம். ஏன்?

அந்த இளம்பெண்கள் பல ஆண்டுகள் கற்றது என்ன? பண் வகைகள் (ராகபேதங்கள்), பொருள் விளங்காத தெலுங்குப் பாடல்கள் ஆகிய இந்தக் கல்வியே அவர்கள் கற்ற கல்வி. அவர்களே தங்கள் குறையை உணர்கின்றார்கள். சினிமா பார்த்துவிட்டுத் தெருவழியே தன்னை மறந்து பாடிக் கொண்டு செல்லும் இளைஞனுடைய இனிய குரலையும், தியாகராஜபாகவதர் பாட்டையும் பாட்டோடு இயைந்த பண்ணையும் கேட்டு, "நம்மால் அவ்வாறு பாட முடியவில்லையே' என்று நாணுகின்றார்கள்.

இவ்வளவும் பழங்கதை என்று சொல்லலாம். இசைத்தட்டும், வானொலியும் (கிராமபோனும், ரேடியோவும்) வீடுகளில் நுழைந்த பிறகு, இளம்பெண்கள் இசையாசிரியரிடம் கற்றுத் தெரிந்துகொள்வது குறைவு. தாங்களே இசைத்தட்டாலும் வானொலியாலும் கேட்டுத் தெரிந்து கொள்வது மிகுதியாகி விட்டது. ஆனாலும், இன்னும் சில குடும்பங்களில், பண்களையும், பொருள் தெரியாப் பாடல்களையும் இளம்பெண்களின் தலையில் சுமத்தி வற்புறுத்தும்நிலை இருக்கின்

றது. அவர்கள் பாட்டுணர்ச்சி கெட்டு, இசைக்குருடர் ஆகாமல் இருப்பதற்குக் காரணம் இசைத்தட்டும் வானொலியுமே ஆகும். ஏன்? அவற்றால் பாட்டுணர்ச்சி குன்றாமல் வளர்கின்றார்கள்.

இசைக்குருடர் ஆகாமல் இளம்பெண்கள் தப்பவேண்டுமானால், பாட்டுணர்ச்சி கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பொருள் விளங்காத பிறமொழிப் பாடல்களை நெட்டுருப்போட்டுக் கற்கும் மூடவழக்கம் தொலைய வேண்டும். பொருள் விளங்கும் தமிழ் மொழிப் பாடல்களையே பாட வேண்டும். பாட்டின் பொருள் விளங்கினால் தான், அந்தப் பாட்டின் உணர்ச்சி வாழும். அந்த உணர்ச்சியின் ஒலி வடிவமே பண் (ராகம்) என்பது. அந்தப் பண் இயல்பாக அமையும்; இதுதான் முறையான இசைக் கல்வி. இந்த முறையான கல்வியில் பாட்டு முதல்இடம் பெறுகின்றது; பண், அதற்குக் கருவியாக—துணையாக நிற்கின்றது.

பொருள் தெரியாத பிறமொழிப் பாடல்களைப் பாடும்போது, நெட்டுருவான பாட்டுக்களை வாய் சொல்கின்றது (பாடவில்லை). ஆசிரியர் கற்றுக்கொடுத்த பண் (ராகம்) ஒன்று மட்டும் நோக்கமாகக் கொண்டு, அந்தச் சொற்களை நீட்டியும் குறுக்கியும் ஒலிக்கவேண்டி நேர்கின்றது. பாட்டுணர்ச்சி என்பது அங்கு வாழ்வதில்லை. பண் தலைஎடுத்து முதல் இடம் பெற, பாட்டு என்பது பின்னால் அடிமையாய் நகர்ந்து வருகின்றது. இதுதான் தலைகீழ் முறை. இலக்கணத்துக்காகப் புறநானூறு கற்பது, தருக்கத்துக்காகப் பிறர் பேச்சைக் கேட்பது, குடைக்காகத் தலையை அடக்குவது, கண்ணாடிக்காகக் கண்ணை மாற்றுவது உண்பதற்காக உயிர் வாழ்வது—எல்லாம் ஒரே வகையான வாழ்க்கை.

இப்போது கேட்கலாம்: பாட்டுக்காகப் பண் வேண்டுமா? பண்ணுக்காகப் பாட்டு வேண்டுமா?

இந்தக் கேள்விக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே விடைகூறி விட்டார் திருவள்ளுவர். பாடலுக்காகவே பண்; இதுவே அவர் கூறிய விடை. "பாடலோடு பொருந்தாத பண் என்ன பயன்?" என்பதே அவர் விடையாகக் கேட்ட கேள்வி.

"பண் என்னும் பாடற்(கு) இயைபின்றேல்" என்பதே அந்த மறைமொழி.

திருவள்ளுவர் காலம் சங்ககாலத்தின் பிற்பகுதி. அந்தக் காலத்து மக்கள் பாட்டுணர்ச்சியையே பலவகைப் பண்களாகக் கண்டு வகுத்தனர். குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன அக்காலத்தினர் வகுத்த ஏழிசைகள். இந்த ஏழிசை வேறுபாட்டை அவர்கள் நன்றாக உணர்ந்திருந்தனர். வறண்ட காட்டு வழியாகப்போகும் மக்கள் சிலர் ஓர் யாமரத்தின் மேல்கிளையிலிருந்து பருந்து விளிக்கும் குரல் கேட்டனராம். அந்தப் பருந்து தன் துணையை அழைத்த குரல் அது. அந்தக் குரலைக் கேட்டவுடன், வழியில் போய்க்கொண்டிருந்த அவர்கள் அதன் இசை இன்னதென ஆராயத் தொடங்கி விட்டார்கள். அந்த அழைப்புக்குரல் இளி என்னும் இசையாக அவர்களின் செவிக்கு இசைத்ததாம்.

> சுவைமுறி இழந்த செந்நிலை யாஅத்து
> ஒன்றேங்கு உயர்சினை இருந்த வன்பறை
> விளைப் பருந்தின் கோள்வல் சேவல்
> வளைவாய்ப் பேடை வருதிறம் பயிரும்
> இளிதேர் தீங்குரல் இசைக்கும் அத்தம்
>
> —அகநானூறு.33

என்ற பழம்பாட்டு இந்தக் கருத்தைத் தெளிவிக்கின்றது. காட்டுவழியில் செல்லும் மக்கள் அங்கே கேட்ட பருந்தின் அழைப்பொலியை இன்னவகையான இசை என்று ஆராயும்படியான அவ்வளவு முன்னேற்றம் அந்தக் காலத்தில் இருந்தது. இசைத்துறையில் அவ்வளவு தேர்ச்சி இருந்த அக்காலத்திலும், பண், கருவியாகவே கையாளப்பட்டு வந்

தது; பண், பாடலுக்காகவே என்ற கொள்கை நிலவியிருந்தது.

குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என நிலங்களைப் பாகுபாடு செய்து, திணை என வகுத்து, திணைக்கு ஒருவகை யாழாக யாழையும் வகைப்படுத்தியிருந்தனர் அக் காலத்து இசைப்புலவர். குறிஞ்சியாழ், முல்லையாழ், பாலையாழ். என யாழும் அவ் வகையாகப் பெயர்பெற்று விளங்கியது. அந்தந்த நிலங்களுக்கும் பொழுதுகளுக்கும் ஏற்றவாறு வேறு வேறாகப் பண் வகுத்துப் பாடும்முறையும் இருந்து வந்தது. எடுத்துக் காட்டாக, முல்லை நிலத்தில் கார்காலத்தில் மாலைப்பொழுதில் பாடும் பண் 'செவ்வழிப் பண்' என்று கூறப்படும். இவ்வாறே நிலம் காலம் பொழுது என்பவற்றிற் கேற்ப வெவ் வேறு பண்வகை பாடப்பட்டிருந்த சிறந்த முறை வாழ்ந்து வந்த அப்பழங்காலத்தில், 'பாடலுக்காகவே பண்' என்ற உயரிய நோக்கம் கைவிடப்படவில்லை. அதனால் தான் அக்காலத்தில் இசை தலைசிறந்து விளங்கி யிருந்தது. மீண்டும் தலைசிறந்து வாழத் தொடங்கி விட்டது. அதற்கு அறிகுறி என்ன? பாடல் வாழ, அதற்காகப் பண் வாழும் முறை வளம்பெற்று வருகின்றது அன்றோ?

தமிழிசை தத்துவம்

"தியாகையர் ஏன் தெலுங்கில் பாடினார்? தெலுங்கு நல்லதென்று அதில் அவர் பாடவில்லை. தெலுங்கு தாய்பாஷையானதால் அவர் அதில் பாடினார். நாமும் தம் தாய்பாஷையில் பாடினால்தான் நம் ஆத்மாவுக்கும் திருப்தி கிடைக்கும்; கடவுளுக்கும் காது கேட்கும். யாராவது ஒருவர் இப்பொழுது காதலில் விழுந்தோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான்தான் காதலில் விழுந்தேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். வயது 80 என்று வைத்துக்கொள்ளுங்கள். காதல் கடிதம் எழுத வேண்டுமென்றால் நான் நல்ல இங்கிலீஷ் தெரிந்த ஒரு ஆளிடம் போய் நீ இங்கிலீஷ் லவ்-லெட்டர் ஒன்று எழுதிக்கொடு; நான் என்காதலிக்கு அனுப்ப வேண்டும். என்னால் எழுத முடியாது. நீ எழுதித் தா. அதை நான் அனுப்பி காதலை வளர்த்து ஜயிக்க வேண்டும் என்றால், அது முடியாது. இங்கிலீஷ் லவ்-லெட்டர் வாங்கி நான் அனுப்பினால் எவ்வளவு சிரிப்பா யிருக்கும்? இராமனுக்கு அல்லது கிருஷ்ணனுக்கு நான் லவ்-லெட்டர் அனுப்ப வேண்டுமானால் என் தாய்பாஷையில் எனக்குத் தோன்றிய முறையில் எழுதி, என் அன்புக்குத்தோன்றியபடி நான் பாட வேண்டுமே தவிர, இதற்காக மிக நல்ல சங்கீதம் என்று எடுத்து அதை நான் பாடினால் என்ன உணர்ச்சி எனக்கு உண்டாகும்? எனக்கு உண்டாகாவிட்டால் கடவுளுக்கும் உண்டாகாது. நிச்சயம் இதுதான் இந்த இயக்கத்தின் தத்துவம்."

—தமிழிசை முதல் மாநாட்டில் ராஜாஜி.

தமிழில் ஆளத்தி செய்தல்

டாக்டர் ஆ. அ. வரகுண பாண்டியன்

நடைமுறையில் இராகம், சாஹித்யம் என வடமொழியில் நாம் கூறுவதை, நம்முந்தையோர் முறையே பண், பா எனக் கூறிப் போந்தனர். பண்ணும், பாவும் அதாவது இராகமும், சாஹித்யமும் ஒருங்கே இணைக்கப்பட்டது பாண் எனப்படும். பாண் என்றது இசைப்பாட்டு எனவும் கூறப்படும். ஓர் இசைப்பாட்டிற்குரிய இசையைத் தற்காலம் "வர்ண மெட்டு" என நாம் வழங்குகிறோம். நம் மூத்தோர் இதனைப் "பண்ணமைப்பு" என வழங்கினர். ஓர் இராகத்தினை அதன் இலக்ஷணம் குன்றாது, யாதொரு சாகித்யமுமின்றி இசைப்பதை, "ஆலாபனம்" எனத் தற்காலம் வழங்குகிறோம். இதனை நம் பண்டையோர் "ஆளத்தி" என்றனர். இவ்வாறு ஆளத்தி எனப்படும் ஆலாபனத்திற்குப் பாஷை உண்டா என்பதே இப்பொழுது நாம் எடுத்துக்கொண்ட பொருள். ஆதலின், நம் பழக்கத்தில் ஆளத்தி ஏதாமொரு எழுத்தோடே நிகழ்த்தப்படுகிறதா வென்றும், அப்படி அது எழுத்தோடு கூடியிருப்பின், அது எவ்வெம்மொழிகளில் நிகழ்த்தப்படுகிறது என்றும் நாம் முதலில் ஆராய்ந்து, அதன்பின் நம் முன்னையோர் இசையுணர்ந்தியற்றிய பண்டைய நூல்களில் இதற்கெனக் கூறியுள்ள விதிவிலக்குகளையும் பார்ப்போம்.

அறிஞர்களே, இசையரங்குகளில் இசைப்புலவர்கள் ஏதாமொரு இராகத்தை எடுத்துக்கொண்டு ஆலாபனம் என்ற ஆளத்தி நிகழ்த்துவதை நாம் யாவரும் கேட்டிருப்போம். அச்சமயங்களில் நாம் கவனித்திருந்தால், சிலர்
{ ம் - ம் - நரந - ந
ச - ச - மாக - ரிச }
என த, ந, ம என்ற எழுத்துக்களையும், வேறு சிலர் ரகாரத்தையும் சேர்த்துக்கொண்டு
{ த - ர - ந - த - நம்
க - ம - ப - க - ம }
என த, ர, ந, ம் என்ற எழுத்துகளையும், மற்றும் சிலர்
{ யாம் - யாம் - யாந - தோம்
க - க - மாக - ரிச }
என ய, த, ந, ம் என்ற எழுத்துக்களையும் சொல்லிக்கொண்டு ஆளத்தி நிகழ்த்துவதைக் கேட்டிருக்கலாம். வடநாட்டிசையாளர்
{ ஹம் - ஹம் - ஹம் - ஹ
க - க - மாக - ரிச }
என "ஹ" என்ற வடமொழி எழுத்தையே பெரும்பாலும் சொல்லிக்கொண்டு ஆளத்தி நிகழ்த்துவதையும் கவனித்திருப்போம். மேலை நாட்டினர், பாவற்ற இசையை 'எயர்' (Air) என்பர். இதனை ஆங்கிலர் இசைக்கும்போது
{ ல - லா - ல - லா - ல - லா - ல - லா
ச - கா - ம - கா - ரி - சா - நி - சா }
என லகரத்தையும், ஜெர்மானியர்
{ ற்ற-ற்ரு-ற்ற-ற்ரு-ற்ற-ற்ரு-ற்ற-ற்ரு
ச - கா - ம - கா - ரி - சா - நி - சா }
என வல்லின றகரத்தையும் சொல்லிக்கொண்டு பாடுவதையும் நாம் கேட்டிருப்போம். இவ்வாறே பிறவும் பலவாகக் காண்போம். ஈண்டு நாம் கவனிக்கத்தக்கன இரு பொருள்கள் உள்ளன. ஒன்று, ஆளத்தி என்பது எந்நாட்டினரால் செய்யப்பட்ட போதிலும் அது ஓர் எழுத்தைச் சார்ந்தே நிகழ்த்தப்படுவதைக் காண்கிறோம். ஆதலின் ஆளத்திக்கு எழுத்துக்கள் உண்டு என ஐயமற அறிகிறோம்.

இனி இரண்டாம் பொருளைக் கவனிப்போம். மேலே நாம் பார்த்தபடி, பல நாட்டினரும் பலவித எழுத்துக்களைச் சொல்லிக்கொண்டு ஆளத்தி செய்வதை நாம் கவனித்தால், ஒவ்வொரு நாட்டினருக்கு உரிய தாய்மொழிக்குத் தக்கவாறு வெவ்வேறு எழுத்து

களை அவர்கள் சொல்லிக்கொண்டு ஆளத்தி செய்வதையும் காண்போம். அதாவது ஓர் வட நாட்டிசையாளன், தமிழ் நாட்டினரைப் போல் த, ந, ம் என்ற எழுத்துக்களையாவது, அல்லது மேநாட்டினரைப்போல் லகர, றகரங்களையாவது சொல்லிக்கொண்டு ஆளத்தி செய்யாது, "ஹ" என்ற எழுத்தையே பெரும்பாலும் கையாளுவதைக் கேட்போம். இஃதேபோல் ஓர் ஆங்கில இசையாளனும், "தநநதோம்" என்றாவது 'ஹம்' என்றாவது சொல்லாது, "லல், ல, லா" என்று லகரத்தையே பெரும்பாலும் சொல்வதைக் கேட்போம். மேலும் அவர்களின் இசை இலக்கணங்களிலுள்ள பாவற்ற இசைகளை லகரத்தாலேயே இசைப்பதையும், அவர் தம் மக்களைத் தாலாட்டும் போது பாடப்படும் பாவற்ற பண்ணமைப்புகளான "லலபி" (Lullabys) என்பவற்றை, லகரத்தாலேயே அவர்கள் இசைப்பதையும் நாம் காண்கிறோம். இவ்வாறே ஒரு தமிழ் நாட்டிசையோன் பிற நாட்டினரைப் போல் "லல்லலா" என்றாவது, "ஹம்" என்றாவது சொல்லிக்கொண்டு ஆளத்தியினை நிகழ்த்தாது, த, ந, ம் என்ற எழுத்துக்களையே சொல்லிக்கொண்டு ஆளத்தி செய்வதைக் காண்போம். மேலும், "தாநம்" என்ற ஆளத்தி முறையிலும், "தந் நாந" பாடி கைகொட்டும் கும்மி முறையிலும், நம் தமிழ் மக்கள் த, ந, ம் என்ற எழுத்துகளையே சொல்வதை இன்றும் கேட்போம். இவைகளால் நாம் அறிந்து கொள்வது என்னெனின், பா அற்ற இசையாகிய ஆளத்தியென்பது, எல்லா நாட்டினருக்கும் பொதுவாக இருந்தபோதிலும், அது நிகழ்த்தப்படும் போது எந்நாட்டினரால் நிகழ்த்தப்படுகிறதோ அந்நாட்டினரின் தாய் மொழியையே பற்றிநிற்கும் என்பதே யாகும். ஆகவே, ஆளத்திக்கு எழுத்துக்கள் உண்டென்றும், அவ்வெழுத்துகளால் அது பாஷை வேறுபாட்டை அடைகிறதென்றும் ஆன இரு பொருள்களை ஐயமறக் காண்கிறோம்.

நம்மில் சிலர் "ஆளத்தி செய்வதற்கு இவ்வாறு பல மொழிகளிருப்பதாகக் கூறுவது பொருந்தாது. என் எனின் ஆளத்தி செய்வோர், தாங்கள் பாடிக்கொண்டே—சொல்வதற்கு இலகுவாயும், வசதியாயுமிருப்பதற்கு எவ்வெழுத்துக்கள் அவர்கள் மனதிற்குப்பிடித்திருக்குமோ அவைகளே ஆளத்திக்கு எழுத்துகளாய் அமையுமே ஒழிய, இதற்கெனத் தனித்து, குறிப்பிட்ட எழுத்துக்களும் கிடையா; இதற்கென ஓர் இசையிலக்கண விதியும் இல்லை; மேலும் இது ஓர் பிரமாதமான காரியமுமல்ல" என்பர். ஆம்; அவர்கள் கூற்று ஒருவாறு சரியே. என்றாலும், "பாடுவோரின் தாய் மொழிக்கேற்பச் சில எழுத்துக்களேனும் ஆளத்திக்கு அமைகின்றன" எனும் ஓர் உண்மையையாவது அவர்கள் மறுக்க முடியாதல்லவா? மேலும், ஆளத்திக்கு இன்னின்ன எழுத்துகள் தாம் வரப்பெறும்; இன்னின்னவை நீக்கப் பெறும் என்ற திட்ட வட்டமான விதிவிலக்குகள் நம் தமிழ்மொழி தவிர்த்த பிறமொழிகளின் இசை இலக்கணங்களில் கூறப்பட்டிருப்பதாக நமக்கிதுவரை யாதொரு ஆதாரமும் கிடைத்தில. தஞ்சை அரண்மனையிலுள்ள "சரஸ்வதிமால்" என்ற சுவடி நிலையத்தில் இசையைப்பற்றிக் கூறும் அனேக வடமொழிச் சுவடிகளும், தெலுங்குச் சுவடிகளும் இருக்கின்றன. அவைகளில் தானம் பாடுவதற்கு உதவியான "தான நிகண்டு" என்பதோர் நூலும், நட்டுவாங்கத்திற்குச் சொல்லப்படும் சொற்கட்டுக்கு உதவியான "த தித் தோம் நம்" என்றோர் நூலும் இருக்கின்றன. இவைகளில் ஒன்று தெலுங்கு லிபியில் எழுதப்பட்ட வடமொழி நூலாகும்; மற்றொன்று கிரந்த லிபியில் எழுதப்பட்ட தெலுங்கு நூலாகும். தானம் என்ற ஆளத்தி முறைக்கு உதவியாயுள்ள நூல்களில் இவ்விரு நூல்களே முதன்மை பெறும் என்று பல ஆன்றோராலும் கருதப்படுகின்றது. என்றாலும், இவைகளிற் கூட ஆளத்திக்கு இன்னின்ன எழுத்துக்கள் தாம் வரவேண்டும் என்றோர் விதியேனும்

கூறப்பட வில்லை. ஆயினும் நம்முன்னையோர் தம் மக்கட்கு இழிசொல் ஏற்படாதிருக்கக் கருதியோ, அல்லது பருப்பொருளையும் விழுப் பொருளெனக் கருதியோ, பிறமொழியாள ரால் அற்பமெனக் கருதப்படும் இதற்கும் விதிவிலக்குகளைத் திட்ட வட்டமாய்க் கூறும் "கலைவிதிப் பாக்களை" (சூத்திரங்களை) அமைத்துள்ளார்கள். அவற்றை ஆராய் வாம். சிலப்பதிகாரம், அரங்கேற்றுக் காதை, செய்யுள்வரி 26-க்கு, இற்றைக்குச் சற்று ஏறக்குறைய 800 ஆண்டுகட்கு முன் பிருந்த அடியார்க்கு நல்லார் கொடுத்துள்ள உரையையும், அதனுள் அவர் காலத்திற்கும் முற்பட்ட சில "கலை விதிப்பாக்களை" அவர் மேற்கோளாகக் காட்டியுள்ளவற்றையும் உள்ளது உள்ளபடியே இங்குப்பார்ப்போம்.

"இனி ஆளத்தி யாமாறுணர்த்துகின் றது :—

> 'மகரத்தி னெற்றாற் சுருதி விரவும்
> பகருங் குறினெடில் பாரித்து—நிகரிலாத்
> தென்னா தெனாவென்று பாடுவரே லாளத்தி
> மன்னாவிச் சொல்லின் வகை'

ஆளத்தி செய்யுமிடத்துத் தென்னாவென் றும், தெனா வென்றும், இரண்டையுங் கூட் டித் தென்னா தெனா வென்றும் பாடப்படும்.

....

> 'குன்றாக் குறிலைந்துங் கோடா நெடிலைந்து
> நின்றார்ந்த மங்கரந் தவ்வொடு—நன்றாக
> நீளத்தா லேழு நிதானத்தா னின்றியங்க
> ஆளத்தியா மென் றறி'

என்பது, ஆளத்திக்கு இன்னும் படுவதோ ரிலக்கணம் உணர்த்துகின்றது. குன்றாக் குறிலைந்துங்கோடா நெடிலைந்து மென்றது, குற்றெழுத்தாலும், நெட்டெழுத்தாலும் ஆளத்தி செய்யப்படும். குற்றெழுத்தாவன :- அ, இ, உ, எ, ஒ; நெட்டெழுத்தாவன :— ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என இவை. நின்றார்ந்த வென்றது, மெய்யெழுத்தாகிய "பதினெட் டெழுத்தினுள்ளும் மவ்வும், நவ்வும், தவ்வும் என மூன்றெழுத்து அல்லா மற்றை எழுத் துக்கள் ஆளத்திக்கு வரப்பெறா........"

இசையன்பர்களே, நாமிப்போது பார்த்த அடியார்க்கு நல்லார் உரையையும், அதனுள் அவர் காட்டியுள்ள இரு பழங் கலைவிதிப் பாக்களையும் நாம் ஊன்றி நோக்கின் ஆளத்திக்கு என்று உரிய ஐந்து மூல விதி களைக் காண்கிறோம். அவை வருவாறு :—

1. ஆளத்தி செய்வதற்கு எழுத்துக்கள் தேவை.

2. ஆளத்திக்குத் தகர, நகர, மகரம் என்ற மூன்று எழுத்துக்களே வரப்பெறும்.

3. ஆளத்திக்குத் தகர, நகர, மகரம் என்ற மூன்றினையும் தவிர்த்த மற்றப் பதி னைந்து மெய் யெழுத்துக்களும் வரப்பெறா.

4. ஆளத்திக்கு இம்மூன்று மெய்யெழுத் துக்களிலும் அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்ற பத்து உயிரெழுத்துக்களும் ஏற்றிப் பாடப்படும்.

5. ஆளத்தி செய்ய முதன்முதலில் சுரு தியை விரவிக் கொள்வதற்கு மகர வொற் றைப் பகர வேண்டும்.

இசையன்பர்களே ! இசையரங்குகளில் நாம் ஊன்றி நோக்கினால், இசையோன் ஓர் தம்பூரிலோ அல்லது ஓர் சுருதிப்பெட்டி யிலோ தன் மிடற்றிற் கேற்ற சுருதியை அமைத்துக் கொள்வதையும், அதன் பின் 'ம் என்ற எழுத்தைக்கொண்டு முதலில் அவன் தன்மிடற்றால் சுருதியை விரவிக் கொள்வதை யும், அதன்பின் தான் பாடுதற்கென எடுத் துக்கொண்ட பண்ணின் (இராகத்தின்)நீர்மை கெடாது (இலக்ஷணம் கெடாது) த, ந, ம என்ற நம் தமிழ்எழுத்துக்களையே சொல்லிக் கொண்டு ஆளத்தி நிகழ்த்துவதையும் காணும் போது இவையாவும் பண்டை இசைத்தமிழ் விதிப்படியே இன்றும் பெரும்பாலும் நிகழ் வதை அறிகிறோம்.

ஆனால் நம்மில் சிலர் "ஏன் த, ந, ம என்ற மூன்று எழுத்துக்களைப்போல்ய, ர, ல என்ற மூன்றினையும் நாம் ஆளத்திக்கு எடுத் தாளக்கூடாது? இன்றும் நம் தமிழகத்தில் சில இசைப்பெரும் பாணர்கள் ய, ர, ல க் களைச் சொல்லிக்கொண்டு ஆளத்திநிகழ்த்து

கின்றனரே. அதனால் யாதொரு குறையும் காணப்படவில்லையே !" என்பர். பெரியோர் களே, இப்பொருளையும் நம் அரும்மூத்தோர் ஏனோ தானோ வென விட்டு விடாது, இசை நிகழ்த்துவோரும் இசை கேட்போரும் இன் புற்று வாழ்வதற்கேற்ற விதமாய் இவ்வெழுத் துக்களும் அமையப் பெறுதல் வேண்டு மெனத் தீர ஆராய்ந்தே த, ந, ம என்ற அரிய எழுத்துகளைத் தெரிந்தமைத்தும், விதி களை வகுத்தும் உள்ளார்கள் என நாம் ஐய மறக் கொள்வதற்கு, 'வச்சணந்திமாலை' யி லுள்ள உணப்பொருத்தப் பகுதியின் செய் யுட்களும் அவற்றின் உரையும், அவ்வுரையி னுள் காணப்படும் சில பழஞ் சூத்திரங்களும் துணைசெய்யும். விரிவஞ்சி இங்கு அவைகளைக் கூறாது அவற்றின் பொருளை மாத்திரம் சுருங்கக் கூறுவாம். அதாவது அ, இ, உ, எ, க, ச, த, ந, ப, ம என்ற பதினொன்றும் அமுத எழுத்துக்களென்றும், இவை மொழிக்கு முதலிலும், தசாங்கத் தயலிலும் வரவேண்டுவன என்றும், ஆ, ஒ, ய, ர, ல என்ற ஐந்தும் இன்னுஞ் சிலவும் நச்செழுத் துக்களென்றும், அவை நஞ்சென நீக்கப் படுபவை என்றும் கூறியுள்ளனர்.

ஆதலின், நம் மூதாதையர் நம் தமிழ் எழுத்துக்கள் ஒவ்வொன்றின் நலம் பொலங் களை நன்கறிந்தே நச்செழுத்துக்களை முற்றும் நீக்கி, அமுத எழுத்துக்களாயுள்ள த, ந, ம என்பனவற்றை ஆளத்திக்கு அமைத்தன ரென அறிகிறோம். [இஃதேபோல் சுரமாகப் பாடுவதற்கென ஏழுகோவைகட்கும், ச, க, ம, ப, த, நி என்ற ஆறு அமுத எழுத்துக் களையும் ரீ என்ற ஓர் நச்செழுத்தையும் அமைத்துள்ளனர். இவ்வாறு ரீ என்ற நச் செழுத்தையும் அமைத்திருப்பதின் காரணத் தை, திருமந்திரம் எனக் கூறப்படும் ஐந்தெழுத்திலும் ய என்ற நச்செழுத்து அமைந்திருப்பதின் காரணத்தை யறிந் தோரே அறியக்கூடுமாதலின் நாம் இங்கு விடுவோம்.] மேலும், நம் முந்தையோர் விதித்துள்ள இசைத்தமிழ் நூல் வழக்குடன் வழுவாதொழுகி த, ந, ம என்ற எழுத்துக் களையே நாம் ஆளத்திக்குக் கையாண்டால் மாத்திரம், "தமிழில் நாம் ஆளத்தி நிகழ்த்து தல் கூடும்" என நாம் துணிபுற இட முண்டு. இல்லையேல், தெய்வஞ்சான்ற நம் தமிழிற்கும் நமக்கும் இழிவு ஏற்படும். ஆதலின் நம் இன்தமிழிற்கு எவ்விதப் பழி மொழியும் உண்டாகாது, அதனை நன்கு காக்க வேண்டுமாயின் நாம் வேறு எவ்வித வக்கர யுக்திகளையும் செய்யாது, நம் இசைத் தமிழ் நூல் வழக்குடன் இணைந்து ஒழுகியே தீரவேண்டும்.

நாடகத்தில் !

"நாடக மேடையில் தமிழ் நாடகமாகிய 'வள்ளித் திரு மணம்' நடக்கிறது. அந்நாடகத்தில் வரும் எல்லா வசனங் களும் பாட்டுகளும் தமிழ்மொழியிலேயே இருக்க வேண்டிய திருக்க, இடையிடையே அன்னியமொழிப் பாட்டுக்கள் வரு கின்றன. சுப்பிரமணியராக நடிப்போன் 'ஜெய ஜெய கோகுல பாலா' என்னும் பாடலை ஏன் பாடவேண்டும்? அவன் அந்தப் பாட்டைப் பாடுவது அசந்தர்ப்பம் என்னும் குற்றமாகும். அக் குற்றம் ஒருபுறம் இருக்கட்டும். அந்த இடத்தில் பாட்டைப் பாடவேண்டு மென்றிருந்தால் வேறு தமிழ்ப் பாட்டு இல்லாமல் போயிற்றா?"

—தமிழிசை முதல் மாநாட்டில் இராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்.

இந்தியன் பாங்க், லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,

நார்த் பீச் ரோட், மதராஸ்

★

மதராஸ் ஆபீஸ்கள்:

எஸ்பிளனேட், மவுண்ட் ரோட், திருவல்லிக்கேணி, தியாகராயநகர், மயிலாப்பூர், புரசைவாக்கம், எழும்பூர்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

★

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ. 69,96,600
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ. 50,79,613
ரிஸர்வ் நிதி	...	ரூ. 56,87,200

டிபாஸிட் ரூ. 17 கோடிக்கு மேல்

★

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.

செக்ரெடரி.

போன் : { ஆபீஸ் : 105
பங்களா : 47 }

தந்தி : சாரதா

ஸ்ரீ சாரதா மில்ஸ் லிமிடெட்

போத்தனூர் (கோயமுத்தூர்)

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் & செக்ரடரீஸ்

V. S. செங்கோட்டையா & பிரதர்ஸ்

கதிர்கள் : 13,996

தறிகள் : 171

★

நூல் :

10 நெ. முதல் 60 நெ. வரை எல்லாவிதமான நூல் தினுசுகளும், ஒற்றை, இரட்டை நூல், கார நூல், சலவை நூல் முதலியன தயார் செய்கிறோம்.

நெசவு :

எல்லாவிதமான ஜவுளி ரகங்களும், உயர்தரமான ஷர்ட்டிங் கோட்டிங், லாங்கிலாத், காடா, கதர், டவல், வேஷ்டி முதலியவைகளும் தயார் செய்கிறோம்.

இந்தியர் மூலதனம் :: இந்தியர் உழைப்பு :: இந்தியர் நிர்வாகம் ::

இந்தியக் கைத்தொழிலை ஆதரித்து இந்தியத் தொழிலாளர்களுக்கு உணவு கொடுங்கள்


பவுன்
நகைகள்
நவீன
வெள்ளி சாமான்கள்
உயரிய
வைரங்கள்
8
9
1
2
3
4
6
7
5
சவரன்
தங்கத்திற்கு
உத்திரவாதம்
★
முத்து
நகைகள்
100%
வெள்ளிக்கு
உத்திரவாதம்
★
ரெங்கூன்
டையமண்ட்
நகைகள்
உம்மிடியார்
உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி & கம்பெனி
(வைரம், வெள்ளி, பொன் நகை வியாபாரிகள்)
23-25, சைனா பஜார் :: டெலிபோன்: 2802 :: மதராஸ்.

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.,

மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்

☆

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

5,00,000 நூற்கும் கதிர்கள்

ஒத்தை நூல், இரட்டை நூல் பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக்கேற்றிய நூல்

நம்பர் 80 வரை நூல்கள்

நாங்கள் சப்ளை செய்வது :

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத்தவிர நெய்வதில்லை.

இப்போது நூல் வினியோகம் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் நூல் தேவைக்கு உங்களது மாகாணம் அல்லது சமஸ்தானம் டெக்ஸ்டயில்ஸ் கண்ட்ரோல் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்துக்கொள்ளவும்.

☆

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.,

மானேஜர்கள்

LOOK FOR THIS . . TRADE MARK WHILE BUYING AJAX PRODUCTS



FOR QUALITY AND VALUE



Flint (Sand), Emery, Silcarb, Ajaxite, Garnet papers, Cloth, Discs, Belts, Tapes, etc., for Wood working and Metal Trades. They cut quickly and cleanly, speed up production and produce a superior finish in fine wood work.

Last Longer *Finish Better*



BENT BODY SAFE



SECURITY CABINET

STEEL PRODUCTS FOR SAFETY

Strong, Durable and Safe for protection against Fire and Burglars. AJAX Steel Cabinets are miniature fortresses of Steel. AJAX Safes are strong in structure, defying thieves and fire.

AJAX PRODUCTS LTD.,

106, ARMENIAN STREET, MADRAS

Managing Agents:

MURUGAPPA & SONS,

MADRAS

டெலிபோன் : 149 தந்தி : "SWADESHI"

தி விஜயலக்ஷ்மி மில்ஸ் லிட்.,

தபால் பெட்டி நெ. 11

கோயமுத்தூர்

★

மூலதனம்:

ஏற்படுத்தப்பட்டது	ரூ. 9,00,000
வெளியிடப்பட்டது	ரூ. 6,00,000
எடுத்துக்கொள்ளப்பட்டது	ரூ. 3,38,800
வசூலாகியது	ரூ. 3,38,800

நிர்வாக சபையார்கள்

ஸ்ரீ திவான்பகதூர் சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், C. B. E. கோயமுத்தூர்
,, V. L. பாலகிருஷ்ண நாயுடு, கோயமுத்தூர்
,, C. R. சதாசிவ முதலியார், கோயமுத்தூர்
,, S. G. லக்ஷ்மி நாராயணசாமி நாயுடு, அனுப்பப்பட்டி
,, A. L. கோவிந்தராஜு, கோயமுத்தூர்
,, Ar. L. V. நடராஜன் செட்டியார் பாங்கர், கோயமுத்தூர்

ஸ்ரீ P. M. பாலசுப்ரமண்ய முதலியார் B. A., B. L., மதருஸ்
,, V. P. சுப்ரமண்ய முதலியார், மதருஸ்
,, V. G. ஜகதீஸ்வர முதலியார், மதருஸ்
,, V. பழனிசாமி நாயுடு, பாங்கர், கோயமுத்தூர்
,, S. பட்டாபிராமன், கொமரபாளையம், (பவானி)
,, C. R. வசந்தராகவ முதலியார் கோயமுத்தூர்

★

ஸ்பின்டல்கள்
11032

தயாராகும் நூல்
10 முதல் 60 வரை

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் & செக்ரடரீஸ்:

குப்தா & கம்பெனி லிமிடெட்

குனியமுத்தூர், கோயமுத்தூர்

ஷண்முகம் பிராண்டு ஸ்டீல் டிரங்க் ஒர்க்ஸ்

REGISTERED: (Trade Mark)

"ஷண்முகம் பிராண்டு"

புதிய உற்பத்திகள்:

ஸ்டீல் பீரோ & டேபிள் கியாஷ் பெட்டிகள், (Steel Almirah and Table Fixing Cash Boxes) கண்ணைக் கவரும் பல வர்ணங்களில் உறுதியான வேலைப்பாடு அமைந்தவை.

(ஷண்முகம் பிராண்டு)

"ஷண்முகம் பிராண்டு"

ஸ்டீல் டிரங்கு சூட்கேஸ்கள். உங்கள் திருப்திக்கு ஏற்ற பெட்டிகள். எப்பொழுதும்போல் நல்ல சாமான்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டு வருவதால் நாடெங்கும் புகழ் பெற்று வருகின்றன.

புரொப்ரைட்டர்:
C. ஞானசுந்திர நாயகர்
341, எஸ்பிளனேட்
மதருஸ்.

பிராஞ்சுகள்: **340, 343, எஸ்பிளனேட்,**
ஷோ ரூம்: **1-14, பேக்கர் தெரு**
டெலிபோன்: நெ. 3094
தந்தி: "SUITCASE"

Telephone: 86363 — Telegrams: "EMPIRE"

MOTORS & MACHINE TOOLS

IMPORTERS & DEALERS IN EVERYTHING ELECTRICAL & MECHANICAL

189-B, MOUNT ROAD - - MADRAS

BRANCH:—**BOMBAY & KARACHI**

We Deal in

Workshop Machinery: Lathes, Shaping, Planing, Drilling, Milling, Boaring, Hack Saw, Band Saw, Punching and Shearing Machines, Bending Machines, Grinding Machines, to Grind, Chemicals and Grains, Lathe Chucks, Milling attachments.

Electrical Machinery: Welding Transformers, Electrodes A.C. Electric Motors, Switches Starters, Oil Circuit Breakers, Grinders, Hammers, Drillers, Exhaust Fans Accessories, Electro-plating Generators, Fans A.C. & D.C. Wires, Pumps.

Boilers: Crosstube Vertical Boilers, Boiler Fittings and Accessories.

Radios: Radios, Radio Accessories.

Miscellaneuos: Chain and Pulleys Blocks, Expanded Metal, Vices, Grindinq Stones, Drill bits, Brick Making, Polishing and Buffing Machines, Circular, Bandsaw and Hacksaw Blades and Button Manufacturing Plants, Oil Engines, Guarage Equipments.

Oil Machinery: Rotary Oil Mills, Expellers, Filter presses Dicaticators, Oil Expellers parts etc.



ஸ்ரீ மீனாக்ஷி மில்ஸ், லிமிடெட்.

மதுரை.

☆

கிளை ஆலை

உசிலம்பட்டி, (புதுக்கோட்டை சமஸ்தானம்).

☆

மூலதனம்:

அதிகாரம் பெற்று வெளியிடப்பட்டது	ரூ. 25,00,000
கையொப்பமாகி வசூலானது	ரூ. 15,84,320

கதிர்கள்: **51,500**

உற்பத்திகள்: **16-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை, ஒத்தை நாலும், கோன் நூல்களும், கைத்தறி, இயந்திரத்தறி நெசவுகளுக்குத் தக்கவாறு உற்பத்தி செய்யப்படுகின்றன.**

☆

நிர்வாக கர்த்தர்கள்:

தியாகராஜ செட்டி & கோ.,

திருப்பரங்குன்றம் ரோடு,

மதுரை.

தந்தி விலாசம்: 'KARUMUTTU' டெலிபோன்: நெ. 1

இசையும் கூத்தும்

வித்துவான் ஔவை. சு. துரைசாமி பிள்ளை

தமிழகத்துத் தமிழ்ப் பெருமக்கட்கு இயலும் இசையும் கூத்தும் பிறப்புரிமையாகும். தமிழ்த்துறை இவ்வாறு மூன்றாக இயன்றது கொண்டு "முத்தமிழ்" என்றும் "மும்மைத் தமிழ்" என்றும் "தமிழ் மூன்று" என்றும் பண்டையோர் வழங்கினர். இவ்வழக்கு வெறுஞ் சொல்வழக்கோடு நில்லாது செல்வமுடைய பெருமக்களால் பெரிதும் பேணப்பட்டும் வந்தது. இயற்றமிழ் வல்லவர் புலவர் என்றும், இசைத் தமிழ் வல்லவர் பாணர் என்றும், கூத்து வல்லவர் கூத்தரென்றும் இப்புலவர் மூவரையும் ஆதரித்து, அவராற் புகழப்பெறும் புகழே இம்மை வாழ்வின் ஊதிய மென்றும் பண்டைத் தமிழகம் மேற்கொண்டு பாராட்டி வந்தது. புலவராற்றுப் படை, செல்வர்கள் புலவர்களைப் புரந்து இயற்றமிழ் வளமுறச் செய்த செய்கைச் சிறப்பை வற்புறுத்துகிறது. இவ்வாறே பாணாற்றுப் படையும் கூத்தராற்றுப் படையும் முறையே இசையையும் கூத்தையும் வளர்த்த செயலை எடுத்துக் காட்டுகின்றன. இம்முறையே நோக்கின், தமிழகத்துச் செல்வர் பலரும் தாம்பெற்ற பெருஞ் செல்வத்தின் பயன் முத்தமிழையும் வளம்பெறச் செய்துபெறும் நிலைத்த புகழைப் பெறுவதே எனக் கருதி யொழுகினமை தெற்றென விளங்கும். ஆற்றுப்படை யென்னும் இலக்கணத் துறையும் முத்தமிழை வளர்க்கும் நலமுடைத்தாதல்பற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார் இந்த ஆற்றுப்படை இயல்பைத் தாம் வகுத்த தொல்காப்பியத்தில் எடுத்தோதினார் என்பதும் ஈண்டு நினைவிற் கொள்ளத் தகுவதாம்.

இனி, இயலும் இசையும் கூத்தும் என்ற இம் மூன்றும் முறையே மனம் மொழி மெய் என்ற கருவி மூன்றினுடைய குறிப்புக்களை யுணர்த்தும் மொழிகளாக அமைந்திருப்பது அறிஞர் அறிந்த செய்தியாகும். மனமுதலிய மூன்றனுக்கும் உரிய இம் முத்தமிழே தமிழ் மகன் ஒருவனுடைய முழுவளர்ச்சிக்கும் வேண்டப்பட்டன. பண்டைத் தமிழ்நூல்கள் பலவும் ஆடவரையும் மகளிரையும் குறிக்கும்போதெல்லாம் அவர்களுடைய புலமைநலம் பாடல்நலம் ஆடல்நலம் என்ற மூன்றையும் புகழ்ந்தோதுவதைக் காண்கின்றோம். இது மிக மிகப் பழங்கால மாகிய சங்ககால நிலை.

இடைக் காலத்தே தமிழருடைய இசையும் கூத்தும் கால மாறுபாட்டால் நிலைபேறிழந்தன. புலமையும் வளம் பெறாதாயிற்று; முத்தமிழும் சிறப்பிழந்த குறிப்பு, தமிழ் மக்கள் மன முதலியவற்றின் நலமிழந்து வீழ்ச்சியுற்றதை விளம்பா நிற்கும். இதற்குத் தமிழ்நாடு வேற்றவர் ஆட்சிக்குட்பட்டுத் தமிழ் நெறி தடுமாறிச் சிதைவுற்றதே போதிய சான்றாகும். இன்று இசையும் கூத்தும் தமிழ் மொழி வாயிலாக நடைபெறுதற்கு மக்கள்பால் பெருமுயற்சி வேண்டப்படுவதாயிற்று; தடைகள் பலவற்றை எதிர்த்தெறிய வேண்டிய நிலைமையும் உளதாயிற்று. இத் தடைகளை வென்று வாகை சூடினோர் பலராயினும், இவற்றிற்கு அஞ்சி அடிமையாய் உள்ளம் மடிந்தவரும் தமிழ் மக்களுள் சிலர் உளரெனின், வீழ்ந்த தமிழகம் இன்னும் போதிய அளவு எழவில்லை யென்பதை இது காட்டுகின்றது. இதனால் தடைகளும் வேரோடு ஒழிந்தில வென்பதும் நன்கு உணரப்படுகிறது.

இது நிற்க, இசையின்கண் தமிழ் மக்கள் எய்தியிருந்த ஈடுபாட்டை ஒரு சிறிது

காண்பாம். அறமும் அருளும் நிலவுதற்குரிய மக்கள் மனத்தில், மறமும், அருட்கு மறுதலையான உணர்வுகளும் நிலவுதற்கு இடமுண்டு. அவற்றை நீக்கி அறமும் அருளும் நிலவப் பண்ணுதற்கு இசை பெருந்துணையாகக் கொள்ளப்பட்டது. "ஆறலை கள்வர் படைவிட அருளின், மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை" எனப் பொருநராற்றுப் படையும், "இல்லின், படுகாழ்ப் படுத்துத் தேய்வை யுரீஇக், கலுழி நீக்குங் கம்மியர் போல, மகர வீணையின் மனமாசு கழீஇ" எனப் பெருங்கதையும் கூறுகின்றன.

இவ்வண்ணம் சிறந்த நோக்கத்தோடு நிறுவி வளர்க்கப் பெற்ற இசைக்கலை இடைக்காலத்திற் றோன்றிய சமய குரவன்மார்களால் கடவுள் வழிபாட்டிற்கும் பயன் கொள்ளப்படுவதாயிற்று. உயிர்கட்குக் கண்ணென வகுக்கப்பட்ட எண்ணோடும் எழுத்தோடும் ஒப்பவைத்து இசைத் தமிழும் சமயச் சான்றோர்களால் போற்றப்பட்டிருக்கிறது. ஞானசம்பந்தர் "எண்ணுமோ ரெழுத்தும் இசையின் கிளவி தேர்வார், கண்ணு முதலாய கடவுட் கிடம தென்பர்" என்றும், "பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக, மண்ணின்றி விண் கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்" என்றும் கூறியருளுகின்றார்.

இவர்கட்கு இரண்டு மூன்று நூற்றாண்டு கட்குப்பின் இந்த இசைத்துறை காமப்பைங் கூழை வளர்ப்ப தென்றும், தவத்துறையில் முயல்வோர் விரும்பத்தகுவ தன்றென்றும் கருதப் படுவதாயிற்று. இக்காலத்தில் இக் கருத்தைப் பரப்பிய சான்றோர் உரைகளை மேற்கொண்ட தமிழ் மக்கள் தம் முன்னோர்களால் தொன்று தொட்டு மேற்கொள்ளப் பட்டுவந்த இசையறிவைக் கைவிடலாயினர். இசைக்கலை வடபுல நோக்கிச் சென்றது. வேற்று நாட்டவர் ஏழாம் நூற்றாண்டிலேயே இந்நாட்டிற்குப் போந்து இசைபயின்ற திறத்தை ஞானசம்பந்தர் நன்கு கூறுகின்றார். பத்தாம் நூற்றாண்டில் தமிழகத்துச் செல்வர் வீட்டுப் பெண்கள் "அடிசில் வீணையும் யாழின் துறையும்" கற்று வல்லராயிருந்தன ரெனக் கொங்கு வேளிர் கூறுவர். இவ்விருபதாம் நூற்றாண்டின் அரைப்பகுதியளவும் தமிழகத்து இசைநலம் கற்றாருட் சிலரொழியப் பலருக்கும் தெரியாமலே இருந்தது. இறந்தொழிந்த இசைத் தமிழ், தமிழிசையாய் மாறி, பண்டை யிலக்கணம் கெட்டுத் திரிந்ததாயினும் கருநாடக இசை கொண்டு வெளிவரத் தலைப்பட்டிருக்கிறது.

இயல் இசை நாடகம் என்ற மூன்றனுள் நடுவணதாகிய இசைத் துறையின் நிலை இதுவாக, ஏனையிரண்டும் திரியாது இருத்தற்கு இடமுண்டாகுமோ? இயற்றமிழ் பல நூற்றாண்டுகட்கு முன்பே வடகலைக் கலப்புற்றுத் தமிழின் நீர்மை குன்றுவதாயிற்று. சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக ஆங்கிலக்கலை வந்து கலக்க, இயற்றுறை சிறப்பிழந்தது. ஏனைக்கலைப் பயிற்சி யுடையார், இயற்றமிழ் அறியாமையே ஓர் ஏற்றமாகவும் எண்ணினர்; இன்று இயற்றமிழ் அறிவு, அறிவுடைமையாகக் கருதப்படாமை விரித்துரைக்க வேண்டுவதன்றும்.

கூத்தென்பது விளையாட்டின் முதிர்ந்த நிலையாய்த் தலைமைசான்ற அரசர், சான்றோர் முதலியோர்களின் சீரிய செயல்வகைகளை இசைகலந்த பாட்டும் ஆட்டும் கலந்து நடித்துக் காட்டுவது. இது காண்போர் காட்சிக்கும் செவிக்கும் இன்பம் வழங்குவது. சங்க காலத்தில் இக் கூத்துக்களைக் கூத்தரென்பார் நிகழ்த்தினர். இவர்கள் மிடற்றுப் பாடலும் பலவகை இன்னிசைக் கருவிகளின் நல்லிசையும் துணைசெய்ய விறல்படப் பாடியாடுவர். இக் கூத்தின்கண் மகளிராய விறலியர் பெரிதும் ஈடுபட்டிருந்தனர். நகரங்களின் கொடிவிளங்கும் தெருக்களில் இராக் காலத்தில், "பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல, நன்னுதல் விறலியர் ஆடும்" கூத்தினைப் பரணர் குறிக்கின்றார். முழவு முதலிய கருவிகளை இயக்கும் கூத்தர்

பின்னே யிருந்து இயக்க, விறலியர் முன்னே வந்து நின்று ஆடுவர் என்று அகப்பாட்டொன்று (அகம் 352) கூறுகிறது. இக்கூத்து வேந்தர் அவைக்களத் தாடுவனவும் ஊர்களில் விழாக்காலங்களில் பொதுமக்கள் கூடிய அவைக்களத் தாடுவனவும் என இருவகையால் 'வேத்தியல், பொது வியல்' எனப் பிரித்துக் கூறப்படும். இவ் விரண்டி னுள்ளும் அகக் கூத்து, புறக் கூத்து, சேரிக் கூத்து, வரிக் கூத்து எனப் பல திறமுண்டு.

இக் கூத்தெல்லாம் மைந்தரும் மகளிரும் விளையாட் டயருமிடத்தே தோன்றி வளம் பெற்றனவாகும். இளையோர் விளையாடாது இல்லிடத்தே செறிப்புண்டிருப்பது அறம் அன்றென்றும், அதனல் அவரது உடலினுக் கம் தேயுமென்றும் சான்றோர் கருதினரென நற்றிணை என்னும் நூல் கூறுகின்றது. இதனல் தமிழ்ச் செல்வர் மனைகளில் மைந்தரும் மகளிரும் நீர்விளையாட்டு முதலிய விளையாட்டு அயருங்காலும் பெருஞ்சிறப்பு நிகழும்போதும் சான்றோர்செய்த நற்செயல் களைப் பொருளாக நாட்டிக் கூத்தாடினர்.

இசைத் தமிழ், கடவுள் வழிபாட்டிற் பெரிதும் பயன் கொள்ளப்பெற்ற காலத்தில் கூத்தும் அவ் வழிபாட்டிற்குரிய நெறியில் இயங்கி, வழிபாட்டிடங்களில் நிகழத் தொடங்கின. ஞானசம்பந்தர் முதலிய சான்றோர்கள் இறைவன் திருக்கோயில்களில் பாடலும் ஆடலும் பெருக நிகழ்வதைக் குறித்தருளுகின்றனர். சுந்தரரும், சேரமான் பெருமாளும் பாடல் கேட்டும் ஆடல் கண்டும் இன்புற்றதிறத்தைச் சேக்கிழார் குறிக்கின்ருர். பிற்காலச் சோழமன்னர்கள் பாடல் ஆடல்களைப் புரிவார்க்கு நிபந்தங்கள் விட்ட செய்தியைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

இக்காலத்தும் கூத்துக்கள் நடக்கின்றன. இவற்றிடையேயும் இசையும் கூத்தும் நிலவுகின்றன. இக்கூத்துக்கு உறுதுணையாகிய இசை திரிந்து கெடவே, இதுவும் தமிழ் நடை திரிந்து இயங்குவதாயிற்று.

இசையும் கூத்தும் கற்ருர்க்கே யன்றிக் கல்லாதவர்க்குப் பெரிதும் அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுவனவாகும். இவற்றில் நிலவும் மொழி, பொதுமக்கட்குரிய தமிழ் மொழியாக இருப்பதே வேண்டுவது. மக்கட்கு அறிவுறுத்தக் கருதும் அறிவுப் பொருளை இவை நன்கு வற்புறுத்தும் வாய்ப்புடையவையாதலால், இசையும் கூத்தும் உயர்ந்த அறிவு நெறிக்கருத்துக்களை யுடையவாதல் வேண்டும். தமிழிசையியக்கத்தின் பெருந்தொண்டால் இசையரங்குகளில் தமிழ் மொழி வழங்கத் தலைப்பட்டமையின், இசை ஓரளவு தன்பணியைச் செய்யத் தொடங்கியுளது என்னலாம். நாடகங்களில் தமிழன்றிப் பிற மொழிகள் பயன்படாமையால் தமிழே வழங்குகிறது.

நம் நாட்டில் கற்றவர்தொகை மிகக் குறைவு. கல்லாதவர்தொகைமிகுதியாகவுள்ளவரை எவ்வகை நலமும் நிலைபெறவுண்டாக முடியாது; சமய சமுதாய அரசியல் பொருளாதாரத் துறைகள் நன்முறையில் பயன்படுவனவாகா; மக்களின் அறியாமையை அடிப்படையாகக் கொண்டு, சூழ்ச்சியுடையோர் தங்கள் தலைமையை வலுப்படுத்திக் கொள்வர்; அறியாமையால் நாட்டில் வறுமையும் பிணியும் காணியாட்சி கொள்ளும்; அமைதியும் இன்பமும் பொருந்திய நல்வாழ்வு குதிரைக் கொம்பாகும். ஏனை நாட்டவர் பொருளாதாரப் போர்முறையில் ஈடுபட்டிருக்க, நம் நாட்டவர் கல்லாமையாகிய இருளில் அறிவுப்பேற்றுக்கு அலமருகின்ருர் களென்ருல், இது மிகவும் இரங்கத்தக்கதாகும்; இக் குறைபாடுக ளெல்லாம் இசை நாடகங்களின் வாயிலாக நாட்டு மக்கட்கு உணர்த்தப்படல் வேண்டும். மக்கள் வாழ்க்கைக்கு அண்மையில் பயன்படாதனவும், தெய்வங்களின் உயர்வை மக்களுள் கீழாயினர் நிலையினும் மிக மிகக் கீழ்ப்பட்ட கயவர் நிலைக்கு இழித்துக் காட்டுவனவு மாகிய நிகழ்ச்சிகளைப் படைத்துக்கொண்டு காட்டுவனவும், மக்கள் அறியாமையை மிகுதிப் படுத்துவனவும் இசையும் கூத்தும் கருவியாகக் கொண்டு மக்கட்கு உணர்த்தப்படுகின்றன. இவற்றை விலக்கி, சமய சமுதாய அரசியல் பொருளாதார உறுப்புக்கள் வளம் பெறும் உணர்வுகள் மக்கட்கு உண்டாகுமாறு இசையும் கூத்தும் இயங்குதற்கு அறிஞர்கள் கருத்திருத்துவார்களாக!

இசையும் தமிழ்க் கல்வியும்

ச. ஆறுமுக முதலியார் M.A., B.O.L., L.T.

இவ்வுலகில் உயிர் இனங்கள் எல்லாவற்றி லும் 'இசை' என்பது இயல்பாகவே பொருந்தியுள்ளது. அவைகள் இசையை ஏற்றுக்கொள்வதோடு இசையினல் மிக்க பயனையும் எய்துகின்றன. அவற்றுள்ளும் பகுத்தறிவையும் அது வளர்தற்கேற்ற மனத் தையும் படைத்திருக்கின்ற மக்கள் வாழ்வில் இசையினல் விளையும் பன்முக நலனையும் முற் றிலும் எடுத்தியம்புவதற்கு இயலாது. கல்வியிலும், கல்வி பற்றிய முறைகளிலும் இசை ஒரு சிறந்த இடத்தைப் பெற்று இருக் கிறது. தமிழ்க் கல்வியில் அது பெற்றிருக் கும் இடத்தை ஒரு சிறிது பார்ப்போம்.

இசை இடம்பெருத மக்கள் வாழ்க்கை வாழ்க்கையாகாது. வாழ்க்கையின் முழுத் தன்மையும் முற்றுப்பெற வேண்டுமானல் இசையும் அதில் ஒரு கூருக இடம்பெற் றிருக்க வேண்டும். மனதில் பொதுவாக, அறி வுக்கூறு, உணர்ச்சிக்கூறு, முயற்சிக்கூறு (Knowing, Feeling and Willing) என்ற மூன்று கூறுகள் (Phases) உள்ளன. இந்த மூன்று கூறுகளும் ஒன்றை விட்டு ஒன்று பிரியாத தொடர்பைப் பெற்று, ஒத்துழைத்து, ஒருங்கே வளர்ந்தால்தான் மனம் சரியான வளர்ச்சியெய்தும். கல்வியும் (Education), கலைத்திட்டங்களும் (Curriculum), பாடத்திட்டங்களும் (Syllabus) இம் மூன்றையும் வளர்க்கும்படியான நிலையில் அமைக்கப்படவேண்டும்.

இவ் வுண்மையைக் கருதியே, நமது முன் னேர்கள் தமிழையும், இயல் இசை நாடகம் என முத்திற மாக்கினர். "சங்கத் தமிழ் மூன்றுந் தா" என்ருர் ஔவையார்.

'ஏழுலகும் புகழ் முத்து முத்தமிழ்' என் ருர் கம்பர். இயல் வாயிலாகத் தமிழ், மனத் தின் அறிவுக்கூற்றை வளர்க்கிறது. இசை உணர்ச்சிக் கூற்றை வளர்க்கிறது. இயலும், இசையும் சேர்ந்து பிறக்கின்ற நாடகம் முயற்சிக்கூறு என்ற பகுதியை இயல், இசை என்னும் துணைகொண்டு நடித்துக் காட்டி முற்றுவிக்கிறது.

இசையினல், உள்ளத்தே தோன்றி எழும் சுவைகளை அல்லது மனஎழுச்சிகளைத் (Emotions) தட்டி எழுப்பி, கிளர்ச்சி செய்து பண்படுத்தலாம். "நகை, அழுகை, இளிவரல் மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை" என்ற எட்டும், சமநிலை என்பதோடு சேர்ந்து ஒன்பான் சுவைகளா கின்றன. இவற்றை ஏற்றபெற்றி வளர்த் துப் பண்படுத்துவதை நாம் தமிழ்க் கல்வி வாயிலாகச் செய்ய முடியும். நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியின் வாயிலாய் தமிழ்ச் செய்யுள்—உரை நடைப் படிப்பு, பேச்சுப் போட்டி (Elocution Competition), சொற்போர் (Debates), சொற்பொழிவுகள் (Lectures), நடித்துக் காட்டல் (Dramatisation), கட்டுரை-கடிதங்கள் எழுதுதல், சிறு (ஓற்றை அங்க) நாடகங்கள் எழுதுதல், சிறு கதைகள் எழுதுதல், செய்யுளுக்கு ஏற்ற விளக்கப் படங்களை ஓவியமாகத் தீட்டுதல், செய்யுள் எழுதுதல், நாட்டுப் பாடல்கள் (கும்மி, தெம்மாங்கு, பள்ளு, குறம், சிந்து முதலியன) எழுதுதல், பாட்டு ஒப்புவித்தல் (Recitation) முதலிய பல முறைகளிலும் துறைகளிலும் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும், மாணவர்கள் மனதில் இந்த இசைப்பயனுகிய உணர்ச்சியை ஊட்ட லாம். இவற்றுள்ளும் சிறப்பாக, தமிழ்ச் செய்யுளின் வாயிலாய் இசையின் அருமையை ஊட்டி, உணர்ச்சியை வளர்ப்பதைப் பற்றி ஈண்டு ஒரு சிறிது சிறப்பாகப் பார்ப்போம்.

தமிழ்ப் பாடத்திட்டத்தில் மாணவர்களின் குழவிப் பருவத்திலும் (Infant Stage) நிலை மாறு பருவமாகிய (Transitional Stage) தொடக்க நிலை (Primary), உருவமை பருவமாகிய (Formative Stage) இடைநிலை (Middle), முன்குமரப் பருவமாகிய (Early adolesçent stage) உயர்நிலை (High) க் கல்வியிலும், பின்குமரப்பருவமாகிய (Later adolescent) கல்லூரிப் படிப்பிலும், என் சுருங்கக் கூறின் வாழ்க்கை முழுவதிலுமே, செய்யுள் இடம் பெற்றிருக்கிறதில் ஒரு வியப்புமில்லை. மாணவர்கள் இலக்கியச் சுவையும் அதில் ஊடுருவிச் செல்லும் இசைநயமு முணர்ந்து சுவைத்து இன்புற்று உணர்ச்சியையும் உளச்சுவையையும் பண்படுத்திக் கொள்ளும் நோக்கமே, தாய்மொழிக் கல்வியின் நோக்கங்களில் தலை சிறந்த நோக்கமாகும். ‘நுண்மாண் நுழைபுலன்’ வாய்ந்த புலவர் பெருமக்களால் எழுதப்பட்ட செய்யுட்கள், தோண்டத்தோண்ட நீரூறும் மணற்கேணிபோல் இன்பமூறும் ஊற்றுகளாம். இலக்கியங்கள், நம் முன்னோர்களாகிய தெய்வப்புலமைச் சான்றோர்கள் தம் வாழ்நாட்களில் கண்ட உண்மைகளாகிய அறிவுச் செல்வங்கள் நிரப்பிவைத்திருக்கின்ற பொற்பேழைகளாம். அவற்றைப் பயின்று அவற்றிலுள்ள சொல் நயம், பொருள் நயம், தொடை நயம், நடை நயம், இசை நயம் முதலியவற்றைத் துய்த்து உணர்தல் கற்றலின் மிகச்சிறந்த பகுதி யாகும். “நுண்ணுணர்வினரோடு கூடி நுகர்வுடைமை, விண்ணுலகே ஒக்கும் விழைவிற்று” என்பர் புலவர். அவ் வுணர்வினோர் இயற்றிய நூல்களைப் படித்து மகிழ்தலும் ஆன்றோரோடு கூடி மகிழ்தலேயாகும். காவிய இன்பத்தைச் சுவைத்து மகிழ்வதைவிடப் பேரின்பம் இவ்வுலகில் வேறில்லை என்பர் ஆன்றோர். வாயினால் உணரும் அறுசுவைகளோ சிறிது நேரமே நிலைத்து நின்று, பிறகு மறைந்தொழிவதோடு தெவிட்டுந் தன்மையும் வாய்ந்தன. மிகினும் குறையினும் நோய்க்கும் இடம் தருவன. கவியிசை இன்பமோ தெவிட்டாத தெள்ளமுதமாய், மேலும் மேலும் வளர்ந்து, நினைக்கும் போதெல்லாம் புத்தின்பம் பயப்பதாய் நமதுள்ளத்தை என்றும் இன்பத்தில் ஆழ்த்த வல்லது.

“கவிப்பா அமுதம் இசையின் கறியோடு
கண்ணனுக் குண்ணக் குவிப்பான்”

என்ற அடியில் கம்பர் பெருமானும், கவிப்பா இன்ப அமிழ்தாகு மாற்றையும் அது கறிபோல் இசையோடு சேர்ந்து, உண்ண உண்ணத் தெவிட்டாத தன்மை வாய்ந்தது என்பதையும் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தமை காண்க. ‘தமிழ்’ என்ற சொல்லே இனிமை என்னும் பொருளுடையது. அம்மொழிப் பாடல்களில் இசை யென்பது உடலும்—உயிரும், மலரும்—மணமும், மணியும்-ஒளியும் போல் பிரிக்க முடியாத தொடர்பு பெற்றிருக்கிறது என்க. இது பற்றியே தேவார இசைப்பா ஆசிரியராகிய திருநாவுக்கரசரும்,

“தமிழோ டிசை பாடல் மறந்தறியேன்”

என்று தமிழையும், இசையையும் ஒன்றுபடுத்தித் தமிழிசை யாக்கியது என்க. இச் செய்யுளிசை யின்பத்தில் ஈடுபடும்போது, செவியோடு சிந்தையும் ஈடுபடும்; ஊனோடு உயிரும் ஒன்றுபடும். அப்படி ஒன்றுபடுவதே “கலத்தல்” எனப்படும். அதிலிருந்து பிறக்கும் இன்பம் பேரின்பம்; மட்டிலா மகிழ்ச்சி என்க. புலவர் பெருமானாகிய இராமலிங்க அடிகளாரும், தெய்வப்புலமைத் திருவாசக இசையின்பத்தில் ஈடுபட்டுப் பெற்ற இன்பத்தை,

“வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே”

என்று விளக்குகின்றார்.

எனவே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பிரண்டும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள், செய்யுளை உண்மையாகக் கற்பிக்க வேண்டின் அதன் உயிர்நிலைக் கருத்துக்குப் போய் அதில் உள்ள சொல்நயம் பொருள்நயங்களைக் கூறுவதற்கு முன்னால் அச் செய்யுளுக்கு

ஏற்ற—அதிற்பயிலும் சுவைக்கு ஏற்ற, பண்ணில், இடத்திற்குஏற்ற எடுத்தல், படுத்தல் நலிதல்களாகிய குரல் ஏற்றத் தாழ்வுகளுடன் (Modulation of voice), தெளிவான நல்ல உச்சரிப்புடன் (Good Pronounciation) படித்துக் காட்டி மாணவர்களுக்கு அன்று படிக்கும் செய்யுளில் ஓர் ஆர்வத்தை ஊட்டுவதோடு, மேலும் மேலும் செய்யுளைப் படித்து இன்புற வேண்டும் என்னும் ஓர் ஊக்கத்தையும் பற்றையும் உண்டாக்க வேண்டும். செய்யுள் இன்னோசை மயமாக விளங்குகின்றது. கவியின் உணர்ச்சியைப் பிள்ளைகளும் உணரும்படி செய்ய, திருத்தமான ஒலித்தலோடு (Clear articulation) செய்யுளை இடத்துக்கும் சுவைக்கும் ஏற்ற இசையுடன் படித்துக் கவியின் கருத்தை வெளிப்படுத்த வேண்டும். செய்யுளை இசையுடன் படித்தால்தான் அதன் சொல்லும் பொருளும் சுவையும் நன்கு தோன்றி உள்ளத்திற்கு உவகை யளிக்கும்.

"இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று"

எனக் கூறப்பட்டிருப்பினும் செய்யுட்கு இசை இன்றியமையாத தாகும். இசையில் ஈடு படாதார் எவருமிலர். ஈசனுக்கு "வீணை தடவி" என்று ஒரு பெயரு முண்டு. தொல்காப்பியச் செய்யுளியல் முதல் நூற்பாவில் "பா" என்பது, "சேட்புலத் திருந்த காலத்தும் ஒருவன் எழுத்தும் சொல்லும் தெரியாமற் பாடம் ஓதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்ன செய்யுள் என்று உணர்வதற்கு ஏதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை" என்று விரிவுரை எழுதுகின்றார். இதனால் பா என்பது இசை மயம் என்பதும் இசையின்றேல் பா இன்று என்பதும் போதரும். எனவே செய்யுளின் வாயிலாய் உலகெங்கும் செறிந்து கிடக்கும் இசையை ஊட்டி மாணவர்களின் உள்ளத்தைப் பண்படுத்த முடியும். சலசல என்று ஓடும் நீரோடையிலும், பூம்பொழில்களினிடையே தவழ்ந்து வந்து இன்ப வுணர்ச்சியை ஊட்டும் மெல்லிய பூங்காற்றிலும், தட்டுத் தடையின்றி, கட்டுப்பாடுகளுமின்றி வானவெளியில் மனம்போல பாடித்திரியும் வானம்பாடியிலும், சோலையில் களித்துக் கூவும் "கீதம் இனிய" குயிலிலும், சுருங்கச் சொன்னால் நுட்பமாக நுனித்து நோக்குவோர்க்கு, இயற்கையில் எங்கும் இயங்கும் இன்னிசையைப் போலவே புலவனும் பாடுகின்றான் என்பது விளங்கும். மணல்ஊற்றில் நின்றும் ஊறும் நன்னீர் போலவே புலவனது உள்ளமாகிய ஊற்றில் நின்றும் இன்னிசையாகிய நன்னீர் செய்யுள் வடிவாகப் பீறிட்டுக்கொண்டு புறப்படுகிறது. இதை நாம் மாணவர் உணரும்படி செய்ய வேண்டும்.

வண்டிக்காரர்கள் பாடும் தெம்மாங்கில் ஈடுபட்டு வண்டிக்காளைகள் மிகவும் பெரிய சுமையையும் எளிதில் இழுத்துக்கொண்டு செல்லுகின்றன. குழந்தைகளும் தம் தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாட்டில் மதி மயங்கித் தம் சண்டித்தனத்தை நீத்து உறங்குகின்றன. தொழிலாளர் இசையின் இனிமையில் ஈடுபட்டுத் தம் தொழில் வருத்தம் தோன்றப்பெறாமல் தொழில் செய்து முடிக்கின்றனர். இளைஞர்கள் முற்றிலும் பொருளுணராவிட்டாலும் இசையில் ஈடுபட்டு, இசைப்பாடல்களை உள்ளக் கிளர்ச்சியோடு பாடித் திரிகின்றனர். அதுபோலவே அறிஞரும், ஆடவரும்—பெண்டிரும், மாணவரும்—ஆசிரியரும், அரசனும்—ஆண்டியும், முதலாளியும்—தொழிலாளியும் ஆகிய அனைவரும் இசையில் ஈடுபடுகின்றனர். அகத்தில் காதலையும், புறத்தில்-போர்க்களத்தில் வீரத்தையும் நல்குவது இச் செய்யுளிசை. போர்க்களத்தில் புண்பட்டு விழுந்த வீரர்களின் வருத்தத்தையும் இனிய பாடல்களினால் போக்கிவந்ததைப் "புறப்பொருள் வெண்பாமாலை" முதலிய பண்டைய நூல்களிலும் இன்றைய போரில் நேரிலும்' காணலாகும்.

இசையில் ஈடு படாதவர் எவருமில்லை. பழக்கப்பட்ட வீட்டு விலங்குகளும் பழக்கப்

படாத காட்டு விலங்குகளும் பறவைகளும் கூட இசையில் ஈடுபடுகின்றன. தங்கள் கொடுமையையும் பகைமையையும் மறந்து இவை ஒன்றுகூடி மகிழ்கின்றன. கண்ணன் குழலூதியதினல் விலங்குகளுக்கு உற்ற நிலையையும், ஆனய நாயனர் குழலூதியதனல் விலங்குகள் உற்ற நிலையையும், பெரியாழ்வாரும் சேக்கிழாரும் கூறுவதை ஓரிரண்டு எடுத்துக் காட்டுகளால் விளக்கிக் காட்டுதும் :—

"சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச் செங்கண்கோடச்
செய்யவாய் கொப்பளிப்ப
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக் கோவிந்தன்
குழல்கொடு ஊதினபோது
பறவையின் கணங்கள் கூடுதுறந்து வந்துசூழ்ந்து
படுகாடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச்
செவியாட்ட கில்லாவே"

—பெரியா-திருமொழி—8

"மருண்டு மான்கணங்கள் மேய்கைமறந்து
மேய்ந்தபுல்லும் கடைவாய் வழிசோர
இரண்டுபாடும் துளங்காப் புடைபெயரா
எழுதுசித் திரங்கள்போல நின்றவே"

—பெரியா-திருமொழி—9

"ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையில் பற்றுமிளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாங் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து வந்தணைய"

—பெரிய-ஆயனர்—30

"நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்ருய் நயத்தலினல்
மலிவாய்வெள் எயிற்றரவம் மயில்மீது மருண்டுவிழும்
சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்"

—பெரிய-ஆயனர்—34

இனி, விறகு தலையராய் வந்த சிவபெருமானும் யாழை மீட்டுச், சாதாரிப் பண்ணைப் பாடியபோது நிலைஇயல், இயங்குஇயற் பொருள்கள் யாவும் அவ்விசையின் பயனுய் அடைந்த நிலையைத் திருவிளையாடற் புராணத்திலும், யாழினல் யானையை அடக்கிய வரலாற்றைப் பெருங்கதையிலும் காணலாகும். திருஞான சம்பந்தரும், நம்மாழ்வாரும் குழவிப் பருவத்திலேயே இறைவனைத் தம் பாட்டுகளினல் இழுத்தனர். இறைவனே ஏழிசையாயும் இசைப்பயனுயும் இருக்கின்றனன் என நூல்கள் கூருகிற்கும். இசை, பாடுவோரையும் கேட்போரையும் இசைவிக்கின்றது. பாட்டு, தாளம் பண் முதலியவற்றையும் பலவகை இன்னிசைக் கருவிகளையும் ஒன்றுவிக்கின்றது; இலக்கியத்தையும் இசையையும் ஒன்றுவிக்கின்றது; சொல்லையும் பொருளையும் இசைவிக்கின்றது; உள்ளத்தையும் உணர்வையும் (உளச்சுவைகளையும்) ஒன்றுவிக்கின்றது; சிந்தையையும் மொழியையும் சேர்ப்பிக்கின்றது; கேட்டபோர் பலரையும் கூட்டுவிக்கின்றது. இன்ஞோரன்னபல இசைவுகள் கொண்டே தமிழில் இது இசை என்னும் பெயரைப் பெற்றிருக்கிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இசையை அவரவர் தாய்மொழியிலுள்ள பாடல்களின் வழியாய் வளர்ப்பதே இயல்பாகும்; ஏற்ற முறையும் துறையும் ஆகும். தமிழாசிரியர்கள் தம் வகுப்புகளில் மாணவர்களை நன்கு கவனிக்கச் செய்யவும், செய்யுட் பகுதிகளை மேலும் மேலும் உள்ளக் கிளர்ச்சியோடு படிக்கத் தூண்டுவதற்கும் அவற்றை இசையுடன் படிப்பதே சிறந்த முறையாகும். புறத்தே சென்றுலவும் மாணவர் மனதைக் கவர்ந்து, நடைபெறும் செய்யுட் பாடத்தில் ஈடு படுத்துவது இசையே யாகும். இசையென்ருல் கேள்விக்கு இனிமையாக இருக்குமாறு அதற்குரிய ஓசையில் செய்யுளைப் படித்தலே யாகும் என்பதல்லது இசைப் புலவர், தாளம் முதலியன பிறழாமல் இசையரங்கு நடத்துவது போல் வகுப்பில் நடத்த வேண்டும் என்பதல்ல. இன்னின்ன பாக்களை இன்னின்ன பண்களில் பாடலாம் என்று இசை யறிஞர் கருதுகின்றனர். அவற்றைப் பின்னே காண்க :—

என்	பா		பண்
1.	வெண்பா	...	சங்கராபரணம்
2.	அகவல்	...	ஆரபி, தோடி
3.	கலிப்பா	...	பந்துவராளி
4.	கலித்துறை	...	பைரவி
5.	தாழிசைகள்	...	தோடி
6.	கலி. ஆசிரிய, விருத்தங்கள்	...	காம்போதி, கல்யாணி, மோகனம், மத்யமாவதி
7.	உலா	...	சௌராஷ்டிரம்
8.	பிள்ளைத் தமிழ்	...	கேதார கௌளம்
9.	பரணி	...	கண்டாரவம்

இனி, சுவைக்கேற்றவாறும் இசையை மாற்றலாம் என்பர் :—

என்	சுவை		பண்
1.	கடவுள் வாழ்த்து, வணக்கம்	...	தன்யாசி, காம்போதி, பூபாளம், மாயா மாளவ கௌளம்
2.	கடவுள் அன்பு (பக்தி)	...	நாதநாமக் கிரியை, ஆனந்த பைரவி, மத்யமாவதி, ஆரபி
3.	நகை	...	இந்தோளம், மோகனம், பிலகரி, கல்யாணி
4.	அழுகை	...	தோடி, புன்னாகவராளி, பைரவி, ஸ்ரீ முகாரி, சாவேரி
5.	சமநிலை	...	சங்கராபரணம்
6.	பெருமிதம்	...	அடாணா, கேதார கௌளம், கானடா
7.	காதல்	...	நாட்டை, வசந்தா, பைரவி
8.	செவிலிப்பாடல், தாலாட்டு	...	நீலாம்பரி

தமிழும் இசையும் தமிழ்க்கல்வி வாயிலாய்த் தழைத்து ஓங்குக !

பாவ சங்கீதம் வேண்டும்

"தமிழிசை வேண்டுமென்று சொல்லும்போது ஏதோ பாஷை மட்டும் தமிழில் இருந்தால்போதும் என்பதல்ல. பூர்வமான தமிழ்நாட்டு இசைப் பண்போடு கூடி, உயர்ந்த உணர்ச்சி பாவங்களோடு கலந்ததாக சங்கீதம் இருக்க வேண்டும் என்பதே நமது கொள்கை.

* * *

சங்கீதத்தின் உயர்ந்த லக்ஷியத்தையும் சாகித்தியத்தின் உயர்ந்த லக்ஷியத்தையும் கண்முன்னால் வைத்துக்கொண்டே மாணவர்களுக்குச் சங்கீதம் கற்பிக்க வேண்டும். முதலில் ஏதோ கஷ்டமாகத் தோன்றும். கொஞ்சம் விடாமுயற்சியோடு இந்தத் துறையில் வேலை செய்வோமானால் வெகு சீக்கிரத்தில் தமிழ்நாடு எங்கும் அதிஅற்புதமான பாவ சங்கீதம் ஒலிக்கக் கேட்கலாம். அந்தச் சங்கீதம் தமிழ் மக்கள் எல்லோருடைய இதயத்தையுமே அள்ளும்படியாக இருக்கும்"

—தமிழிசை முதல் மாநாட்டில் டி. கே. சி.

Parry's

SWEETS

for

QUALITY

AND

FLAVOUR

Available at:

Spencer & Co., Ltd.

FOR CLOTHING

Visit

LILARAMS

CHINA BAZAAR

MADRAS.

FOR CLOTHING

Visit

RAJA STORES

MYLAPORE

MADRAS.

Telegram: "COOPFIRE" Phone No. 4361

THE

Co-operative Fire & General Insurance Society, Ltd.,

(Registered under the Co-operative Societies Act. VI of 1932)

PRESIDENT:

Rao Bahadur T. M. CHINNAYYA PILLAI, M.A., B.L.

TRANSACTS:

Fire Insurance of all descriptions Fidelity Guarantee Insurance and Motor Vehicles Insurance

For Particulars apply to:—

P. SHANMUGAM, B.A., *Secretary.*

POST BOX NO. 1249 MADRAS 1.

V. M. PERIYASWAMY CHETTY & CO.

METAL HARDWARE MERCHANTS

TATA & I. C. C. DEALERS

★

BUYERS OF ALL KINDS OF
NON-FERROUS METAL SCRAPS

SUCH AS

OLD COPPER, OLD BRASS, BELL METAL,
GUN METAL ETC., ETC.

★

399, MINT STREET, SOWCARPET, MADRAS

Grams: COPMETAL - - - Phone 4142

★

Head Office:

TIRUPUR—Dealings in COTTON, METAL & HARDWARE

★

Sister concerns

ERODE—Dealings in BANKING
SALEM—Dealings in METAL & HARDWARE
DHARAPURAM—Dealings in COTTON

காளீஸ்வரர் மில்ஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

தென்னிந்திய முதல்தர நூல்நெசவு தொழிற்சாலை

★

தந்தி: காளீஸ்வரர் டெலிபோன்: 59

43000 கதிர்கள் 295 தறிகள்

டெக்ஸ் மார்க்கு: நெ. 618 ரிஜிஸ்ட்டர்ட் ட்ரேட் மார்க்கு:

"காமதேனு"

பல நம்பர்களில் உயர்தர நூல் உற்பத்தியும்
சிறந்த முறையில் துணிவகைகள் பலவும்
தயார் செய்யப்படுகின்றன

இந்தியர் மூலதனம்! இந்தியர் நிர்வாகம்!! இந்தியர் உழைப்பு!!!

இந்தியத் தொழிலாளிகளால் உற்பத்தி செய்யப்படும்
எம் நூல் ஜவுளிகளை ஆதரியுங்கள்!!!

The firms of:

செக்ரடரீஸ் & பாங்கர்ஸ்:

ஸ்ரீ அள. அரு. அருணாசலம் செட்டியார்
&
திவான்பகதூர் ஸ்ரீ பி. சோமசுந்தரம் செட்டியார்

லோகல் ஏஜண்டு:

ஸ்ரீ அள. அரு. கர்ணராஜா செட்டியார்
அவர்கள்,
தேவகோட்டை ஜமீன்தார்.

USE

A. C. & D. C.
CEILING TYPES

Manufactured by :

THE CALCUTTA ELECTRICAL MANUFACTURING CO., LTD.

100, CLIVE ST., — 1st FLOOR, — CALCUTTA

"NICCO"

Hard Drawn Bare Copper Wires, Solid and Stranded
For Overhead Lines and Distribution Schemes.

VIR & WEATHER PROOF CABLES
AERIAL & INSTRUMENT WIRES Etc.

Manufactured by :

THE NATIONAL INSULATED CABLE COMPANY OF INDIA LIMITED

4, Dalhousie Square East, CALCUTTA

SOLE AGENTS :

P. NATESAN & COMPANY, LIMITED

ELECTRICAL ENGINEERS

10, MOUNT ROAD, MADRAS

THE JAWAHAR MILLS LTD.

SALEM JUNCTION, (South India)

SPINDLAGE

Total Ring Spindles 22,312

Fitted with the latest

CASABLANCAS HIGH DRAFT system.

Spindles shortly expected 7940

COTTON YARN: Spinning from 12s to 80s.

REPUTED FOR ITS FINENESS AND EVENNESS

INDIAN PRODUCTS WITH INDIAN CAPITAL AND LABOUR.

MANAGING AGENTS:

UMAIYAMBIKA & CO.,

SALEM JUNCTION.

FOR YOUR INSURANCE

NEEDS IN

FIRE, MOTOR CAR, MARINE, WORKMEN'S COMPENSATION, ACCIDENT, FIDELITY GUARANTEE ETC., ETC.

Consult

United India Fire & General Insurance Co., Ltd.

"UNITED INDIA LIFE BUILDING"

ESPLANADE - MADRAS

Telephone No. 4241 Telegrams: "UNIGEN"

Branches at :—BOMBAY, CALCUTTA, KARACHI & LAHORE.



Sole Distributors:

SOUTH INDIA CORPORATION (Madras) LTD.

80, SEMBUDOSS STREET, MADRAS I

Phone: 2724 Telegrams: "GOOD WILL"

Phone : 4322

M. NARAYANASWAMI MUDALIAR & SONS.

58, BROADWAY, MADRAS.

The house for quality safes, durable steel almirahs, attractive designed fire resisting safes and strong cash boxes at competitive prices.



Suppliers to:— GOVERNMENT OFFICES, RAILWAYS, BANKS. COMMERCIAL FIRMS, CO-OPERATIVE SOCIETIES & GENERAL MERCHANTS.

ம. நாராயணசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்

இரும்புப் பெட்டி, ஸ்டீல் அல்மைரா, காஷ் பாக்ஸ் என்பவை விலை சகாயமாகவும் புது நவீன முறையிலும் சப்ளை செய்யப்படும்.

58, பிராட்வே, :: :: சென்னை.

கருணாமிர்த சாகரம் கண்டவர்

டாக்டர் ஆ. ஜோதி பாண்டியன், A. R. P. S

அழகும் பழமையும் வாய்ந்த பாண்டிய நாட்டில், திருநெல்வேலிக் கோட்டத்தின் மேற்குப் பகுதியினுள் சாம்பூர் - வடகரை என்ற கிராமத்தினரும், கூன் பாண்டியன் மரபில் வந்துற்றோருமான முத்துசாமி பாண்டியன் என்பார், தம் பதினைந்தாம் வயதில் அதாவது 1854-ம் ஆண்டில் தம் முன்னோர் கொண்ட சைவமதத்தை விட்டுக் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவினர். இவருக்கு ஐந்து ஆண்களும் நான்கு பெண்களும் பிறந்தனர். இவர்களில் முதல்வராய் உதித்தவர் ஆபிரகாம் என்பார். இவர் தோன்றிய தினம் 31—7—1860. இவர் தமது ஐந்தாம் ஆண்டின் முடிவில் சுரண்டை என்ற கிராமத்தில் கல்வி பயின்று வந்தார். தம் பதின்மூன்றும் வயதில் நான்காம் உயர் நிலை (Upper Fourth) என்ற வகுப்பில் படித்துத் தேறினர். இவருடைய சுறு சுறுப்பையும் புத்தி நுட்பத்தையும், இன்குரலிசையையும், சீரிய வொழுக்கத்தையும் அறிந்த அங்குள்ள ஆங்கிலப்பாதிரியார் ஒருவர் இவர் உபாத்திமை வேலைக்குத் தக்கவரெனக் கருதி, திண்டுக்கல்லிலுள்ள உபாத்திமார் - போதனை முறைப் பாடசாலைக்குக் கல்விபயில 1874-ம் ஆண்டில் அனுப்பினர். அக்கல்லூரியில் இவர் மூன்று ஆண்டுகள் படித்துத்தேறிப் படிப்பை முடித்ததோடு, அக்காலத்திலேயே, மேலோர் தயவையும், தக்கோர் நேயத்தையும் கற்றோர் உறவையும், அருந்துறவிகள் நட்பையும் பெற்றுக் கொண்டார். கற்றோர் உதவியால், இயற்றமிழ், சோதிடம், ஆருடம் முதலியவற்றிலும், துறவிகளின் உதவியால் மருத்துவப் பயிற்சியிலும் நற்புலமை பெற்றார். அக்காலத்தில் ரயில் கிடையாதாகையால், கோடை விடுமுறைக்கு இவர் தம் கிராமத்திற்குச் செல்லாது, தமது நண்பர்களான துறவிகளுடன் சேர்ந்துகொண்டு பச்சிலைகளைச் சேகரிப்பதிலும், மருந்துகள் செய்வதிலும், மருத்துவச் சிகிச்சை செய்ய அவர்களுடன் செல்வதிலும் அந்நாட்களைக் கழிப்பார். இவை போக மற்ற வேளைகளில் கெட்டுப்போன கடிகாரங்களைச் செப்பனிட்டும், பழைய புத்தகங்களைப் புதுப்பித்துக் கட்டியும், சட்டைகுடுத்துணி முதலிய வற்றைத் தைத்துக் கொடுத்தும் அவைகளுக் குத்தக்க கூலி பெற்று அவ்வூதியத்தை மருந்துகள் செய்வதற்கென செலவிடுவார். இவ்வாறாகத் தம்படிப்பை முடித்து, அப்பள்ளிக் கூடத்திலேயே 1877-ம் ஆண்டின் துவக்கத்தில் ஓர் உதவி உபாத்தியாயருமாய் அமர்ந்தார். அக்கல்லூரிக்குத் தலைவரான மிஸ்டர் யார்க் (Mr. York) என்ற ஆங்கிலர் இவரின் இசைப் புலமையை நன்கறிந்து தம்முடைய கின்னரியை (Violin) இவருக்கு இனமாகக் கொடுத்துதவ, இவர் அக்கருவியினை இசை இலக்கண விதிப்படி குயிலுவதற்குப் பயின்று வந்தார். இவ்வருட முதற்கொண்டு இவரை யாவரும் "ஆபிரகாம் உபாத்தியாயர்" என அழைத்தனர்.

இவருடைய மருத்துவத் தொண்டைக் கண்டு இவரிடத்தில் மிக்க அன்புகொண்ட ஒரு பெரியார், 1877-ம் ஆண்டின் கோடை விடுமுறையில் மதுரைக் கோட்டம் பெரிய குளம் தாலூக்காவைச் சேர்ந்த யானைமலைப் பட்டி என்ற கிராமத்திற்குத் தம்முடன் இவரை அழைத்துச் சென்றார். அவ்வூருக் கருகேயுள்ள சுருளிமலையில் அப்போது நிஷ்டையில் அமர்ந்திருந்த கருணாநந்தர் எனப் பெயர்பூண்ட ஓர் அருங்கருணைச் சித்தர் தரிசனம் இவருக்குக் கிடைத்தது. அப்பெரியார் இவருடைய புத்தி கூர்மையையும் நற்குணத்தையும் கண்டு மகிழ்வுற்று, மருத்துவக் கலையின் பல்லரும் நுட்பங்களையும், கணிதத்தின் பல விதிமுறைகளையும், வீடு பெறுதற்கான

வழியினையும் நாளடைவில் விரித்துக் கூறி, பல அரும் மருந்துகளின் செய்முறைகளையும் கொடுத்துதவினர். இவ்வாருக இவர் அக் கோடை விடுமுறையை அப்புண்ணியரின் முன்னிலையில் இன்புறக் கழித்து அவரின் நல்லாசி பெற்றுத் திண்டுக்கல் வந்து சேர்ந் தார். அன்று முதல்கொண்டு அப்பெரியாரின் முறைப்படி மருந்துகளைச் செவ்வையாய்ச் செய்து தாம் உண்டுபார்த்துப் பின் மருத்துவ சிகிச்சையைப் பிறருக்குச் செய்யவும் ஆரம் பித்தார். அம் மருந்துகளுக்குக் "கருணாநந்தர் சஞ்சிவி மருந்து" களெனப் பெயரிட்டார் இவரை இது முதற்கொண்டு பலர் தம் குடும்ப மருத்துவராக அமைத்துக்கொண்டார் கள். இவ்வாருக இவர் 1882-ம் ஆண்டின் இறுதிவரைத் திண்டுகல்லில் உபாத்திமை ஊழியம் பார்த்தும், மருத்துவம் செய்தும், இசை நூல் விதிப்படி இசை பயின்றும், சிறு வர்க்கு இசை கற்பித்தும் வந்தார்.

இவருக்கு 1882-ம் ஆண்டில் ஞானவடிவு பொன்னம்மாள் என்ற ஒரு குணவதியை இவர்தம் பெற்ருேர் மணம் புரிவித்தனர். அவ் வமயம் தஞ்சாவூரில்; கிறிஸ்தவ சமயத் தோர் ஆதரவிலுள்ள ஒருபெண்பாடசாலைக்கு ஒரு தலைமை உபாத்தியாயினியும், ஒரு தமிழ்ப் பண்டிதரும் வேண்டுமெனக் கனம் பிளேக் (Rev. W. H. Blake) பாதிரியார் திருநெல் வேலியிலுள்ள ஆங்கிலப் பாதிரியாருக்குத் தெரிவிக்க, அவர் இப்புது மணமக்களை 1883-ம் ஆண்டு தஞ்சைக்கு அனுப்பிவைத்தார். இவ் விருவரும் "லேடி நேப்பியர் உயர் பெண் பாடசாலை" (Lady Napier's High Caste Girl's School) யில் வேலையில் அமர்ந்தனர் இதன் பிறகு இவர் தமிழ்ப் பண்டிதராய் இருந்ததின் நிமித்தம் தஞ்சையிலுள்ளோர் இவரை "ஆபிரகாம் பண்டிதர்" என அழைக் கத்தொடங்கினர். இக்காலத்தில் இவ்விரு வருக்கும் குறைந்த சம்பளமே கொடுக்கப் பட்டது. ஆதலால் இவ்விருவரும் ஒரு மனப் பட்டுத் தமக் கொழிந்த நேரங்களிலும், விடு முறை நாட்களிலும் கருணைச் சித்தர் திருவாய் மலர்ந்தருளிய முறைப்படி மருந்துகள் செய் தும், மருத்துவ சிகிச்சை செய்தும் வருவார் கள். இதன் பயனைப் பண்டிதரின் மருந்துகள் யாதொரு விளம்பரமுமின்றியே சற்று விரி வாய்ப் பரவின. இவருடைய மருந்துகளுக்குத் தேவையும் அதிகரித்தது. அதனல் இவர்களின் உபாத்திமை வேலைக்குச் சற்றுத்தடையும் ஏற்பட்டது. ஆதலின் 1890-ம் ஆண்டில் இவ் விருவரும் தம் உபாத்திமை வேலையிலிருந்து நீங்கிக் கொண்டார்கள்.

நம்பினோரைக் காக்கும் ஈசன் இவர்க ளுடைய விடாமுயற்சிக்கும் நன்னம்பிக்கைக் கும் தக்கவாறு சில்லாண்டுகளுக்குள் அருள் புரிய ஆரம்பித்து விட்டார். மருத்துவ வரு வாயைக் கொண்டு 1893-ம் ஆண்டில் இவர் தமக்கு ஒரு நல்லமனையை வாங்கி அதில் வசிக் கலுற்ருர். அச்சமயம் பம்பாய் மாகாணத்தி லும் மைசூர்ப் பிராந்தியத்திலும் "பிளேக்" என்ற கொடிய நோய் தோன்றி மக்களைப் பெருவாரியாய்க் கொள்ளை கொண்டது. அந் நாட்களில் மேலை நாட்டு முறைப்படியோ அல்லது வேறு எம் முறைப்படியோ இந் நோயைக் கண்டிக்க யாதொரு மருந்தும் இல்லை. அவ்வமயம் இவர் தம்பெருமுயற்சியா லும் மருந்துச் சிகிச்சையாலும் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் அந்நோயுற்ருேரைக் குணமாக்கினர். இதன் பொருட்டு அவ்விரு மாகாண சுகாதார அதிகாரிகளிடமிருந்து நற் சாட்சி பத்திரங்களையும் நன் மதிப்பையும் பெற்ருர். அவற்ருேடு சர்க்கார் மதிப்பையும் ஏழைகளின் விசுவாசத்தையும், கற்ருேர் நேயத்தையும் குறைவரப் பெற்ருர். 1900-ம் ஆண்டில் இத்தமிழ் நாட்டில் இவரை அறியா தார் ஒருவரு மிருந்திலர் எனச் சொல்வது மிகையாகாது. இதன்பின் வட இந்தியா, பர்மா, மலேயா, இலங்கை, தென் ஆப்பிரிக்கா முதலிய நாடுகளிலிருந்தும் இவர் மருந்துக்குத் தேவை ஏற்பட்டது. ஆதலின் தம் உடன் பிறந்தாரை வரவழைத்து அமர்த்தித் தம் மருத்துவத் தொழிற்சாலையை விரிவாக்கி "செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்"

என்ற முதுமொழிக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கினார்.

தம் புத்தி கூர்மையாலும் விடா முயற்சியாலும் விவசாயம், சோதிடம், இசைத் தமிழ், ஒளிச்சித்திரம் (Photograph), சித்திரம், இயந்திர நுட்பம் முதலிய பல அருங்கலைகளிலும் மிகத்திறமை பூண்டவராய் விளங்கினார்.

1899-ம் ஆண்டில் சுமார் *100*-ஏக்கர் விசாலமுள்ள தரிசான காட்டு நிலத்தை வாங்கி அதை "ஏதேன் தோட்டம்" என்று கவர்னர் முதல் பாமரர் வரை புகழும் வண்ணம் அமைத்துள்ளார். இவர் விவசாயத் துறையில் செய்த பணிக்காக *6* பொற்பதக்கங்களும், *36* வெள்ளிப்பதக்கங்களும் அநேக வெண்கலப் பதக்கங்களும் பெற்றுள்ளார்.

15—12—'11-ல் இவருடைய அருமை மனைவி விண்ணுலகேக *5—?—'12*ல் தமக்கு இரண்டாவது மனைவியாக பாக்கியம்மாளை ஏற்றுக் கொண்டார். பண்டிதர் அவர்கள் பொதுமக்களின் நன்மைக்காக அநேக தொண்டாற்றியுள்ளார். அவற்றின் பயனை இந்திய சர்க்கார் *25—6—09*ல் "ராவ் சாகிப்" என்ற பட்டமும், *12—12—11*-ல் "ஜார்ஜி மன்னர் தர்பார் மெடல்"லும் அளித்துளார்கள்.

இவ்வாறு பல துறைகளிலும் தொண்டாற்றிய இவருக்கு நான்கு ஆண்களும், ஆறு பெண்களும் உண்டு. இவர் தம் இல்லில் வைத்தாதரித்து வந்த இவரின் உடன் பிறந்தாருடைய மக்களும் பலருண்டு. *1901*ம் ஆண்டு இறுதியில் "கருணாநிதி வைத்தியசாலை இல்லத் தமிழறியும் சிறுவர் சங்கம்" எனப் பெயர்பூண்ட ஒரு சங்கத்தை ஏற்படுத்தி, கட்டுரை எழுதுதல், சொற்பொழிவாற்றுதல், இசைத் தமிழ் பயிலல், நாடகமாடல் முதலிய பல நிகழ்ச்சிகளையும் தம் பிள்ளைகளைக்கொண்டு நடத்தி, தாம் முன்னின்று கவனித்து வந்தார். பிறமொழிகளில் இசைப் பாக்களைப் பாடுவதால் அப்பாக்களின் பொருளறியாத—இசையெனும் அவற்றைக் கேட்கும்—இசையன்பர்களும் எள்ளளவேனும் ஆத்ம சாந்தியை அடைதல் அரிதென்பதை நன்குணர்ந்த இவர் ஏறக்குறைய *15* வர்ணங்கள், *25* சுரஜெதிகள், *200* கீர்த்தனைகள் முதலிய இசைப் பாட்டுக்களுக்குத் தமிழ்மொழியில் அரிய பொருள் நிறைந்த இசைப்பாக்களைத் தாமே இயற்றிப் பிள்ளைகளுக்குத் கற்பித்து வந்தார். இப்பாடல்களில் ஒரு நூறு பாடல்களை சுரம், சுருதி, லயக் குறிப்புகளுடன் அச்சிட்டு, "கருணாமிர்த சாகரத் திரட்டு" என்ற பெயருடன் *1907*ம் ஆண்டு வெளியிட்டிருக்கிறார். இவர் இரண்டாவது மகன் ஜோதிபாண்டியனையும், மூன்றாவது மகன் வரகுண பாண்டியனையும் மிடற்றுப் பாடல், கதா காலட்சேபம் முதலியவற்றில் மிக மேம்படப் பழக்கியும் வைத்தார். தமிழிசையில் எவ்வாறு இவர்கட்குப் பயிற்சி அளித்தாரோ அதேபோல் மேனாட்டு இசையிலும் இவர்கட்குப் பயிற்சி கொடுத்தார். நிற்க, "சத்தி வேத சன்மார்க்க சபை" என்றோர் சங்கத்தைத் தம் பிள்ளைகளுக்கென்று ஏற்படுத்தி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும், பள்ளிக்கூட விடுமுறை நாட்களிலும் தம் மக்களைக் கூட்டுவித்து, அவர்களுக்குச் சமய வளர்ச்சிக்கும், நல்லொழுக்கங்கட்கும் தக்கவாறு அருஞ்சொற்பொழிவுகளை நிகழ்த்தித் தாம் சொல்பவைகளில் மிக அருமையான பொருளை அவர்களைக் கொண்டு எழுதுவித்தும் வருவார். அவ்வாறு எழுதியவைகளை இரண்டு பாகங்களாக அச்சிட்டு "நன்மறை காட்டும் நன்னெறி" என்ற பெயருடன் *1918*-ம் ஆண்டு வெளியிட்டார்.

ஒலி வடிவமான கர்த்தனை இசை ஒலி வாயிலாகக் காண்பதுவே எளிதெனக் கண்டறிந்த இவர், இசைத் தமிழின் முன்னேற்றத்திற்கென உழைத்தவகை பலவாகும். அவற்றில் சிலவற்றைச் சுருக்கிக் கூறுவோம். இசைத் தமிழின் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்குமென்று இசை மாநாடுகளைக் கூட்டுவித்து நடத்திய மக்களில் இவரே முதல்வராவர். *27—5—12*ல் இவர்

இத்தேசத்தின் பல பாகங்களிலுமிருந்து, பல இசைப் புலவர்களையும், இயற்றமிழ்ப் புலவர்களையும் வரவழைத்து மூன்றுநாள் பரியந்தம் இசை மாநாட்டைத் தம் பொருளைக் கொண்டு நடத்தினர். 1915ம் ஆண்டிற்குள் இவ்வாறாக ஐந்து மாநாடுகளை நடப்பித்துள்ளார். H. H. கெய்க்குவார் அரசர் இவரை 20—3—16ல் "அகில இந்திய இசை மாநாட்"டிற்கு அழைத்திருந்தார். இவர் தம் மனைவி மக்களோடும், மற்றும் இசைப் புலவர்களோடும் அங்குச் சென்று; 'இசைத் தமிழின் மூலப் பொருளான சுருதிகள், வட நூலோர் கூறுமாப் போல் இருபத்திரண்டு அல்ல; அவைகள், 24, 48, 96 என்ற முறைப்படி உள்ளன" என்று பண்டைத் தமிழ் நூல்களிலுள்ள பல மேற்கோள்களை எடுத்துக் காட்டியும், தம் மக்களின் உதவியால் மிடற்றாலும் யாழ்க் கருவியாலும் இசைப்பித்தும், கணித முறைப்படி அவை நிற்கும் அலகு நிறையைத் தக்க சான்றுகளுடன் உண்மைப்படுத்தியும் தொன் தமிழிசையின் மாட்சியை நிலை நாட்டினர். பிறகு தஞ்சைக்கு வந்து 19, 20—8—1916ல் ஏழாவது இசைத் தமிழ் மாநாட்டைக் கூட்டுவித்து நடத்தினர். சங்க காலத்து இசைத் தமிழ் நூல்கள் யாவும் அழிந்துவிட்டாலும், சங்க காலத்து இயற்றமிழ் நூல்களின் உதவியால், அடங்கிக் கிடந்த இசைத் தமிழை மீண்டும் வெளிக்குக் கொண்டு வந்து விடலாம் என்ற முழு நம்பிக்கையுடன் சங்க நூல்களைப் படித்து ஆராய்ந்து, இசையில் பல அரும் விழுப்பொருளைக் கண்டறிந்து, வட நூல்களில் கூறியவற்றையும் அறிந்து இசைக்கு அடிமணியான "சுருதி" என்ற நுண்பொருளைப் பற்றி 1209 பக்கங்கள் கொண்ட "கருணாமிர்த சாகரம்" முதற்பாகம் என்றோர் அரும்பெரும் இன்னிசைத் தமிழ் நூலை 1917-ம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்.

இவர் தம் மகள் மரகதவல்லி, மனைவி பாக்கியம் அம்மாளைக் கொண்டு இந்நூலின் இரண்டாம் பாகத்திற்குரிய இராகங்களை உண்டாக்கிக் கொள்ளும் முறை, ஜீவசுரம் தெரிந்தமைக்கும் வழி, இராக ஸ்புட விதி, இலட்சண கீதஞ் செய்முறை முதலிய பல அரிய இசை நுட்பங்களை எழுதுவித்து, அவ்விரண்டாம் நூலின் முதல் 184 பக்கங்கள் வரையே அச்சிட்டார். அவ்வம்மை 14-7-19ல் பரமனடி அடைந்தார். அதுவு மன்னியில் 45 நாட்களுக்குள் அதிக உழைப்பால் களைத்திளைத்திருந்த அருமைப் பண்டிதரும் 31-8-1919-இல் தம் பூதவுடலை நீத்தார். ஆதலின் அவ் விரண்டாம் பாகம் அச்சிடப்படாமல் நின்று விட்டது. 1919-ம் ஆண்டில் 184 பக்கங்கள் மட்டும் அச்சிடப் பட்ட "கருணாமிர்த சாகரம் இரண்டாம் பாகம்" 946-ம் ஆண்டு லாலி எலக்ட்ரிக் அச்சுக்கூடத்தில் பண்டிதர் அவர்களின் மூத்த குமாரர் ஆ. சுந்தரபாண்டியன் அவர்களின் பார்வையில் மரகதவல்லி அம்மாளின் முயற்சியால் ஒருவாறு முடிவடைந்து வெளிவந்துளது.

மு. ஆபிரகாம் பண்டிதர் இசைத் தமிழ்க் கடலில் ஓர் கலங்கரை விளக்குப் போல் விளங்கியதற்கு அவர்தம் சிறுபிராயம் முதல் தாம் கைக்கொண்ட 3 விதிகளே காரணம் ஆகும். அவை, தன்னையும் தன் அறிவுப் பொருள்களையும் கர்த்தனுக்கு ஒப்படைத்தல்; எக் காரியத்தையும் எண்ணித் துணிதல்; ஒரு விநாடி காலத்தையேனும் வீணே கழிக்கா திருத்தல் என்பனவே.

இசை அரங்கு நடத்தல்

இயலிசைப் புலவர் கீவளூர் S. மீனாட்சி சுந்தரம் பிள்ளை

தமிழ் நாட்டிலே இசைக்கலையைப் பலமார்க்கங்களாகப் பிரித்து அனுபவித்து வந்துள்ளார்கள். பழமையான காலம்முதல் இன்று வரையும் நம்மிடை இருந்து நமக்கு மாறுத இன்பந்தருவது நாதஸ்வரமும் பரத நாட்டியமும் ஆகும். இவை இரண்டிற்கும் முறையே பெரிய மேளம் என்றும் சின்னமேளம் என்றும் பெயர் வழங்குகின்றன.

இதுவுமன்றி ஹரிகதா காலக்ஷேபம் என்றும் சங்கீதக் கச்சேரி யென்றும் பஜனைகள் என்றும் பலவாருக இசையின் போக்கு அமைந்துள்ளது.

இவற்றுள் தற்காலம் மக்கள் அதிகமாகக் கேட்க ஆசைப்படுவதும் மிக்க உயர்வாகக் கருதப்படுவதும் ஆகிய பகுதி, கச்சேரி சங்கீதம். இது சுமார் ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்பு நன்கு தேர்ந்த சங்கீதசாகித்ய பாவ அறிவுமிக்க பெரியோர்களால் ஆக்கப்பட்ட ஒருமுறை ஆகும். இதனுள், எல்லாவித இசை இன்பங்களையும் துய்க்க மார்க்கமும் கண்டுள்ளார்கள்.

இதனுள் முத்துத்தாண்டவர், அருணசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதி, தீக்ஷிதர், தியாகப்ருமம், பூச்சி ஸ்ரீனிவாச அய்யங்கார், நீலகண்ட சிவன், தாயுமானவர், ஸ்யாமா சாஸ்திரிகள், பட்டணம் சுப்பிரமணிய அய்யர், இராமலிங்க சுவாமிகள், அருணகிரி, மாரிமுத்தாப் பிள்ளை, கவிக் குஞ்சர பாரதி, சுப்பராமய்யர், பாபவிநாசமுதலியார், வேதநாயகம் பிள்ளை, அச்சுததாசர் போன்ற இன்னும் பல இசைக்கவிகள் பல ரசங்களிலும் வர்ணம் கீர்த்தனை பதம் ஜாவளி தில்லானு காவடிச்சிந்து திருப்புகழ் என்னும் இசை நுணுக்கம் அமைந்த பாட்டுக்கள் செய்துள்ளார்கள். இவைகளை யெல்லாம் உணர்ந்த இசைப் பண்டிதர்கள், அதனதன் இசை வன்மையை ஆராய்ந்து எல்லாவற்றையும் ஒருங்கேஇணைத்து இசை அரங்கில் முதல் இடை கடை மூன்றிடங்களிலும் இசைக்க வேண்டிய தரத்தையும் விதித்து இசைப் பகுதியின் முதிர்ந்த நிலைமையை உணர்த்தி இசைஅரங்குகள் நடத்தி தற்போது நாம் பின்பற்றி நடக்கவும் ஒரு நாகரீக எற்பாடாகச் செய்துள்ளார்கள்.

இதனுள் இசையரங்கில் முதலில் இயங்கும் இசைப்போக்கும் இடையில் இயங்கும் இசைப் போக்கும் கடைசியில் இயங்கும் இசைப் போக்கும் எவ்வாறு இருத்தல் வேண்டும், அவை எந்தெந்த பாவப் போக்கில் இசை நுணுக்கம் அமைந்ததாய் இருத்தல் வேண்டும் என்பதையும் நிச்சயித்து வைத்துள்ளார்கள். இந்த முறையின் வாயிலாக நாம் பலரசங்களையும் அனுபவிக்க ஹேதுவாதலாலும் இவை முடிந்த இசைப்பகுப்பாதலாலும் நமக்கு முன்னேர்கள் இதை ஒரு சம்பிரதாயமாகக் கையாண்டு வந்தார்கள்; நாமும் தற்போது கையாண்டு வருகிறோம்.

ஆகவே இதன் முதல் இடை கடை இசைவன்மையின் திறத்தையும், ஸாஹித்ய ரஸ பாவ நிலைமையின் போக்கையும் நாம் உணர்ந்து அனுபவிக்கத் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

இசை அரங்கின் முதற் பகுதியில்—அதாவது கச்சேரி மூன்றுமணி நேரம் என்று வகுத்துக் கொண்டால், முதற் பகுதி முன் ஒரு மணி நேரமும் இரண்டாவது பகுதி அடுத்த ஒரு மணி நேரமும் மூன்ருவது பகுதி அடுத்த ஒரு மணி நேரமுமாகப் பிரித்து முதலிடை கடை என்று நிர்மாணித்துக்கொண்டு முதன் முதலில் ஒருவர்ணம் பாடி, கணபதி

தோத்திரமாக விநாயகர் பேரில் ஒரு கீர்த்தனம்பாடி, இதைத் தொடர்ந்து நான்கிற்குக் குறையாது மத்திமகால கீர்த்தனங்களாகப் பாடி, இதனுள் இரண்டு கீர்த்தனங்கட்குக் கொஞ்சம் ராகமும் சுரமும் பாடுவதோடு இக்கீர்த்தனங்கள், கூடுமானவரை ஜன்னிய ராகமாயுள்ள அபூர்வ ராகங்களில் இருந்தால் மிகநலமென்றும் இதோடு இப்பகுதியின் பின் பகுதியில் இரண்டு கீர்த்தனம்-விளம கால கீர்த்தனம்-சிறிது விரிவாக ராகமும் சுரமும் பாடிப் பாட வேண்டுமென்றும் இக்கீர்த்தனங்கள் பூராவும் பக்திச்சுவை உள்ளதாயும் இதற்கொத்த ராக மூர்ச்சனையும் மத்திம விளம கால தான நிலைமையும் அமைந்துள்ளனவாயும் இருத்தல் வேண்டும் என்றும் விதித்துள்ளார்கள்.

இரண்டாவது பகுதியாகிய அடுத்த இரண்டாவது மணியில் ஏதாவது ஒரு ராகத்தை எடுத்துக்கொண்டு அதன் மூன்று ஸ்தாயியிலும் நன்கு விஸ்தரித்துப்பாடி, அதன் ஒவ்வொரு அங்கங்களிலும் நின்று நிலைத்துப் பாடி, அது முடிந்ததும் கடைசியாகத் தானம் என்னும் ஓர் சொல்லை உதவியாகக் கொண்டு அந்த முறையில் ராகத்தின் சஞ்சாரங்களில் நின்று மத்திமகாலப் போக்கில் பாடி, அது முடிந்ததும் இதுவரை பாடி வந்த பாட்டுக்களின் தாளகாலப்ரமாணத்திற்குக் கீழ்க்காலமான நான்குகளை யென்னும் காலப்ரமாணத்திலோ அல்லது அதற்கு மேற்பட்ட காலப்ரமாணமுள்ள தாளங்களிலோ பக்திச் சுவையுள்ள சொல்லாலோ ஸ்ருங்காரச்சுவை உள்ள சொற்களாலோ மிக மிகக் குறைந்த மூன்று நான்கு சொற்களால் ஆக்கப்பட்ட ஒரு கருத்தை விளக்கும் தன்மையில் அமைந்த சொற்றொடரை அந்த ராகத்திற்கு இணைய விந்யாசப்படுத்தி அதே ஸாஹித்யத்தை விளமம் மத்திமம் துரிதம் என்னும் மூன்று காலங்களிலும் பாடி, முறையே மறுபடியும் துரிதம் மத்திமம் விளமம் என்கிற முறையாகத் திரும்பிப் பாடி இதனுள் திஸ்ரகாலம் என்னும் ஒரு காலத்திலும் அந்த ஸாஹித்யத்தை நிரப்பி முதலில் அமைத்துக்கொண்ட காலத்திற்கு வந்து பாடி, மறுபடி அந்தத்தாள மத்திம துரித காலங்களில் ஸ்வரம் அந்தத் தாளத்தில் கால் ஆவர்த்தனம் அரை ஆவர்த்தனம் முக்கால் ஆவர்த்தனம் ஒரு ஆவர்த்தனம் என்கின்ற முறைப்படிப் பாடி, அதற்குமேல் ஒன்றரை இரண்டு நான்கு ஆவர்த்தனங்களும் பாடிப் பல்லவியை எடுத்தும் இதுபோல—எப்படிமுறையேதாள ஆவர்த்தனத்தைப் பெருக்கிக்கொண்டு போனோமோ அது போல—நான்கு இரண்டு ஒன்று அரை கால் அரைக்கால் ஆவர்த்தனங்களாகக் குறைத்து, அங்கங்கு அந்த இடங்களுக்குக் குறியாக அந்த ராகக்களை நன்கு சோபிக்கச் செய்யும் ஸ்வர நாதத்தில் நின்றுகாட்டி முடிவாக ஏதாவது மூன்று ஒரே கணக்கைக் குறிக்கும் தாளக்கணக்கு எண்ணிக்கையில் ஸ்வரம்பாடி பல்லவியை எடுத்தல் வழக்கம்.

இதோடு கூட இன்னும் ஒவ்வொரு ஜாதிகளிலும், ஸ்வரம்பாடுவதும் சம்பிரதாயத்தில் உண்டு. ஆனால் அதனைத் தற்போது அவ்வளவு பேணி, யாரும் பாடுவது ரொம்பக் குறைவாக உள்ளது. இரண்டாவது பகுதியாகிய இப்பகுதி நமதுகர்நாடக சங்கீதத்தின் உயர்வான இலக்கணப் பெருமையை எடுத்துக் காட்டும் பகுதி ஆகும். அதோடு பாடுகின்ற வித்வானின் சொந்த அறிவாற்றலின் திறத்தையும் நன்கு உணர்த்தும். இங்குதான் நமது சங்கீதத்தின் பூரண அழகும் பொலிவது.

இப்படிப்பாடி முடிந்ததும் தாளத்திற்கே தனி அங்கம் வகிக்கும் தன்மையிலுள்ள மிருதங்கத்திற்குத் தனிஆவர்த்தனம் விட்டுத் அவர்கள் இந்தத்தாளத்தில் செய்யக்கூடிய இலக்கண ஜாலங்களை யெல்லாம் கண்டு மகிழ்வதோடு இந்தப் பல்லவியையும் அவர்கள் விளமம் மத்திமம் துரிதகாலங்களில் வாசிக்கக் கேட்டு, அவர்கள் முறையே முடித்து பல்லவி எடுக்கும்போது பாடகரும் சேர்ந்து எடுத்து முடிப்பது ஸம்பிரதாயம்.

அதன்பின் கடைசியாக உள்ள மூன்றாவது மணியில் பல்லவி முடிந்தஉடனே ஒரு

விருத்த ராகமாலிகை பெரும்பாலும் பக்திச் சுவையிலேயே பாடுவது என்பதும் (ராக மாலிகை என்பது ஒரு விருத்தத்திலேயே நான்கு அல்லது ஐந்து ராகங்களில் விருத்தத் தின் கருத்திற்கு ஒத்தமுறையில் பாவம் ததும் பப்பாடுவது) அதன்பின் ஒரு பதமும், ஒரு ஜாவளி, ஒரு ஹிந்துஸ்தானி, ஒரு திருப்புகழ், ஒரு காவடிச்சிந்து, ஒரு தில்லானு இவை களும் பாடி மங்களம் பாடிக் கடைசியாக மத்யமாவதி ராகத்தைச் சிறிது பாடி முடிக்க வேண்டு மென்பதும் சம்பிரதாயங்களாக ஏற்படுத்தியுள்ளார்கள். இவையே நம் முன் னோர்கள் வகுத்துத்தந்த-இசையின் முழுத் தோற்ற-இசை அரங்கின் ஸம்பிரதாயங்கள் ஆகும்.

ஆனல் இதனுள் நாம் ஒன்று கவனிக்க வேண்டியது மிக மிக அவசியமாகும். அஃதென்ன வெனில் இக்கச்சேரி ஸங்கீதத் தில் மொழித் தகராறே கிடையாது. எந்த மொழியிலாஞலும் கச்சேரி ஸங்கீதமென்பது மேலே விவரிக்கப்பட்ட மூன்று பகுதிகளின் இசைத்தரத்திற்கு ஒத்ததாக இருக்கவேண்டு மென்பதுதான் உண்மையான நோக்கம்.

ஆனல் இந்த முறை, தமிழ்நாட்டு இசைப் புலவர்கள் வகுத்துள்ளதாலும் இன்னும் இம்முறையே பின்பற்றிவருவதாலும் தமிழ் நாட்டிலல்லாது வேற்று மொழி நாட்டவர் கள் இம்முறைச் சங்கீதத்தை இவ்வளவு ஆத ரித்து அதற்கு வேண்டிய பெரும்பொருளையும் ஒரு சிறிதும் பொருட்படுத்தாது கொடுத்துக் கேட்டு வருவது வழக்கத்தில் இல்லை. இசையின் உண்மையான பெருமைகள், அதன் இலக்கண இலக்கியங்கள் முற்றும் உணர்ந்த இசைநாகரீகம் படைத்த மரபினன் தமிழ் நாட்டவன்; ஆதலால் இம்முறை இன்னும் தமிழ் நாட்டில் இயங்குவது போல் வேறெந்த மொழி நாட்டிலும் இயங்குவதாகக் காணேம். அன்றியும் தக்க இசைக் கவிகளும் இசைப் பண்டிதர்களும் வேறெந்த மொழி நாட்டிலும் இவ்வளவு விசேஷமாகத் தோன்றி, தொழில் செய் வாரையுங் காணேம். இவ்வளவேன்? கர் நாடக ஸங்கீதத்தின் உச்சஸ்தானத்தை அடைந்து அதற்கு அறிகுறியாகக் கீர்த் தனங்கள் இயற்றியுள்ள இலக்கியப் பண்டிதர்களாயுள்ள தியாகப்ருமம், தீக்ஷிதர், ஸ்யாமா சாஸ்திரிகள் ஆகிய மூவருமே தமிழ் நாட்டில்தான் பிறந்தவர்கள். அவர்கள் தங்கள் தாய்மொழியில் கீர்த்தனம் இயற்றி யுள்ளது இயற்கையே. ஆயினும் தாங்கள் வாழ்ந்த தமிழ்நாட்டின் இசைமரபன்றி, அவர்கள் சொந்த மொழி மரபைப்பின்பற்றிச் செய்ய அவர்களுக்கு ஒரு சிறிதும் சந்தர்ப் பமே கிடையாது. ஏனெனில் தமிழ் நாட்டில் தலைமுறை தலைமுறையாகப் பழகி வந்ததோ டல்லாது, அவர்கள் கற்றுக்கொண்டு வித்வான்களாக ஆனதும் தமிழ்நாட்டு-தமிழிசை மரபிலக்கணமே அன்றி வேறல்ல. இதற்குச் சான்று தீக்ஷிதர் கீர்த்தனங்களும் தியாகராஜ அய்யர்வாள் கீர்த்தனங்களும் ஸ்யாமாஸாஸ்திரிகள் கீர்த்தனங்களும் தவிர, அம்மொழிகளில் உள்ள மற்றைய பாடல்கள் இவ்வளவு இசைநுணுக்க இலக்கணப் பாகு பாடு அமைந்துள்ளனவாகப் பெரும்பகுதி காணக் கிடக்கவில்லை. இதிலிருந்தே தமிழ் நாட்டினனே மிக்க இசை நாகரீகம் அடைந் திருந்தான் என்பது மிக எளிதாகப் புலனுகின் றது.

ஏதோ நடுவே சில வருடங்கள் பிற மொழிப் பாடல்கள் தமிழ் நாட்டில் செல்வாக்குற நேர்ந்தது. இதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. முன்பெல்லாம் கச்சேரி யென்பது கோவில்களிலும் பெரும் பணக் காரர்கள் வீட்டிலும், அங்கொன்று இங் கொன்று நடப்பதுதான் வழக்கம். அதோடு ஸங்கீத வித்வான்களும் மிக மிகக் குறைவு. தமிழ் நாட்டிற்கே புறம்பான வேற்றுமொழியில் இசையைப் புகவிட்டிருந் தோம். ஆகவே பலரும் இதைப்பின்பற்றவோ அல்லது இதைச் சிந்தித்து நன்மை தீமை களுக்கு ஏதாவது பரிகாரந் தேடவோ முடி யாது போயிற்று. அதோடு முன்பெல்லாம்

சங்கீதக் கச்சேரி யென்றால் நூற்றிற்கு ஒருவர்கூட பாட்டில் உள்ள கருத்துத் தெரிந்து இசையை அனுபவிக்கப் போகிற வர்களாக இல்லை. ஏதோ சங்கீதக் கச்சேரிக் குப் போவதென்றால், அது ஒரு கௌரவமான காலப் போக்கென்றே சென்று வந்தார்கள். இவர்களில், பொருள் தெரியாவிடினும் அந்த இசை இலக்கணப் பாகுபாட்டின் கோவை யையே கேட்க ஆசைப்பட்டுச் சென்றவர் களும் உண்டு. இவ்வள வேன்? முதலில் பாடகருக்கே, தான் பாடும் பாட்டின் பொருளே தெரியாதே! அல்லாமலும் சொல் உச்சரிப்புக்கூட அவருக்கு வராதே! இந்த நிலைமையில் பாடுபவரும் கேட்பவரும் எவ் வளவு அழகாகப் பொருளுணர்ந்து பாடியும் கேட்டும், உடலும் உயிரும் போலுள்ள இயலும் இசையுங் கலந்த இசைப் பாட்டின் இன்பத்தை அனுபவித்திருப்பார்கள்! இதனால் ஏதோ நடந்தவரை சரி, நாமும் கேட்டவரை சரியென்று இதைப்பற்றிச் சிந்திப்போரற் றுக்கிடந்தது.

நாளாக நாளாகத் தமிழ்நாட்டில் இசைப் பாட்டு மோகம் மக்களுக்கு அதிகம் பிடிக்க ஆரம்பித்தது. இதன் காரணமாக ஆங்காங்கு சங்கீத சபைகளும் அதிகமானதோடு, சாதா ரண எளிய மக்கள் வீட்டுக் கல்யாணங் களிலும்கூட ஒரு சங்கீதக் கச்சேரி வைக்கா விட்டால் கௌரவமில்லை என்கிற மனப் பான்மையும் தோன்றி, இசை அரங்குகள் அதிகம் நடக்கவும் அதிகமான மக்கள் கேட்கவும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. இக் காலத்தில்தான் மக்கள் சிந்திக்கலாயினர்: கச்சேரி முதலிலிருந்து கடைசிவரை ஒன்றி ரண்டு பாட்டுக்கள் தவிர மற்றப் பாட்டுக் களின் பொருள் இன்னதெனவே விளங்க வில்லையே; அங்கெல்லாம் நாம் பொருள் விளங்க ரசிக்க முடியாது போகின்றதே; அங்கெல்லாம்கூட நமக்குத் தெரிந்த தமிழ் மொழியில் கர்நாடக சங்கீதத்தில் தேர்ந்த இசைப்பாட்டுக்கள் பாடினால் கச்சேரி முழு வதையுமே நாம் எப்படி எப்படியெல்லாம் ரசிக்கலாம் என்றெல்லாம் சிந்திக்கவும் கேட்கவும்கூட மக்கள் ஆரம்பித்து விட்டார் கள். இது இயற்கைதானே!

தமிழ் நாட்டில் எங்குப் பார்த்தாலும் ரேடியோவும் கிராமபோன் பிளேட்டும் வர மக்கள் எனக்கு இசையே வேண்டா மென்று சொன்னாலும், கேட்காமல் முடியா தென்கிற நிலைமை வந்து விட்டது. இதன் காரணமாக, நம் தமிழ்மொழியில் இப்படி யுள்ள இசை நயம் அமைந்த பாட்டுக்கள் இல்லையா என்ன என்று ஆங்காங்கு மக்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

இச்சமயத்தில் தமிழ்நாடு செய்த தவப் பயனால் தனவணிக மன்னர் டாக்டர் ராஜா ஸர் அண்ணாமலைச் செட்டியார். அவர்கள் இதற்கென ஓர் வழிகாண எண்ணி விலைமதிக் கொணா அவர்கள் அவகாசம் பூராவையும் இதற்கென ஈந்து முதன்முதலில் பத்தாயிரம் ரூபாய்கள் உதவி, தமிழிசையின் தொன்மை யின் தன்மையை மீண்டும் கொண்டுவர அரும்பாடு பட்டார்கள். இன்று தமிழ் நாடு பூராவும், ஏன், தமிழ்நா டல்லாத பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற இடங்களிலெல் லாம்கூட தனித்தமிழ்மொழியில் மூன்றுமணி நேரங்களல்ல, நான்கு ஐந்து மணி இசை அரங்கின் இசைத்தரம் ஒரு சிறிதும் குறையாது கச்சேரி செய்ய முடியும் என்பதை நிரூபித்துக்காட்டவும், மக்கள் முன்னைவிடத் திரள் திரளாக வந்து கேட்டுக் கர்நாடக சங்கீதத்தின் பயனை அடையவும் செய்த அவர்களின் பயன்கருதா நன்றிக்குத் தமிழ் உலகம் என்ன நன்றி செய்து ஈடு செய்யப்போகின்றது?

All kinds of

PAPERS, BOARDS, BOTH INDIAN AND FOREIGN, FOR PRINTING, PUBLISHING, ALLIED TRADES AND INDUSTRIES - -

AND

ALL KINDS OF NON-FERROUS METALS, WHOLESALE & RETAIL.

Kindly Enquire:

P. S. NANJAPPA CHETTY & SONS

EXPORTERS & IMPORTERS

DEALERS IN METALS, PAPERS, BOARDS, STATIONERY ETC.

Telegrams: "METALMEN" Telephone: 4275

MADRAS

Offices At:—

1st Floor, Court House, Carnac Road, Dhobietallow, BOMBAY 2.

2/34, Mint Street, MADRAS 2.

206, Oppanakara Street, COIMBATORE.

ஸ்ரீ அம்பிகா சுதேசி ஸ்டோர்ஸ்

Props : M. S. பிரதர்ஸ்

ஜவுளி வியாபாரம்

37, அரண்மனைக்கார தெரு, மதராஸ்.

எங்களிடம் எக்ஸ்போர்ட்டுக்கு தேவையுள்ள ஷர்டிங்கு, உயர்தர கைலி ரகங்களும், வாயில், பீஸ் தரங்களும், பல ஊர் பட்டு, ஜரிகை, பேட், சாதா வேஷ்டி, சேலை, துப்டா தரங்களும், பெட்ஷீட்டு, டவல் மடிசுகளும் சொந்த தறியில் தயாரித்து மொத்தமாகவும், சில்லரையாகவும் விலை சரசமாக வியாபாரிகளுக்கு கொடுக்கப்படும்.

SRI AMBIKA SWADESI STORES

Proprietors : M. S. BROTHERS

Whole Sale dealers in Handloom Textiles

37, ARMENIAN STREET, MADRAS.

உங்கள் அபிமானத்தினால்

'கலை' ஒரு அற்புதம்

செய்யப்போகிறது !

மிகப் பெரிய அளவில் கவர்ச்சிகரமான தோற்றத்துடன் ஆயிரக் கணக்கான கலர் படங்களுடன் உயர்ந்த ஆர்ட் காகிதத்தில் "கலை" மலர் ஒன்று வெளியிட நிச்சயித்துள்ளோம். சினிமா, சங்கீதம், நாடகம், நடனம் இந்த அம்சங்களுடன் மலர் மணம் வீசும்.

இந்த நான்கு துறைகளிலும் ஈடுபட்டவர்கள் தங்கள் போட்டோவைத் தங்கள் தொழில் முறை தெரிவித்து எங்களுக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப் பெரிய திட்டத்திற்கு உங்கள் மனப்பூர்வமான ஒத்துழைப்பை பெரிதும் வேண்டுகிறோம்.

உங்கள் விலாசத்துடன் படங்களை டிசம்பர் 1946 க்குள் அனுப்பி வைக்கும்படி கோருகிறோம்.

போன் 4037.

பாசரசு காரியாலயம், 45-46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை 1

பாரதி சொன்னார்

"நானும் பிறந்தது முதல் இன்றுவரை பார்த்துக்கொண்டே வருகிறேன். பாட்டுக் கச்சேரி தொடங்குகிறது. வித்வான் 'வாதாபி கணபதிம்' என்று ஆரம்பம் செய்கிறார். 'ராமநீ ஸமான மெவரு' 'மரியாத காதுரா' 'வரமு லொஸகி' .... ஐயையோ, ஐயையோ, ஒரே கதை.

எந்த ஜில்லாவுக்குப்போ, எந்த கிராமத்திற்குப் போ. எந்த 'வித்வான் வந்தாலும், இதே கதைதான். தமிழ்நாட்டு ஜனங்களுக்கு இரும்புக் காதாக இருப்பதால், திரும்பத் திரும்பத் திரும்பத் திரும்ப ஏழெட்டுப் பாட்டுக்களை வருஷக் கணக்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தோல் காது உள்ள தேசங்களிலே இந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள்."

— மகாகவி பாரதியார்.

இசையும் மகளிரும்

ஜி. கே. ஞானம்பாள், B.A.

கலைகளுக்கெல்லாம் உயிர்போன்றது இசைக்கலை. இது தெய்வீகமானது. இக்கலைஞானத்தை அடையக் கூடிய பாக்கியம் ஒரு சிலருக்கே உண்டு. இது சாதாரணமாக எல்லாருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. இக்கலையைப் பழந்தமிழர் எவ்வாறு பலவாற்ருலும் போற்றி வளர்த்தனர் என்பதையும், இசையின் பெருமையையும் சங்க நூல்களாகிய 'பட்டினப்பாலை' 'திணைமாலை நூற்றைம்பது' 'முல்லைப் பாட்டு' முதலிய நூல்கள் மூலம் அறியக் கிடக்கின்றோம். துன்பத்தினல் வாடும் மக்களுக்கும் இசை இன்பத்தை அளிக்கின்றது. நோயாளிகளும் தம் நோயின் வருத்தத்தை ஒருவாறு மறக்கின்ருர்கள். ஏதேனும் ஒரு பெருங்காரியத்தை நிறைவேற்றக்கூட இசையே காரணமாயிருக்கின்றது. கலைவாணியும் எப்பொழுதும் கையில் வீணையுடனேயே நமக்குக் காட்சியளிக்கிருள்.

இவ்வாறு பலவாற்ருலும் சிறப்புற்ற சிறந்த இசையில் சக்தியுருவாயமைந்த மகளிருக்குள்ள சம்பந்தத்தைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். இசைக்கும் மகளிருக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறதென்பதும், அது இயற்கையிலேயே அவர்களின் உள்ளத்தில் ஊடுருவி இருக்கிறதென்பதும் நாம் நமது வாழ்க்கையில் சாதாரணமாகக் காண்கிருேம், குழந்தைப் பருவம் முதற்கொண்டே நாம் இசையின்பத்தை அனுபவிக்கின்ருேம். உதாரணமாகக் குழந்தைகளைத் துயிலுறுத்தத் தாய்மார்கள் இனிய தாலாட்டிசைக்கின்ருர்கள். குழந்தையானது அத் தாலாட்டின் இனிய ஓசையைச் செவியுற்றுக் கண்ணுறங்குகின்றது. பிறகு அப் பெண்ணனவள் தன் வளர்ச்சிப் பருவம் ஒவ்வொன்றிலும் இசையையே உபயோகப்படுத்துகின்ருள். அப்பெண்ணனவள் அம்மானைப் பருவத்தின்பொழுது, தன் கைகளால் வெறும் அம்மானையை மட்டும் மேலும்கீழும் போட்டு விளையாடுவதன்றி இசையின் மூலமாகவே அதன் தாளத்திற்கேற்ப ஆடுகின்ருள். விளையாட்டிலும் இசையையே பெரிதாகக் கருதுகின்ருளவள். பல மகளிர் ஒருங்கு சேர்ந்துகொண்டு கும்மி, கோலாட்டம் முதலியன விளையாடுகையிலும் அவர்கள் இசையையே முக்கியமாகக் கருதுகிருர்கள். அடுத்தபடியாக, சிறப்பான திருமணம் முதலிய காலத்தில் அவர்கள் நலங்குப் பாட்டு, ஊஞ்சல் பாட்டு முதலியவைகள் பாடுகின்ருர்கள். மற்ற சமயங்களிலும் பெண்கள் தங்களுடைய இசைஞானத்தை அபிவிருத்தி செய்ய அக் கலையில் தங்களுக்கிருக்கும் ஆர்வத்தினல் கிராமவாசம், பட்டணவாசம் ஏழை பணக்காரரென்ற வேற்றுமை பாராட்டாமல், நம் நாட்டுப் பாடல்களோ அல்லது இதர நாட்டுப் பாடல்களோ பாடி வருகிருர்கள். பண்டைக் காலத்தில் தினைப்புனம் காவல் புரிவதற்கு மலைநாட்டு மகளிர் பரண்களின் மீதிருந்து கொண்டு இனிய பண்களைப் பாடியே பறவைகளை அவ்விசையில் மயங்கும்படிச் செய்தார்களாம். அப்பறவைகள் அவ்விசையின்கண் மயங்கிப் பயிருக்குக் கேடு விளைக்கா வண்ணம் காத்தார்கள்.

> சாந்தம் எறிந்துழுத சாரல் சிறுதினைச்
> சாந்தம் எறிந்த இதண்மிசைச்-சாந்தம்
> கமழக் கிளிகடியும் காரி மயிலன்னுள்
> இமிழக் கிளிஎழா ஆர்த்து
>
> — திணைமாலை நூற்றைம்பது

மகளிர்க்கு ஏதேனும் மனத்துன்பம் ஏற்பட்ட காலத்தும், தங்களையுமறியாமல்

பாட ஆரம்பிக்கின்றனர். அது ஒருவாறு அவர்கள் துன்பத்தை மறக்கச் செய்கின்றது. இன்றைக்கும் நாளைக்கும் வெகு உல்லாசமாக நம் மகளிர் பாடுவதிலிருந்தே, தமிழும் இசையும் இயற்கையாகவே அவர்களுடைய இருதயத்தில் ஒட்டி ஊறி வளர்ந்துகொண்டிருக்கிறதென்பதை அறியலாம்.

இவ்வாறு விளையாட்டாகவே மகளிர்க்கு இசையில் ஒரு இன்பமும், கருத்தும், ரசமும், உண்டாகின்றன. இசைக் கலையானது முன் காலத்தில் முதன்மை அடையாமற் போனதின் காரணங்கள் பலவுள. அறம் பொருள் இன்பம் என்ற மூன்றும் இவ்வுலக வாழ்க்கைக்குச் சிறந்தனவா மென்னும் உண்மையை நன்குணராது, அறமே யாவரும் பின்பற்றுதற்குரியது; மற்ற இன்பம் கைவிடுதற்குரிய தென்றெண்ணினர்கள் இடைக காலத் தமிழ் மக்கள். இசையினுல் இன்ப மிகுதலின் அதனைக் கைவிட வேண்டுமென்று புகுந்த புத்தரும் சைனரும் ஒருங்கே இசைத் தமிழை ஒழிக்க முயன்றனர். இப்படியாகப் பல பண்கள் உயிர்ப்பொழிந்து போயின. கணிகையரிடத்தில் மட்டும் அவை சிறுபான்மை வழங்கி வந்தன. எஞ்சியிருந்த வைதிகப் பண்களை நம்பியாண்டார் நம்பி தொகுத்தார். அவைகளும் பெண்களின் உதவியால் தேவாரப் பதிகங்களில் இசைக்கப் பட்டன. பிந்திய காலங்களில்கூட முக்கியமாகப் பெண்களினுல்தான் இசைக் கலையானது நிலை பெற்று வந்ததாகத் தெரிகின்றது. சங்கீதம் உலகில் உயிர்வாழ்வதற்கும், ஜனங்களிடையே இசையமுதத்தை அள்ளி அளிப்பதற்கும் ஆடவர்களைக் காட்டிலும் மகளிர் பெருங்கருவிகளா யிருக்கின்ருர்கள்.

பெண்களின் இசைப்பற்றைப் போல் வேறு ஒருவர்க்கும் இருப்பதில்லை யென்பது திண்ணம். சீவக சிந்தாமணியில் கதா நாயகனை சீவகன் ஆண்களைப் பார்ப்பதுமில்லை என்ற விரதத்துடன் இருந்த சுரமஞ்சரி என்ற பெண்ணின்பால், ஒரு பழுத்த கிழவன் வேடங்கொண்டு சென்று இசைபாடி அவளை வசப்படுத்த, அவன் இசையைக் கேட்ட பெண்டிர் யாவரும் வேடன் பறவையைப் போலக் கத்திய ஓசையைக் கேட்டு மயங்கி ஒரே ஓட்டமாக ஓடிவரும் மயிலினங்களைப் போல் வந்தனர். இவ்விசையின் பேரில் அவர்களுக்கு இருக்கும் பற்றுதான் என்னே! தன் மன வைராக்கியத்தையும் அல்லவா மாற்றி விடுகிறது அவ்விசை யின்பம்!

இப்பேர்ப்பட்ட இசையில் ஈடுபட எல்லாப்பெண்களுக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கு இசையில் ஆர்வம் இயற்கையிலேயே ஊறிப் பொங்குகிறது. ஓர் ஊக்கமும் ஏற்பட்டால் - ஏற்படச் செய்தால் அவர்களால் இவ்விசைக் கலைக்கு உண்டாகும் உயர்வைச் சொல்லவும் வேண்டுமா?

சத்தயுத்தம்!

"இடையே முப்பத்தைந்து ஆண்டுகள், பாட்டுக் கச்சேரி என்ருல், சிவ சிவா, ஒரே சத்தச் சண்டைதான்; அமளிதான்! ஒரு வார்த்தை விளங்காது. பாடகர் தெலுங்கை உச்சரிப்பதே மகா கோரமாயிருக்கும். உச்சரிப்பு, புகையிலை போட்டுப் பேசுவது போலிருக்கும். தமிழைக்கூட, "அழகுள்ள துரையிவர் யாரடீ?" என்பதை "அழ......குள்ள......துரை......இவர் ஆறடீ......குள்ளதுரை ஆறடி தன்னனனனு" என்று பிர்க்கா வாங்குவார்கள்! தானம் தஹனம் ஆலாப்னம், ஸ்வரம் பாடி விட்டாலே போதும்! வாதாபி கணபதிம், ராமநீ சமானம், எந்துகு பெத்தல, நீநாம ரூப முலகு, மங்களம்! ......கை தட்டி முந்நூறு நானூறு வாங்கிக் கொண்டு செல்ல வேண்டியதுதான்."

—'தமிழிசை முழக்கம்' என்ற நூலில் யோகி சுத்தானந்த பாரதியார்.

தாய்மொழியில் சங்கீதம்

நாரண-துரைக்கண்ணன்

தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரைப் பற்றிச் சங்கீத வித்வான்கள் பெரும்பாலாருக்குத் தெரிந்திருக்கும். அவர் கதா காலட்சேபம் செய்வதில் பிரசித்தி பெற்றவர். ஒரு முறை அவர் வெளியூரில் காலட்சேபம் செய்வதற்காகத் தம் சகாக்களுடன் கட்டைவண்டியொன்றில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தாராம். ஒரு காட்டுவழியே போகும்போது திருடர்கள் சிலர் இவர்களை வழி மறித்துக்கொண்டு இவர்களிடமிருந்த பொருள்களையெல்லாம் பறித்துக்கொண்டனராம். இவ்விதம் பறிகொடுக்கப்பட்ட பொருள்களில் தம்புரா வொன்றும் இருந்ததாம். அது மிக விலையுயர்ந்ததாதலாலும், தாம் காலட்சேபம் செய்யப் போகுமிடத்துக்கு அது அவசியம் இருக்க வேண்டுமாதலாலும் திருடர்கள் அதைக் கவர்ந்து கொண்டதற்காக, கிருஷ்ண பாகவதரவர்கள் மிகவும் வருந்தினராம். இந்நிலையில் அவருக்கு ஒரு யுக்தி தோன்றியதாம். உடனே அவர் தம்புராவை வைத்திருந்த திருடனைப் பார்த்து, "அப்பா, நீ இந்தத் தம்புராவை எடுத்துக் கொள்வதில் ஆட்சேபனையில்லை. ஆனால், அதிலுள்ள 'ஜீவா' (தம்புராவின் குதிரையில் கம்பிகள் தங்குவதற்குரிய பட்டு நூல் கத்தையே 'ஜீவா' என்று கூறப்படுகிறது) வை மட்டும் எனக்குக் கொடுத்துவிட்டால் உபகாரமாயிருக்கும். அதனால் உனக்கு ஒன்றும் பிரயோசனமேற்படாது" என்று சொன்னாராம்.

"உங்களுக்கு மட்டும் இதனால் என்ன பலன் ஏற்படும்?" என்று அந்தத் திருடன் கேட்டானாம்.

பாகவதர், தம்புராவிலிருந்து இனியநாதம் எழுவதற்குப் பேருதவியாயிருப்பது 'ஜீவா' தான் என்றும், ஆகவே, இது தம்புராவுக்கு ஜீவன் போன்றதென்றும், அதனால்தான் இப்பட்டு நூல்கத்தையை 'ஜீவா' எனக் குறிப்பிடுகிறார்களென்றும் திருடனுக்கு விஷயத்தை விளக்கிக் கூறினாராம். அவர் அத்துடனில்லாது அத்திருடனிடமிருந்த தம்புராவை வாங்கி அதிலிருந்த 'ஜீவா'வை எடுத்துவிட்டுத் தந்திகளை மீட்டிக் காட்டினாராம். ஜீவா இன்றித் தந்திக்கம்பிகளை மீட்டியதில் நாதம் நன்றாகக் கேட்காததோடு, சாதாரண இரும்புக் கம்பியைத் தட்டுவது போலும் இருந்ததாம். பின்னர், பாகவதர், 'ஜீவா'வைப் பழையபடி கட்டித் தந்திகளை மீட்டியபோது, நாதம் சுத்தமாகவும் இனிமையாகவும் கேட்டதாம். இதைக் கவனித்த திருடர் தலைவன், 'ஜீவா'வை மட்டும் எடுத்துக்கொண்டு, தம்புராவைப் பாகவதரிடமே கொடுத்து விடும்படியாகக் கட்டளையிட்டானாம். அவ்விதமே, திருடர்கள் பாகவதரிடம் தம்புராவைக் கொடுத்து விட்டு, 'ஜீவா' வை எடுத்துக்கொண்டு போனார்களாம்.

சங்கீத உலகில் வழங்கப்படும் இக்கதையிலிருந்து ஓர் உண்மை நமக்குத் தெரிகிறது. தம்புராவுக்கு 'ஜீவா' ஜீவன் போன்றது. தம்புராத் தந்திகளிலிருந்து இனிய நாதம் எழுவதற்கு 'ஜீவா' உறுகருவியாயிருக்கிறது. 'ஜீவா'வின்றி தந்திக் கம்பிகளை மீட்டினாலும் ஓசை உண்டாகிறதாயினும் அதில் இனிய நாதம் ஏற்படுவதில்லை. எனவே, தம்புராவுக்கு இன்றியமையாதது ஜீவா என்பது பெறப்படும். அது போல சங்கீதத்துக்குச் சாகித்யம் முக்கியம். அதுவும் தாய்மொழியில் இயற்றப்பட்ட சாகித்தியம் மிக முக்கியமாகும். 'ஜீவா' வை எடுத்துவிட்டுத் தம்புராவின் தந்திகளை

மீட்டினல் எப்படி நாதம் நன்ருகக் கேட்காதோ—எப்படி இரும்புக் கம்பி எழுப்பும் ஓசை கர்ண கடூரமாக இருக்குமோ—அது போல, சாகித்யம் தாய்மொழிப்பாடல் இல்லாமல் இசைக்கப்படும் இசை, சிறப்புறுவதில்லை; கேட்பவர் உள்ளத்தைக் கவர்வதில்லை; மகிழச் செய்வதில்லை. சாகித்தியத்தின் உதவியில்லாமலே சங்கீதத்தைத் தனியாகப் பாடலாமாயினும், அது கேட்க இனிமை பயப்பதில்லை; சாகித்யத்தை உதவியாகக்கொண்டு இசைக்கப்படும் சங்கீதத்தைப்போல் உள்ள மகிழ்ச்சியை உண்டு பண்ணுவதில்லை. இதற்குக் காரணம் இதில் பாவமில்லாமைதான். பாவ மில்லாத சங்கீதம் கமகத்துடன் எவ்வளவு குழைந்தாலும் இன்பத்தை உண்டாக்காது. பாவத்தின் அடியாகப் பிறந்த சங்கீதம் தான் கேட்பவர் உள்ளத்தை உவகை கொள்ளச் செய்யும். பாடகனின் இதயத்தில் எழுந்த பாவம் கேட்பவர் உள்ளத்திலும் உண்டாகிறது. இவ்விதம் உணர்ச்சி ஒன்று கலக்க, உள்ளமும் ஒன்ருகிறது. இவ்விரு உள்ளங்களின் ஐக்கியத்தில் பிறப்பது இன்பமாகத்தானே இருக்க முடியும்.

* * *

பாடகனின் இதயத்தில் எப்போதுபாவம் உண்டாகிறது? சாகித்தியத்தைத் துணையாகக்கொண்டு சங்கீதம் பாடும்போதுதான். ஏனெனில், சாகித்தியத்தில்தான் பாவம் இருக்கிறது. ஆகவே சாகித்தியத்தின் வாயிலாகத்தான் பாடகனுக்கும் இதயபாவம் வெளிப்படுகிறது; கேட்பவனுக்கும் இதயம் கனிகிறது. பாடகன் சுரச்சிலம்ப வித்தை செய்யும்போது அதாவது எடுத்தல், படுத்தல், நலிதல் முதலிய கழைக்கூத்து வேலைகள் செய்யும்போது அவனிடமும் இதயபாவத்தைக் காண முடியாது; கேட்போருக்கும் இதய பாவம் உண்டாகாது. சொல்லும் பொருளும் பொதிந்த சாகித்யம்தான் வெறும் ராக தாள விந்யாசங்களான சங்கீதத்தை விட, மனிதனுடைய இதயபாவத்தை நன்கு வெளிப்படுத்த முடியும்.

* * *

பாடகன் சொல்லும் பொருளும் சேர்ந்த சாகித்தியத்தைத் துணையாகக்கொண்டு ராக தாள விந்யாசங்களுடன் கூடிய சங்கீதத்தைப் பாடும்போது, கேட்போர் உள்ளமும் புலன்களும், உயிரும் உடலும் ஒன்ருய் இயைந்து பேரின்பம் அடைகின்றனரன்ரே? பாடகனும் தன்னை மறந்த லயத்தில் பாடுகிருன்; கேட்போரும் உள்ள நிகழ்ச்சியால் தங்களை மறக்கின்றனர். இவ்வித முழு இன்ப நிலையைக் கூட்டுவிப்பது, தாய்மொழி சாகித்தியத்துடன் கூடிய சங்கீதமே யாகும் என்பதில் ஐயமுண்டோ!

* * *

சங்கீதம் என்பது காரணப் பெயராகும். வெறும் ராகங்களைக் கொண்டே சங்கீதம் ஆகிவிடுவதில்லை. சாகித்தியங்களுடன் ராகங்களை இசைத்தால்தான் சங்கீதம் என்ற பெயர் பெறும்; சங்கீதம் என்பதற்குரிய பூரண சொரூபத்தைப் பெறும். சாகித்தியமும் ராகமும் சேர்ந்து வருவதே சங்கீதம் என்பதிலிருந்து, சாகித்தியத்தின் இன்றியமையாமை புலப்படும்.

சங்கீதத்தால் மக்கள்பெறும் இன்பம் கடவுள் இன்பம் போன்றதாம். சங்கீதத்தில் அறிவு முனைந்து நிற்காது. உணர்ச்சிதான் ததும்பி நிற்கும். உணர்வு மெய்யறிவாம் அநுபவம். உணர்வே சங்கீதத்தின்சொரூபம். கடவுள் சுட்டறிவால் அறியப்படாதவரென்பதும், உணர்வால் உணர்ந்து நுகரப்படுவாரென்பதும் சித்தாந்தம். கடவுள் இன்பம் உணர்வு வடிவமாயிருப்பதுபோல, சங்கீதத்தால் ஏற்படும் இன்பமும் உணர்வு மயமே யாகும். கடவுள் நெறியும் சங்கீத மார்க்கமும் உணர்ச்சி மயமாயிருப்பதால், சங்கீதத்தைச் சாகித்தியத்துடன் அனுபவித்தால் கடவுளின் திருவருள் அனுபவத்தை அடைந்தவராவோம். சங்கீதத்தின் வாயிலாக உணர்வை வளர்த்தலே கடவுளைக் காணும் செந்நெறியாகும். அவ்வுணர்வு தாய்மொழி சாகித்தியத்தாலேயே ஏற்படும். மனித வாழ்க்கையில் அறிவினை வளர்க்கும் கருவி

யாக இருப்பது விஞ்ஞானம். செயலையும் வளர்ச்சியையும் ஆக்கும் கருவியாக இருப்பது பொதுவாகக் கலை என்று சொல்லலாம். இவைகளுள் செயலையோ பயனையோ எதிர் பாராமல், உணர்ச்சியை ஊட்டுவது மட்டும் நோக்கமாகக் கொண்டது சங்கீதம். நடனம், நாடகம் முதலிய கவின்கலைகளையும் இத்துடன் சேர்க்கலாமாயினும், செவிப்புலன் வழியாக மனத்தை இயக்கும் சங்கீதம் மிகச் சிறந்ததாம். சங்கீதம் காதுக்கு மட்டும் புலனாக இன்பம் விளைப்பதானால் அதை எம் மொழியில் பாடினாலும் விவகாரத்துக்கு இடமில்லை. ஆனால், அது உள்ளத்துக்கும் இன்பம் பயப்பதாய் இருப்பதால்தான் தாய் மொயில் சாகித்தியம் இருக்க வேண்டுமென் கிறோம். உள்ளம், அறிவு உணர்ச்சி ஆகிய இரண்டினுக்கும் நிலைக்களனாக இருக்கிறது. அறிவு விகாசத்தில், சங்கீதத்தை எம்மொழியில் பாடினாலும் அனுபவிக்கலாமாயினும், அங்கும் தாய்மொழியில் கேட்டு இன்புறுவது போன்ற அனுபவம் ஏற்படுவதில்லை. உணர்ச்சி வகையிலோ என்றால், தாய் மொழியிலன்றிச் சங்கீதத்தை வேறு எம் மொழியிலும் கேட்டு மகிழவே முடியாது.

* * *

இவ்விதம் எவ்வகையாகப் பார்த்தாலும் சங்கீதத்தில் சாகித்தியமே முதன்மையானதாயிருக்க வேண்டுமென்பதும் அச்சாகித்தியமும் தாய்மொழியிலேயே இருக்க வேண்டுமென்பதும் முடிந்த முடிபுகளாகக் கொள்ள வேண்டியிருக்கின்றன. ஆகவே, தமிழ் நாட்டிலுள்ள சங்கீத வித்வான்கள் சிலரும் பிரமுகர்கள் சிலரும் 'சங்கீதத்தில் சாகித்தியம் பிரதானமில்லை ; சாகித்தியத்தை எந்தப் பாஷையிலும் பாடலாம்' என்று பிரசாரஞ் செய்து வருவது அறியாமையாகும்.

சங்கீதம் அனைவரும் கேட்டு உள்ளம் உவகை கொள்ள வேண்டுமானால், சங்கீதத்தின் முக்கிய அம்சமான சாகித்தியம் தாய் மொழியில் இருக்கவேண்டியது அவசியம். சங்கீதம் தங்களைப்போன்ற பூர்ஷ்வா கூட்டத்தினரே அனுபவிக்கக்கூடிய உயர் சரக்கு என்று மேற்குறித்த கூட்டத்தார் கருதுகின்றனர். கணத்துக்குக் கணம் வேகமாக மாறிவரும் உலகப் போக்கு இவர்களுடைய அறிவுக் கண்களைத் திறக்கவேண்டும்.

மணி மொழிகள்

"அவரவர் தாய் மொழியில் பாட்டமையுங்கள்; ஆனால் இந்துஸ்தான் கலாவிதிகளை எல்லாரும் தழுவுங்கள்!"

— மராட்டிய இசைப் புலவர் பாத்கண்டே

"நான் ரஷ்யன்; நமது தாய் மொழியில் பாடுகிறேன். காதிருப்பவர், தாயன்பு இருப்பவர் கேட்கட்டும்"

— ரஷ்ய இசைவல்லுனன் அலக்சாந்தர் ஸ்க்கிரியாபின்.

"எனது இதயவீணையை மீட்டுவது, வங்கத்தாயின் திருக்கரங்களே"

— கவி தாகூர்.

"இரண்டு முக்கியமான விஷயங்கள் மனிதன் வாழ்க்கைக்கு வேண்டியன. இந்த இரண்டு விஷயங்களிலும் எந்த ஊரைச் சுற்றினாலும், நாடோடித்தனம் செய்தாலும்கூட அவனவன் தேசத்தின் விஷயங்கள்தாம் அவனுக்கு ருசியைக் கொடுக்கும். ஒன்று சாப்பாடு ; மற்றொன்று சங்கீதம்"

— சீனஞானி லின்யுடாங்.

வரவேற்பு உரை

இராவ்பகதூர் டி. எம். சின்னையாப் பிள்ளை, M. A., B. L.

அன்னைமார்களே, அன்பர்களே, பெரியோர்களே, மனமார்ந்த வணக்கம்!

இன்று நடைபெறும் இந்த இசைத் தமிழ் மாநாட்டில் பேரன்போடும் பேருவகையோடும் கலந்துகொண்டு இதனை விளக்கஞ் செய்வித்தருளும் உங்கள் யாவர்க்கும் எனது நன்றி உரியதாகும்.

தமிழ் நாட்டில் சென்ற நூறு ஆண்டுகட்குள் ஒரு சின்னஞ் சிறு மாறுதல் தோன்றி நடைமுறையில் உருப்பெற்று வருகிறது; அது இன்னும் முதிர்ச்சி அடையவில்லை.

எனினும், கல்வித் துறையில் திருவனந்தபுரம் பெருங் கல்வியாளர் பொ. சுந்தரம் பிள்ளை, எம். ஏ. அவர்களும், சமய மதத் துறைகளில் சிதம்பரம் இராமலிங்க அடிகளாரும் ஏற்றி வைத்த திருவிளக்குகள் இன்னும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டுதான் இருக்கின்றன. சுந்தரம் பிள்ளை அவர்கள் ஆங்கிலம், தெலுங்கு, வடமொழி இவற்றின் பெருமிதத்தால் மறைவடைந்திருந்த தமிழின் தொன்மையினையும், தூய்மையினையும், மாறாத இளமையினையும் தமிழருக்கு ஓர் அழகானவகையில் நினைவுபடுத்தினார்கள். இராமலிங்க அடிகளார் தமிழருக்குள் நிலவும் பொல்லாத சாதி சமய வேற்றுமைகளை அறவே மறுத்து தொன்று தொட்டு விளங்கிய தமிழரின் பொதுநெறியைத் தமிழ் மக்களில் பெரும்பாலார் உள்ளத்திலும் பசுமரத்தாணி போல் பதியவைத்துப் போயிருக்கிறார்கள்.

ஆராய்ந்து பார்ப்பவர்க்கு மேற்சொன்ன அத் திருவிளக்குகளினின்று எழுந்த ஒளியே இன்று இங்குக் காணப்பெறும்—இசைத் தமிழ் மாநாடாக உருப்பெற்றிருக்கும்—அரிய காட்சி என்பது புலனாகும். இப்படி இன்னும் நூற்றுக்கணக்கான மாநாடுகள் தமிழ் நாட்டின் பற்பல பகுதியிலும் தொழிற்பட்டால்தான், இசைத் தமிழ் தமிழர் வீடு ஒவ்வொன்றிலும் பாடுதலும் கேட்டலும் கைகூடும்.

இவ்வளவிலாவது இசைத்தமிழியக்கம் வளர்ந்துவந்திருப்பதற்கு, தமிழ்த்தாயின் பெருமக்களாகிய செட்டிநாட்டரசர், சர். ஷண்முகம் செட்டியார், திரு. இராஜகோபாலாச்சாரியார், திரு. சிதம்பரநாத முதலியார் முதலிய பெரியோர்களுக்கு நாம் என்றும் கடமைப் பட்டிருக்கிறோம்.

இசைத்தமிழ் இயக்கம் என்றால் என்ன? இசைஉணர் வில்லாது வெற்றுடம்பாகத் திரிந்த இக்காலத்திய தமிழ் மக்களில் பெரும்பாலார்க்கு, இசை இன்ன தன்மையது, இன்ன இன்ன நுண்பொருளை உடையது, இன்ன இன்னபடி அறிவு விளக்கம் உண்டாக்க வல்லது, இன்ன இன்னவாறு உணர்ச்சிகளைத் தோற்றுவிக்க உரியது, இன்ன இன்ன தரத்தில் தமிழரது உடம்பிலும் உயிரிலும் அறிவிலும் ஆன்மாவிலும் இரண்டறக்கலந்திருக்கிறது என்னும் பெரிய உண்மைகளை உள்ளங்கை நெல்லி என விளக்கும் தூய தொண்டே இசைத் தமிழ் இயக்கமாகும்.

பழந்தமிழ் நூல்களை அன்போடு பயிலும் புண்ணியம் வாய்ந்தவர்களுக்கு இப்படி ஒரு இயக்கம் பிரமப் பிரயாசையோடு, சில தமிழரது கூர்த்த எதிர்ப்புக்கும் பல தமிழரது பாந்த அறியாமைக்கும் இடையில் உண்டாக வேண்டியிருப்பதை நினைக்க நினைக்கப் பெரும் திகைப்பு உண்டாகிறது.

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்னரே, நம் தமிழ்நாடு நல்லரசியலையும் அமைதியையும் அடிப்படையாகக்கொண்ட பொருள்வளமும் கல்விவளமும் பொதுநெறி வளமும் ஓங்கி இந்நில உலகிற்கு ஓர் ஞானதீபமாக விளங்கியிருந்தது. இவ் வளங்கட்கெல்லாம் உயிர்போன்று நம் முன்னோர்கள் இசையைப் போற்றி வந்திருக்கிறார்கள் என்பதற்கு, நமது ஒப்புயர்வற்ற—உருக்கி வார்த்தது அன்ன பேரழகு வாய்ந்த —சங்க நூல்களும், தெய்வக் காட்சியில் திளைத்த நமது நாயன்மார்கள் ஆழ்வார்களது என்பையும் உருக்கும் திருப்பாடல்களும் ஐயமற்ற சான்று பகர்கின்றன. இயல், இசை, ஆடல், பாடல், பாணன், விறலி, பண், திறம், அடைவு, பாணி, ஆளத்தி, யாழ், குழல், முழவம் முதலிய ஆயிரக்கணக்கான இசைநலங் குறிக்கும் சொற்களில் பற்பல வராத பழந்தமிழ் நூலே கிடையாது. இந்நாளில், பாரதியார் "நெஞ்சை அள்ளும்" என்று பாடி வியந்த சிலப்பதிகாரத்தைச் சில விநாடிகள் கொஞ்சம் புரட்டிப்பார்த்தாலே இதன் மெய்மை விளங்கும். மேலும், இசைத் தமிழ் நலம் போற்றாத திருநெறித் தமிழ் நூலே தமிழர்க்கில்லை. தேவாரங்களில் இசை நுட்பம் எப்பாங்கரிலும் எடுக்க எடுக்கக் குறையாத பொற்குவியல்களாகத் திகழ்கிறது. உதாரணமாக, தேவாரத் திருமுறை ஒன்றை எடுத்து இரண்டொரு விநாடி பார்க்கலாம். பின் வருவன கண்ணில் படுகின்றன. அவை ஆராய்ந்து தேர்ந்தவை அன்று. பார்க்க நேர்ந்தபோது காணக் கிடந்தனவே :

"பண்ணியாழ் பயில்கின்ற மங்கையர்"
"பண்ணமர்ந் தொலி"
"பாடி ஆடும் அடிகள்"
"பாணில் யாழ் முரலும்"
"செய்யுள் பாடவல்லார்"
"நாவார்ந்த பாடலீர்"
"பண்ணார்ந்த மண்முழவம் ததும்ப"
"செப்பரிய தண்தமிழால் தெரிந்த பாடல்"
"சூழல் மல்கும் ஆடலீர்"
"பாடலோடு ஆடல்பேணிப் பயில்கின்றீர்"
"அணங்கமரும் பாடலோடு ஆடல் மேவும் அழகினீர்"
"பாடும் அடியார் பலரும் கூடி"
"குறையாப் பனுவல்கூடி ஆடவல்லார்"
"பாவிரி பாடல் பயில்வார்"
"பண்புனை பாடல் பயில்வார்"
"பாடிய சிந்தையினார்க் கில்லையாம் பாவமே"
"பாடுவார் இசை பல்பொருள் பயன் உகந்து"
"இன் இசையால் உரைத்த பனுவல்"
"மிகநல்ல வீணை தடவி"
"நாடகமாக ஆடி மடவார்கள் பயிலும்"
"இசைகேட் டிரங்கி"
"அம்பன்ன ஒண்கண்ணவர் ஆடரங்கின்"
"ஒண்தமிழ்களின் அணிகொண்ட பத்தும் இவைபாடும் பத்தர்"

"உள்குளிர்ந் தேத்திப் பரவி நைபவர்க் கல்லால் பரிந்து கைகூடுவ தன்றால்"
"பண்ணியாழ் எனமுரலும் பணிமொழி உமை"
"படி இவை பாடிநின் றாடவல்லார்க் கில்லை பாவமே"
"கண்மிசை நீர் நெகிழ்த்து இசை குலவுமாறு வல்லார்"
"துளைபயிலும் குழல் யாழ் முரலத் துன்னிய இன் இசையால் துதைந்த"
"மோந்தை முழாக் குழல் தாளம் ஓர் வீணை முதிர ஓர் வாய் மூரி பாடி"
"கிளர்பாடல் வல்லார்க் கில்லை கேடே"
"பண்ணிய நடத்தொடு இசை பாடும் அடியார்கள்"
"திருவின்நே ரன்னார்கள் வெண்ணகை அரத்தவாய் மடந்தைமார்கள் ஆடும் ஆரூர்"
"பண்ணுலாம் பாடல் வீணை பயில்வான் ஓர் பரமயோகி."

தமிழகத்தில், இங்ஙனம், பகல் இரவு கையுழைத்து இளைப்பாறும் ஏழை மக்களைக் குறிக்கும்போதும் இவ் இசைப் பேச்சு; பெருங்கல்வியாளர்களையும், பெருஞ் செல்வர்களையும், பெரும் வள்ளல்களையும் குறிக்கும்போதும் இவ் இசைப் பேச்சு; நிலவளம் நீர்வளம் நிறைந்த இத்தமிழ் நாட்டினை ஆண்ட அரசர் பெருமான்களைக் குறிக்கும்போதும் இவ் இசைப் பேச்சு; மனத்தாலும் நினைக்கவொண்ணா இந்நில உலகத்தையும் மற்ற உலகங்களையும் படைத்துக் காத்துவரும் ஆண்டவனது பெருங்கருணையில் ஈடுபட்டு மெய்ம்மறந்து அமுதமயமாக விளங்கும் அடியார்களைக் குறிக்கும்போதும் இவ் இசைப் பேச்சு; கடவுளைக் குறிக்கும்போதும் இந்த இசைப் பேச்சு. இவ்வண்ணம் தொன்றுதொட்டு தமிழர்களை ஒருங்கே ஊடுருவிநின்ற இத்தெய்வ இசையை இந்நாளில் தமிழ்நாட்டில் வளர்க்க இம் மாநாடு போன்ற ஒரு செவிலித் தாய் வேண்டியிருக்கிறது என்பதை நோக்கப் பெரு வியப்பாக இருக்கிறது.

இந்த ஏமாற்றமான நிலைமைக்கு என்ன காரணம்? எத்தனையோ காரணங்கள் இருக்கலாம். அவற்றில் ஒரு சிறிய காரணம் பின்வருமாறு:

கொஞ்ச காலத்திற்குமுன், சில உயர்ந்த சங்கீத வித்துவான்கள் தமிழ் நாட்டில் தோன்றி, தங்களுக்குக் கைவந்த தெலுங்கிலும் வடமொழியிலும் புதிய புதிய இசை உருப்படிகளை உண்டாக்கி, வாழை அடி வாழையாக அவற்றைப் பாடுவிக்க வகைசெய்துவிட்டுப் போனதுதான்.

அவர்கள் ஒருவகையான இசை நுட்பத்தில் உயர்ந்தவர்கள். தாம் தாம் கையாண்ட மொழிகளில் தேர்ந்தவர்கள். நல்ல பத்திமையும் சீலமும் உடையவர்கள். அதனால் அது தமிழ்நாட்டின் எப்பக்கமும் விரைவில் பரவி, "தொன்றுதொட்டு விளங்கும் இசைத் தமிழ் என்றும் ஒன்று உண்டோ" என்று மக்கள் மனம் ஐயுறுமாறு அதைக் கவர்ந்து விட்டது.

அப்படிக் கவர்ச்சி அடைந்தவர்களில் சிலருக்குத்தான் இந்த இசைத்தமிழ் இயக்கத்தில் சிறிது மனம் வேறுபாடு நேர்ந்திருக்கிறது. அவர்களுக்கு உள்ள அச்சம் எல்லாம் "எங்கே, இந்தப் பெரிய சங்கீத வித்வான்களது உயர்ந்த முறைக்கு இந்த இசைத் தமிழ் இயக்கம் ஊறு செய்யுமோ?" என்பதுதான். ஏனெனில், அவர்களும் தமிழர்கள்தானே! தெலுங்கு அல்லது வடமொழி பேசுகிறவர்கள் அல்லரே.

இதற்கு என்ன மருந்து? தமிழில் ஆயிரக்கணக்கில் உள்ள உயர்ந்த இசை உருப்படிகளான பரிபாடல்கள், வரிப்பாடல்கள், தேவார திருவாசகங்கள், திருவாய்மொழிகள், திருப்புகழ்கள், திரு அருட்பாக்கள், முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ண பாரதியார், அருணாசலக் கவிராயர், வேதநாயகம் பிள்ளை முதலிய இசை ஞானிகளது தெய்வமணம் கமழும் இசை உருப்படிகள் ஆகியவற்றை இசைநெறி வழாது அழகாகவும் உணர்ச்சியோடும் பாடினால் மட்டுமே அவர்களது அச்சம் தீரும்.

தெய்வ எண்ணம் நிரம்பிய நமது பெரியோர்களது பாடலைக் கேட்டுப் பழகிய செவிகளுக்கு, பத்திமை இல்லாது கல்வித்திறத்தால் புதுவதாக ஆக்கப்படும் பாடல்களால் மட்டும் அவ்வச்சம் தீராது. உதாரணமாக, சினிமாக்களிலும் நாடக மேடைகளிலும், புதுவதாகக் கற்பித்துப் பாடப்படும் தமிழ்ப்பாடல்கள் எத்தனைநாள் உயிரோடு இருக்கின்றன என்று ஆராய்வார்க்கு இது புலனும்.

ஆகவே, இசைத்தமிழ் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கும் நாம் அனைவரும் புதுவது புனைந்து பாடுவதோடு அமையாது, எண்ணிறந்து கிடக்கும் நமது பெரியோரது இசைத் தமிழைப் பழைய முறைப்படி—அல்லது இந்நாளின் புதிய முறைப்படியேயாவது—பாடக் கற்பித்தால், அவைகள் காதுக்குமட்டும் இனிமையாக இல்லாமல், நெஞ்சைக் கவர்ந்து, அறிவின்கண் ஒளி உண்டாக்கி, இத் தமிழ்நாட்டை எல்லாவகையிலும் உயர்த்தும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. இவ்வண்ணமாக இசைத்தமிழியக்கம் நடைபெற்று வெற்றி அடைந்தால், இதனை மனம் வேறுபட்டுப் பார்க்கும் தமிழர்களே இருக்கமாட்டார்கள். இந்த நல்ல பெரிய வகையால்தான் அவர்களது வெறுப்பு விருப்பாக மாறும். வெறும் தர்க்க ரூபமான வாதங்களால் இசைச் சார்பாக மனமாறுதல் அடைதல் அரிது.

பிறமொழிப் பாடல்களை இசைத்து, செவி இன்பம் துய்க்கும் தமிழரில் சிலர்க்கு இந்தச் சமயம் ஒரு நட்புச்சொல் சொல்லுதல் உடன் பிறந்தார் உரிமை. தெரியாத மொழியோடு புணர்ந்த இசையிலும் ஓரின்பம் உண்டு. அது செவி அளவே ஆகும். அதில் நுகராததோர் இன்பத்தினை அறிவின்பம் என்றோ ஆன்ம உணர்ச்சி என்றோ சொல்லலாம். ஏன்? அறிவை விளக்கி மனத்தைக் கனிவித்து ஆன்ம உணர்ச்சிபெற்று உய்யவேண்டுமென்றால், தெரியாத சொற்களோடு கலந்த இசைமட்டும் போதாது. பொருள் நுட்பம் செறிந்த, தெரிந்த சொல்லொடு இயைந்த இசையே வேண்டற்பாலது. இந்த உண்மையினை இறைவனைச் சுட்டும் பின்வரும் தேவார மொழிகளால் உணரலாம்:

> ''பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்; பழத்தினில் சுவை ஒப்பாய்;
> கண்ணிடை மணி ஒப்பாய்; கடுஇருள் சுடர் ஒப்பாய்''

இந்தப் பேருண்மையினையே நமது கம்பநாடரும் ''பருந்தோடு நிழல் சென்றன்ன இயல் இசைப் பயன் துய்ப்பாரும்'' என்று விளக்கியிருக்கிறார். இங்ஙனம், இசை உடலாகவும் சொல் உயிராகவும் இருக்கிற தென்றால், சொல்லும் சொல்லுக்கு உயிராக நிற்கும் பொருளும் தெரியாத பிறமொழிப் பாடல்களால் எய்தும் பயன் மிகச்சிறியது என்பது விளங்கும்.

இதற்காக நாம் செய்யவேண்டியதெல்லாம் ஒன்றேதான். இயற்றமிழ்வாணர்கள் இசை நுட்பத்தில் நல்ல பயிற்சிபெற்றபின்னரே, இசைத் தமிழில் ஈடுபடல் வேண்டும். இயற்றமிழ் அறியாமல் இசைத்தமிழ் பயில்வதால், சொற் குற்றம் பொருட் குற்றம் மலிந்து, இசைத்தமிழ் இறந்து, வெற்றோசையாக முடிகிறது. இசை நுணுக்கம் அறியாமல் தமிழைப் பாடுவதால், அபஸ்வரம் நேர்ந்து, இனிமையற்று, கேட்க அருவருப்படைகிறது. ஆதலின், நமது தலைவர்களில் சில பெரியோர்கள் செய்து வருவதுபோல், இசையில் பெரும்புகழ் எய்திநிற்கும்பேரிசைப் புலவர்களைத் திருவாசகம் திருவருட்பா முதலிய தெய்வ நூல்களில் சிற்சில எளிய பாடல்களையேனும் அடிக்கடி - அவர்கள் பாடும்போதெல்லாம்- பாடும்படி மன்றாடினால், இன்னும் ஓராண்டுக்குள் இந்த இசைத்தமிழ் இயக்கம் வளமடைந்து உரம் பெற்று விடும். பின்பு இதனிடம் வெறுப்புறும் தமிழர் மருந்துக்கும் அகப்படார்.

இதோடு, என் வரவேற்புரையை முடித்துக்கொண்டு இந்த நான்காம் ஆண்டின் இசை விழாவினைத் தொடங்கி வைக்குமாறு, நமது கனம் மந்திரியார் திரு. பக்தவத்சல முதலியார் அவர்களை உங்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE INDIAN OVERSEAS BANK, LIMITED

(ESTABLISHED IN 1937)

HEAD OFFICE : MADRAS

BRANCHES (INDIA)

ALLEPPEY
BANGALORE CITY
BOMBAY (FORT)
CALCUTTA
CALICUT
CANNANORE
COIMBATORE
DEVAKOTTAH
GUDIYATTAM
HINDUPUR
KURNOOL
KARAIKUDI
KUMBAKONAM
MADURA
MAYAVARAM
NEGAPATAM
PUDUKOTTAH
PURASAWALKAM (MADRAS)
P. ALAGAPURI
SRIVILLIPUTTUR
SALEM
SIVAGANGA
TADPATRI
TRICHINOPOLY
TANJORE
TIRUNELVELI TOWN
TIRUVARUR
TRIVANDRUM
TUTICORIN
VELLORE

PAY OFFICES :

MANNARGUDI
PUDUPATTI
PATTUKOTTAI
MUTHUPET
SHIYALI
ARCOT
TIRUNELVELI JUNCTION
KOOTHANALLUR
KUTTALAM

BRANCHES OVERSEAS

CEYLON : COLOMBO
MALAYA : Ipoh, Kuala Lumpur, Malacca, Penang & Singapore.
BURMA : Rangoon.

FOREIGN AGENTS :

LONDON : The Chase National Bank of the City of New York, London
The Midland Bank Ltd., London.

NEW YORK : The Chase National Bank of the City of New York

SAFE DEPOSIT SERVICE

Safe Deposit Lockers are available at Madras Office.
Terms may be ascertained on application.

Telegrams: "GOODBONUS"
Telephone: 2718.

POLICYHOLDERS OUR FIRST CONSIDERATION

Post Box No. 1227

MAXIMUM PROTECTION AT THE LEAST POSSIBLE COST
WITH THE MOST VALUABLE OF ALL DIVIDENDS—PEACE OF MIND

It is Increasingly apparent that the principles upon which

NEW ASIATIC

IS OPERATING ARE GAINING IN FAVOUR WITH INTELLIGENT INSURANCE BUYERS

TRANSACTS:

LIFE, FIRE, ACCIDENT & MARINE INSURANCES.

THE

NEW ASIATIC INSURANCE CO., LTD.

289, Lingha Chetty Street, - G. T., MADRAS

Branch Manager: **A. SUBBIAH.**

Telegrams: "SEEYENSEE"

SEEYENSEE & CO.,

ELECTRICAL ENGINEERS

19, Loane Square - Broadway, Madras I.

DIRECT IMPORTERS OF:

Distribution Transformers, Motors,
Pumpsets, overhead Line Materials
and all Electrical Accessories Etc.

Insure with

GORDON WOODROFFE & CO. (MADRAS) LTD.

Agents for

CANTON INSURANCE OFFICE LTD.

HERCULES INSURANCE CO., LTD.

HONGKONG FIRE INSURANCE COMPANY, LTD.

JAMES FINLAY & CO., LTD.

LAW UNION & ROCK INSURANCE COMPANY, LTD.

LONDON ASSURANCE CORPORATION.

PRUDENTIAL ASSURANCE CO., LTD.

ROYAL INSURANCE CO., LTD.

SCOTTISH UNION & NATIONAL INSURANCE COMPANY.

SEA INSURANCE CO., LTD.

TRITON INSURANCE CO., LTD.

UNION ASSURANCE SOCIETY, LTD.

UNION INSURANCE SOCIETY OF CANTON, LTD.

YORKSHIRE INSURANCE CO., LTD.

Marine — Fire — Motor Vehicles — Life — Endowment
Personal Baggage—Accident—Workmen's Compensation

Members of

The Madras Fire, Marine and Accident Insurance Associations

Rates on application to

GORDON WOODROFFE & CO. (Madras) LTD.

Registered Office :

21, NORTH BEACH ROAD,
GEORGE TOWN, MADRAS.

Telegraphic Address :
"WOODROFFE."

Telephone No. 2978
Post Box No. 42.

தந்தி: சோமசுந்தரம் டெலிபோன்: 69

சோமசுந்தரம் மில்ஸ் லிமிடெட்

நூல் நெசவு தொழிற்சாலை

கோயமுத்தூர்

23500 கதிர்கள் **400** தறிகள்

மானேஜிங் ஏஜெண்ட்

பி. எஸ். சாத்தப்ப செட்டியார்

நூல் ஜவுளி டெக்ஸ்மார்க்

நெம்பர் 646

8 கே. முதல் 80 கே. வரையிலும் ஒற்றை இரட்டை நூல்களும்

- சட்டைத் துணி, கோரா, மல் துண்டு, வேஷ்டிகளும் -

தயாரிக்கப்படுகின்றன

ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கும் எங்கள் பிரத்தியேகமான ரகங்கள்

"மான்பக்ஷி 4446 குதிரைத் தலை"

★

இந்தியர் மூலதனம் இந்தியர் நிர்வாகம்

இந்தியத் தொழிலாளிகளால்

உற்பத்தி செய்யப்படும் இந்திய சரக்குகளை

ஆதரியுங்கள்

FOR ALL CLASSES
OF INSURANCE

LIFE-FIRE-MARINE-ACCIDENT

Motor Cars (Third Party & Comprehensive), Fidelity Guarantee, Workmen's Compensation, Railrisks, Postal Insurance, Aviation, etc.

INSURE WITH

NEW INDIA
ASSURANCE CO., LTD.

A TATA'S PROMOTION & INDIA'S LARGEST COMPOSITE INSURANCE OFFICE

Total Assets — About 9 CRORES

Ag. Chairman :
J. R. D. TATA, Esq.

HEAD OFFICE :
Mahatma Gandhi Road,
BOMBAY.

MADRAS BRANCH :
4/5, 1st Line Beach
MADRAS 1.

போன்: { ஆபீஸ்: 74
பங்களா: 94

தந்தி: "பங்கஜா"

பங்கஜா மில்ஸ் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1932)

நூல் தயாரிப்பவர்கள்

கோயமுத்தூர்

★

மானேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரிடரீஸ்

C. S. இரத்தினசபாபதி முதலியார் & சன்ஸ்

★

நூற்றல்

10 நெ. முதல் 80 நெ. வரை இரட்டை நூல் உள்பட
எல்லாவிதமான ஒற்றை, முறுக்கு, கார நூல் தயாரிப்பவர்கள்

★

கதிர்கள்

ஒற்றைக் கதிர்கள் 26,092 இரட்டைக் கதிர்கள் 2,816

இந்திய மூலதனம் : இந்தியர் உழைப்பு

: இந்திய நிர்வாகம் :

இந்தியக் கைத்தொழிலை ஆதரித்து இந்தியத்
தொழிலாளர்களுக்கு உணவு கொடுங்கள்

SPECIFY

"PARAMITE"

Indian Cables for House, Shop and Factory Wiring

I. C. C. COPPER WIRES

For Electrification Schemes

I. C. C. INSTRUMENT WIRES

Double and Single Cotton Covered Wires

FOR COIL WINDINGS

For further particulars address enquiries to :—

THE INDIAN CABLE CO., LTD.

"Indian Bank Buildings", 17, NORTH BEACH ROAD,

MADRAS

Telephone : 3808

Telegrams : "CABLECO".

எங்கள் புத்தாண்டு வெளியீடு

1946 டிசம்பரில்

விஜயலட்சுமி (தமிழ்)

வெள்ளித்திரைக்கு வருகிறது

தயாரிப்பில் :

சம்சார நௌகா (தமிழ்)

(ஸ்டார் கம்பைன்ஸ், பிரகதி பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பு)

எதிர்பாருங்கள் :

இசை அரசு **M. M. தண்டபாணி தேசிகர்**

தோன்றும்

1. **நக்கீரர்** (தமிழ்)

மதுர கீதவாணி **N. C. வசந்தகோகிலம்**

சித்தூர் **V. நாகையா**

நடிக்கும்

2. **பக்த சபரி** (தமிழ்)

விவரங்களுக்கு :

ஸ்டார் கம்பைன்ஸ் லிமிடெட்,

சென்னை, 2.

விய மார்கழி 9 (24—12—'46) செவ்வாய் 3—30 மணி

திருமதிகள் : பி. எல். சரஸ்வதி, பி. எல். பார்வதி-பாட்டு

திரு. ஹரிஹரன்—பிடில்
திரு. டி. பி. சுப்பிரமணியம்—மிருதங்கம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
கஜானன கணேச்வரனே	பந்துவராளி	ரூபகம்	நீலகண்ட சிவன்
தெலிஸி ராம	பூர்ணசந்திரிகா	ஆதி	தியாகையர்
ஸ்ரீ ராம ரமணீ மனோகர	மோகனம்	,,	பல்லவி கோபாலய்யர்
இமகிரி தனயே	சுத்த தன்யாசி	,,	முத்தையா பாகவதர்
ஸ்ரீ அபயாம்பா	ஸ்ரீராகம்	ரூபகம்	முத்துசாமி தீட்சதர்
சங்கரனின் கருணை	பியாக்	ஆதி	நீலகண்ட சிவன்
எப்படிப் பாடினரோ	ஆபேரி	,,	சுத்தானந்த பாரதி
ராம ஸ்மரணை	ஹிந்தி மெட்டு	ஏகம்	யானை வைத்தியநாதர்
ராதா சமேதா	யமுனா கல்யாணி	ஆதி	(நாமாவளி)
காவிப் பூவை	அம்சாநந்தி		அருணகிரிநாதர்

பிற தமிழ்ப் பாடல்கள்.

இனிய தமிழ்பாடி இசை வளர்ப்போம்

5—30 மணி

* இசையரசு

எம். எம். தண்டபாணி தேசிகர்—பாட்டு

திருவாங்கூர் ஆஸ்தான வித்துவான் கும்பகோணம். இராஜமாணிக்கம் பிள்ளை—பிடில்
திருவாங்கூர் ஆஸ்தான வித்துவான் பழனி. எம். சுப்பிரமணிய பிள்ளை—மிருதங்கம்

சித்தி விநாயகனே	ஜகன்மோகினி	ஆதி	கவிக்குஞ்சர பாரதி
சுந்தர குஞ்சித	ஆரபி	,,	முத்துத்தாண்டவர்
காக்க வேண்டுமே	சுத்த தன்யாசி	ரூபகம்	இலட்சுமணப் பிள்ளை
ஜேஸின தெல்ல	தோடி	ஆதி	தியாகையர்
யாரோ என்றெண்ணாமலே	சங்கராபரணம்	,,	அருணாசலக்கவி
எவருரா நின்னுவினா	மோகனம்	சாப்பு	தியாகய்யர்
இன்னும் பாராமுகமோ	மந்தாரி	ஆதி	வேதநாயகம் பிள்ளை

இராகம்—பல்லவி—கரகரப்பிரியா

மங்களம்: எல்லோரும் இன்புறக் கண்காண

பொடியிற் சிறந்தது பட்டணம் பொடி

அதிலும் சிறந்தது அப்பாதுரை பொடி

காரம்! குணம்!

மணம்!! நிறம்!!

தபால் பெட்டி: 189.

ஆ. அப்பாதுரை முதலியார் & சன்

55, ஆச்சாரப்பன் தெரு, ஜி. டி., மதராஸ்.

ஆடவர் விரும்புவன! மகளிர் மனங்கவர்வன!

அரிய ஆடைகள்!

திருமணத்திற்கு வேண்டிய திவ்யமான
பெங்கால்-பனாரிஸ் சில்க் சாரிகள்! சில்க் சர்ட்டிங்!
கோயமுத்தூர், சேலம் 100×8 நவீன பார்டர்கள் உள்ள
பருத்தி, பட்டு ஆடைகள், பட்டுத் துப்பட்டாக்கள்,
பாப்ளின், வாயில் சீட்டி வகையராக்கள்
எங்களிடம் கிடைக்கும்

குறைந்த விலை! நிறைந்த பெறநுள்!!

முந்துங்கள்!!!

ஸ்ரீ கிருஷ்ண ஸ்டோர்ஸ்

26, மேல கோபுரவாசல், மதுரை.

விய மார்கழி 10 (25—12—'46) புதன் 3—30 மணி

திரு. கே. பி. சிவானந்தம்-வீணை

திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை--பிடில்
திருத்தருப்பூண்டி கிருஷ்ணமூர்த்தி பிள்ளை—மிருதங்கம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
சாமி தரிசனம்	பூஷாவளி	ரூபகம்	முத்துத்தாண்டவர்
அஞ்சாதிரு மனமே	கரகரப்பிரியா	ஆதி	பொன்னையா பிள்ளை
நின்னே நம்பி நானு	தோடி	சாபு	சியாமா சாஸ்திரி
ராம நன்னு	அரி காம்போதி	ரூபகம்	தியாகய்யர்
எல்லாம் சிவன் செயல்	கல்யாணி	சாபு	சுத்தானந்த பாரதி
தேர் செலுத்துவாய்	காம்போதி	ரூபகம்	பொன்னையா பிள்ளை
முகத்தைக் காட்டி	பைரவி	சாபு	பாசவிநாச முதலியார்

இராகம்—தானம்—பல்லவி--சங்கராபரணம்
பிற பாடல்கள்.

'கலை என்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும்'

5—30 மணி

* இசைச் செல்வி

கே. பி. சுந்தராம்பாள்—பாட்டு

இராமநாதபுரம் எம். என். கணேசன்—பிடில்
திரு. எஸ். வி. எஸ். நாராயணன்—மிருதங்கம்
திரு. டி. எஸ். வில்வாத்திரி அய்யர்—கடம்

மங்களம்.

ஜெய் ஹிந்த்!
AVM புரொடக்ஷன்ஸ்
நாம் இருவர்
சமூக சீர்திருத்த தமிழ்ப்படம்
டைரக்ஷன்
AV. மெய்யப்பன்
அசோஸியேட் டைரக்ஷன்
M.V. ராமன் & P. நீலகண்டன்
நடிகர்கள்
T.R. மஹாலிங்கம்
T.R. ராமச்சந்திரன் • K. சாரங்கபாணி
T.A. ஜெயலெக்ஷ்மி • • • பேபி கமலா
கதை
ப. நீலகண்டன்
காரைக்குடி AVM ஸ்டுடியோவில்
அநேகமாக பூர்த்தியாகிவிட்டது

விய மார்கழி 11 (26—12—'46) வியாழன் 3—30 மணி

* பரதகலா பாரதி

பானுமதி-பாட்டு

பாபநாசம் பாலசரஸ்வதி—பிடில்
குடந்தை இராமமூர்த்தி அய்யர்—பிடில்
சென்னை இராமாமிர்தம்—கஞ்சிரா

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
இன்னமும் தாமதமேன்	தேவமனோகரி	ஆதி	—
ஏது பராமுகம்	தோடி	,,	—
நின்னருள் இயம்ப	பந்துவராளி	ரூபகம்	—
இனி ஒருகணம்	ஸ்ரீ ரஞ்சனி	,,	—
ஆண்டவனே	சண்முகப்பிரியா	,,	—
ஒருகால் சிவ சிதம்பரம்	ஆரபி	ஆதி	—
யாரோ இவர்	பைரவி	,,	—
ஆடுவோமே		,,	—
கண்ணனைக் கண்டதுண்டோ	இராகமாலிகை	,,	—
கிரீடதிவன மாலி	சிந்து பைரவி	,,	—
அருட்பா	இராகமாலிகை		—

பிற தமிழ்ப் பாடல்கள்

'வல்ல நல்ல இசைபாடி வாழவேண்டும்'

5—30 மணி

* இசை மன்னர்

சித்தூர். சுப்பிரமணிய பிள்ளை—பாட்டு

பெங்களூர். கோவிந்தசாமி செட்டி—பிடில்
தஞ்சை. இராமதாஸ் ராவ்—மிருதங்கம்
திரு. வைத்தியலிங்கம் பிள்ளை—கொன்னக்கோல்
திரு. கே. எம். வைத்தியநாதன்—கடம்

விநாயகா சரணம்	சௌராஷ்டரம்	ஆதி	அருணசலக்கவி
சமயம் அம்மா	அடாண	ரூபகம்	கவிக்குஞ்சர பாரதி
ஆத்ம ராமனை	ஜயமனோகரி	ஆதி	அச்சுததாசர்
கருணை நீ செய்ய	சகாண	,,	வேதநாயகம் பிள்ளை
ஓம்கார சத்ய ஜோதி	கருடத்வனி	ரூபகம்	சுத்தானந்த பாரதி
காலனை உதைத்தவனே	தோடி	ஆதி	,,
மானஸ சிவபூஜை	கேதாரம்	ரூபகம்.	,,
சங்கிதாஞ்சலி	ஹேமாவதி	,,	,,
பாடும் பணியே	சங்கராபரணம்	,,	சீரங்கம் ரங்கசாமிப் பிள்ளை
சிவனை மறவாதே	முகாரி	,,	முத்துத்தாண்டவர்

இராகம்—பியாகடா—பல்லவி
பிற தமிழ்ப் பாடல்கள்
மங்களம்.

When in Ceylon forget not to Visit

KIZARS

AT COLOMBO

129 & 131 SECOND CROSS

The Popular House for :

Sarongs, Camboys & Piece-goods

OF

Distinctive Designs and Quality



Head Office:

C. H. KIZAR MOHAMED & CO.

239, Angappa Naick St., :: G. T., MADRAS

விய மார்கழி 12 (27—12—'46) வெள்ளி 3—30 மணி

* சங்கீத விதூஷனி

சுந்தரி தம்பி-பாட்டு

இராமனுதபுரம் வி. வேங்கடாசல அய்யர்—பிடில்

வடக்கஞ்சேரி கிருஷ்ணன்—மிருதங்கம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
அருள் புரிவாய்	அம்சத்வனி	ஆதி	சுத்தானந்த பாரதி
நின்னருள் இயம்பலாகுமோ	பந்துவராளி	ரூபகம்	பாபநாசம் சிவன்
சங்கித கானமு	தன்யாசி	ஆதி	தியாகையர்
பராமுகம் ஏனையா	கரகரப்பிரியா	திரிபுடை	பாபநாசம் சிவன்
வண்டாடும் சோலை	அரிகாம்போதி	ரூபகம்	கல்கி
கிருபய பாலயா	சாருகேசி	திரிபுடை	சுவாதித்திருநாள்

இராகம்—பல்லவி—சங்கராபரணம்

பிற தமிழ்ப் பாடல்கள்.

'மனங்குவிந்து மதிபெருக்கும் உயிர்க்கலைகள் வேண்டும்'

5—30 மணி

திருமதி பாலசரஸ்வதி—அபிநயம்

திருமதி ஜயம்மாள்—பாட்டு

அலாரிப்பு (திருப்புகழ்)	—	கண்டம்	—
ஜதீஸ்வரம்	கல்யாணி	ரூபகம்	—
வர்ணம்	சங்கராபரணம்	ச. திருபுடை	—

பதங்கள் :

ஓசோசி	முகாரி	ஆதி	—
தாயே	தோடி	மி. சாபு	—
பதறி	காம்போதி	ஆதி	—
இனிமேல்	பைரவி	ரூபகம்	—
தில்லானா	மந்தாரி	தி. திரிபுடை	—

மங்களம்.

உத்திரவாதமுள்ள

உயரிய ஜரிகை
பட்டு, நூல், ஜவுளி
தினுசுகளுக்கு
நம்பிக்கையான
பழைய கடை

For Lovely

SILKS

AND

SAREES

Shop at

ORIGINAL S. R. B. SHOP

S. R. B. Kuppuswamy Iyer & Sons

(Formerly S. R. BALUSWAMY IYER & SONS)

117, Nyneappa Naick Street, P. T., Madras

Telegrams: "RENOWN" Telephone: 3506

Madura Office:—No. 230, East Market Street, MADURA

Telegrams: "YESARBIKAY" Telephone: 36.

விய மார்கழி 13 (28—12—'46) சனி 3—30 மணி

திருமதி கோமதி கல்யாணராமன்-பாட்டு

கோமளவல்லி சீநிவாசன்—பிடில்

திருமதி. ஹம்சதமயந்தி—மிருதங்கம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
அருள் புரிவாய்	அம்சத்வனி	ஆதி	சுத்தானந்த பாரதி
சரவணபவ	கன்னடா	,,	பாபநாசம் சிவன்
நோ நெந்து	கர்னாட பெஹாக்	,,	தியாகையர்
என்னடி சொன்னார்	கல்யாணி	,,	கம்பதாசன்
ப்ரோ சேவா	கமாஸ்	,,	வாசுதேவாச்சாரி
கேளடி தோழி	மாண்டு	,,	கம்பதாசன்
ராம நாம	தேஷ்	,,	சங்கரன்
கானம் மதுர	பீம்பளாஸ்	,,	கம்பதாசன்
முல்லை மொட்டென	பாகேஸ்வரி	,,	,,

பல்லவி—தமிழ்—காம்போதி—திஸ்ரம்

பிற தமிழ்ப் பாடல்கள்

வாழிய செந்தமிழ் !

இமிழ்கடல் உலகெலாம் தமிழிசை பெருகுக

ό—30 மணி

* கானகலாதர

மதுரை. மணி அய்யர்—பாட்டு

திருவாங்கூர் சமஸ்தான வித்துவான் கும்பகோணம். இராஜமாணிக்கம் பிள்ளை- பிடில்

இராமனுதபுரம். சி. எஸ். முருகபூபதி—மிருதங்கம்

கருணை செய்வாய்	அம்சத்வனி	ஆதி	பாபநாசம் சிவன்
நாத தனு மனிசம்	சித்தரஞ்சனி	,,	தியாகய்யர்
பிறவா வரம்	லதாங்கி	,,	பாபநாசம் சிவன்
சதானந்தத் தாண்டவம்	பகுதாரி	,,	அச்சுததாசர்
காணக்கண் கோடி	காம்போதி	,,	பாபநாசம் சிவன்
மா ரமணன்	இந்தோளம்	ரூபகம்	,,
இனிமேல் அவருக்கும்	பைரவி	திருபுடை	கவிக்குஞ்சர பாரதி
ஒருக்கால் சிவ	ஆரபி	ஆதி	மாரிமுத்தாப் பிள்ளை
தூது நீ சொல்லி	மணிரங்கு	,,	திரிகூட ராசப்பர்

இராகம்—தானம்—பல்லவி—தோடி

பிற தமிழ்ப் பாடல்கள்

மங்களம்.

கொலம்பியா ரிகார்டுகளில் கேளுங்கள்

காயன கந்தர்வ

செம்பை வைத்தியநாத பாகவதர்

பாடிய

GE.6249

உன் பெருமையை

(2 பாகங்கள் - கல்யாணி)

GE 6280

பாவனகுரு (ஹம்ஸாநந்தி)

வாரிஜதள (ஆரபி)

GE.6300

எவரிகி தெலுஸுனு

(2 பாகங்கள் - கன்யாஸி)

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ்

மதராஸ்-2

G.H.RAO.

-விய மார்கழி 14 (29—12—'46) ஞாயிறு 3—30 மணி

திரு. எஸ். வி. பார்த்தசாரதி-பாட்டு
திரு. டி. பாலசுப்பராயலு—பிடில்
திரு. எஸ். வி. எஸ். நாராயணன்—மிருதங்கம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
வாரண முகவா	அம்சத்வனி	ரூபகம்	கோடீசுவரய்யர்
கண்டேன் கண்டேன்	பிலகரி	ஆதி	விசுவநாத சாஸ்திரி
உன்னையல்லால்	சிம்மேந்திர மத்திமம்	,,	கோடீசுவரய்யர்
ஐயனே நடனம்	சாவேரி	சாப்பு	முத்துத்தாண்டவர்
சபாபதிக்கு	ஆபோகி	ரூபகம்	கோ. கிருஷ்ண பாரதி
நீயே மன மகிழ்வோடு	கல்யாணி	ஆதி	ஆனை ஐயா
சிதம்பரம்	பியாகடை	,,	கோ. கிருஷ்ண பாரதி
யாருமில்லாத	வராளி	,,	சுந்தரேசய்யர்

இராகம்—பல்லவி—சங்கராபரணம்
பிற தமிழ்ப் பாடல்கள்

கர்நா டகஇசை நம்நாட் டிசையே

5—30 மணி

* காயன கந்தர்வ சங்கீத சாம்ராட்

செம்பை வைத்தியநாத பாகவதர்—பாட்டு
மைசூர் சமஸ்தான வித்துவான் டி. சௌடையா—பிடில்
இராமநாதபுரம். சி. எஸ். முருகபூபதி—மிருதங்கம்

தட்சண மூர்த்தியே	சக்கரவாகம்	ஜம்பை	—
ரகுவர	பந்துவராளி	ஆதி	—
சங்கீதானந்த ரசிகே	தோடி	,,	—
பொன்மலை எங்கேயோ	சிம்மேந்திர மத்திமம்	,,	—
எவ்ரிகி தெலுசுனம்மா	தன்யாசி	,,	—
காமவசதா கருணாலயா	கமாஸ்	ரூபகம்	—
பாவனகுரு	அம்சாநந்தி	,,	—
இராகமாலிகை			

இராகம்—தானம்—பல்லவி—பைரவி
பிற தமிழ்ப் பாடல்கள்
மங்களம்.

ஜே ஹிந்த்!

புதிய ஆண்டின் வரவேற்பு

உங்கள் மதிப்புக்குரிய இசைவல்லுனரின்
இனிய கீதங்கள்
திவ்வியமான திரை கானங்கள்

நேஷன்ஸ் வாய்ஸ்

இசைத் தட்டுகளில் கேளுங்கள் !

Nation's Voice

INDIA GRAMOPHONES
Madras

நூற்றுக்கு நூறு நாட்டுத் தயாரிப்பு

இந்தியா கிராமபோன்ஸ்

19, உட்ஸ் ரோடு

சென்னை. 2

விய மார்கழி 15 (30—12—'46) திங்கள் 3—30 மணி

திரு. கே. ஆர். குமாரசாமி-பாட்டு

திரு. டி. பாலசுப்பராயலு—பிடில்
திரு. பொன்னு அய்யர்—மிருதங்கம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
சதானந்தத் தாண்டவம்	பகுதாரி	ஆதி	அச்சுததாசர்
கனவிலும் நினைவிலும்	பிலகரி	,,	கோடீசுவரய்யர்
உனது மகிமையை	கல்யாணி	,,	கோ. கிருஷ்ண பாரதி
நினுவினு சுகமு கான	தோடி	ரூபகம்	தியாகையர்
கண்டபின் கண்குளிர்ந்தேன்	மலய மாருதம்	ஆதி	முத்துத்தாண்டவர்
இனி ஒருகணம்	ஸ்ரீ ரஞ்சனி	ரூபகம்	பாபநாசம் சிவன்
வந்தே சதா பத்மநாபம்	பரசு	ஆதி	சுவாதித் திருநாள்
அபய கரத்தை	பெஹாக்	ரூபகம்	சுத்தானந்த பாரதி
வேத வெற்பிலே	(திருப்புகழ்)	திச்ர ஏகம்	அருணகிரிநாதர்

இராகம்—பல்லவி—சண்முகப்பிரியா
பிற தமிழ்ப் பாடல்கள்

'தமிழ்க்காற்றில் இசைப்பதுவும் தமிழர் பாட்டே'

5—30 மணி

*** மதுரகீத வாணி**

என். ஸி. வசந்தகோகிலம்—பாட்டு

திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை—பிடில்
இராமநாதபுரம் ஈசுவரன்—மிருதங்கம்
திரு. டி. எஸ். வில்வாத்திரி அய்யர்—கடம்

நீ இந்த (வர்ணம்)	தன்யாசி	ஆதி	பாபநாசம் சிவன்
இன்னமும்	தேவமனோகரி	,,	வேதநாயகம் பிள்ளை
அந்தரங்கம்	வாசஸ்பதி	,,	சுத்தானந்த பாரதி
இனி நமக்கொரு	பிலஹரி	ரூபகம்	கோடீசுவரய்யர்
இவன் ஆரோ	காம்போதி	சாப்பு	க. குஞ்சர பாரதி
கந்தா குமாரா	தோடி	ஆதி	விசுவநாத சாஸ்திரி
அல்லும் பகலும்	பரசி	,,	சுத்தானந்த பாரதி
அருணோதயம்	கரகரப்பிரியா	,,	,,

இராகம்—பல்லவி—கல்யாணி
பிற தமிழ்ப் படால்கள்
மங்களம்.

Own Your Home

IN

UNITED INDIA NAGAR

AYYANAVARAM

(with Corporation Limits)

For Information

Call at our Office:

The United India Life Assurance Co., Ltd.

"UNITED INDIA LIFE BUILDING"

ESPLANADE :: MADRAS

விய மார்கழி 16 (31—12—'46) செவ்வாய் 3—30 மணி

திரு. ஸி. எஸ். கிருஷ்ணன்-பாட்டு
ஈரோடு விசுவநாதய்யர்—பிடில்
திரு. குஞ்சுமணி ஐயர்—மிருதங்கம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
வர்ணம் (தமிழ்)	ஆரபி	ஆதி	டைகர் வரதாச்சாரி
பருவம் பார்க்க	தன்யாசி	ரூபகம்	ஆனை ஐயா
சுந்தர குஞ்சித	ஆனந்த பைரவி	ஆதி	முத்துத்தாண்டவர்
ஏதுக்கிந்த சடலம்	பந்துவராளி	சாபு	கோ. கிருஷ்ண பாரதி
தாமதமேன்	தோடி	ஆதி	பாபநாசம் சிவன்
பத்மநாப பஹி	இந்தோளம்	,,	சுவாதித்திருநாள்
சிவனே நினைமனமே	அமீர் கல்யாணி	,,	நீலகண்ட சிவன்
எப்படி மனம்	ஹுசேனி	சாபு	அருணாசலக்கவி

இராகம்—பல்லவி
பிற தமிழ்ப் பாடல்கள்.

தமிழ்மொழியில் பாட்டென்றால் பிறமொழியில் பகைஅல்ல

5—30 மணி

* **திருவாங்கூர் சமஸ்தான வித்துவான்**

ஜி. என். பாலசுப்பிரமணியம்—பாட்டு
மைசூர் ஆஸ்தான வித்துவான் டி. சௌடையா—பிடில்
திருவாங்கூர் ஆஸ்தான வித்துவான் பாலக்காடு டி. எஸ். மணி அய்யர்—மிருதங்கம்
திரு. டி. எஸ். வில்வாத்திரி அய்யர்—கடம்

தயை புரிய	மலயமாருதம்	ரூபகம்	வேதநாயகம் பிள்ளை
தண்டனிட்டேன்	தோடி	ஆதி	இராமலிங்க அடிகள்
இன்னமும் தாமதமேன்	தேவமனோகரி	,,	வேதநாயகம் பிள்ளை
சிவ சிதம்பரம்	பைரவி	,,	மாரிமுத்தாப்பிள்ளை
கமக்கினி	இராகமாலிகை	,,	கோ. கிருஷ்ண பாரதி
நல்ல சகுனம்	சண்முகப்பிரியா	—	தேசிகவிநாயகம் பிள்ளை
என்ன பிழைப்பு	சௌராஷ்டிரம்	—	மாரிமுத்தாப்பிள்ளை
காருமுத பானம்	ஜோதிஸ்வரூபணி	மிச்ரம்	கோடீசுவரய்யர்
கருணாநிதம்மா	கௌளிபந்து	ஆதி	சியாமா சாஸ்திரி

இராகம்—பல்லவி—கல்யாணி
பிற தமிழ்ப் பாடல்கள்
மங்களம்.

எந்தவிதமான புகைப் படங்கள்
எடுப்பதற்கும்
தயவு செய்து எங்களைக்
கலந்து கொள்ளுங்கள்

ஜி. கே. வேல் அண்டு
கம்பெனி

23, மௌண்ட் ரோடு,
சென்னை.

விய மார்கழி 17 (1—1—47) புதன் 5 மணி

* கோகிலகான இசைவாணி

எம். எஸ். சுப்புலட்சுமி—பாட்டு

மைசூர் ஆஸ்தான வித்துவான் டி. சௌடையா—பிடில்
கல்பாத்தி இராமனுதன்—மிருதங்கம்
ஆலங்குடி இராமச்சந்திரன்—கடம்

பாடல்	இராகம்	தாளம்	இயற்றியவர்
அருள் புரிவாய்	அம்சத்வனி	—	சுத்தானந்த பாரதி
சதானந்த	பருதாரி	—	அச்சுததாசர்
சிதம்பரம் என	கல்யாணி	—	பாபநாசம் சிவன்
நே நெந்து	—	—	தியாகையர்
தூக்கிய திருவடி	சங்கராபரணம்	—	சுத்தானந்த பாரதி
வண்டாடும்	அரி காம்போதி	—	—
மாயே	தரங்கிணி	—	தீட்சதர்
காலைத் தூக்கி நின்று	யதுகுல காம்போதி	—	மாரிமுத்தாப் பிள்ளை

இராகம்—பல்லவி—தோடி
பிற தமிழ்ப் பாடல்கள்
வாழிய செந்தமிழ்!

வாழிய தமிழிசை! வளர்கநல் தமிழர்!

9—30 மணி

* **அகில இந்திய வேணுகான நாதசுர சக்ரவர்த்தி இசைஉலக ஜோதி**

டி. என். இராஜரத்தினம் பிள்ளை & பார்ட்டி—நாதசுரம்

நாச்சியார் கோவில் என். பி. இராகவன்—தனித் தவுல்

மங்களம்.

இசை அரங்கு நிகழ்ச்சிகள் மாற்றத்திற் குரியன

எங்கள்

டிரேட் ★ மார்க் ★

(எக்ஸ்போர்ட்டு ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கிறோம்)

N. கருப்பண்ண முதலியார்

53, கிடங்கு தெரு, சென்னை

தலைமை ஆபீஸ்: ஈரோடு.

ஜே ஹிந்து! ஜே ஹிந்து

கவனியுங்கள் !

சுதேசி கைத்தொழிலை ஆதரியுங்கள்

உயர்ந்த ரகப் புகையிலையைக் கொண்டு தேர்ச்சிபெற்ற ஆட்களினால் உன்னதமான முறையில் செய்யப்பட்டதும் குணம், மணம், காரம் முதலியவற்றில் இதற்கு நிகரில்லை யென சொல்லும்படியாய் சிறந்து விளங்குவதுமான

நமது மங்களூர் கிரேட் இந்தியா பீடியை யாவரும் உபயோகித்து ஆனந்தமும் குதூகலமும் அடையுங்கள்! ஒரு முறை பரீக்ஷித்து உண்மையை அறியுங்கள்

நமது கிரேட் இந்தியா பீடிகளில் கசப்பு இருக்காது. மனோரம்யமான வாசனையுடையது. வேலை செய்யும்போது, அணைந்து உபத்திரவம் கொடுக்காமல், சிகரெட்டைப் போன்று தொடர்ச்சியாக எரிந்து சந்தோஷத்தை உண்டாக்கும். சோப்பலை நீக்கி, சுறு சுறுப்பையும், வேலையில் ஊக்கத்தையும் அளிப்பதில் இதற்கு நிகர் வேறெதுவும் நிற்காது.

ஒவ்வொரு மொத்த வியாபாரிகளிடமும் சில்லரை வியாபாரிகளிடமும் கேட்டு வாங்குங்கள்.

சென்னையில் மொத்த விற்பனையாளர்,

P. இராமமூர்த்தி செட்டியார்

7/168, அண்ணாப்பிள்ளை தெரு, சென்னை. 1

Save your Mysore sandal soap

In these days it isn't easy to cope with the demand for this exquisite soap. Help us by using it economically. Wet your hands and make a lather with the soap; rub the lather and not the soap on your face and body; keep the soap-dish dry — your soap will last longer.



MSK 15

WHEN BABY CRIES

WITHOUT ANY REASON

he is telling you that his little tummy is troubling him because of overfeeding or some digestive disorder. He needs Gripe Syrup I. T. L. to give him immediate relief from griping pain or Flastulence and to prevent the trouble becoming serious. It is absolutely harmless and you can safely

Give him **GRIPE SYRUP**

·I·T·L·

Selling Agents: BEST & CO., LTD.

அன்பு அளித்து இன்பம்
கொடுப்பது எது—?

★ ஆனந்தம் ★

தயாரிப்பவர்
பா. கோ. மாணிக்கம்
செட்டியார்

ஆனந்தா
சுகந்த பாக்குத்தூள்

ஆச்சாரப்பன் தெரு,
மதராஸ், 1.

தென்னாட்டில் சீர் சிறப்புடன் விளங்கி புகழ்பெற்று வருகிறது. எமது பாக்கு அசல் பீட்டின் பாக்கினால் தயார் செய்யப்பட்டது.

ஆனந்தா
சுகந்த பாக்குத்தூள்

INSIST ON!

NATES best and pure Coffee

RAW, ROAST OR GROUND

My motto is small profit and good bargain

★

Proprietor:

S. NATESA CHETTY

COFFEE, TEA AND NUT
WHOLESALE AND RETAIL MERCHANT

Head Office:
B-133, Kothwal Bazaar,
MADRAS

Branches:
B-11, Kothwal Bazaar, Madras
D-1, Kothwal Bazaar, Madras

Coffee roasting and powdering Dept:
A-101, 102 & 96, Near Knnikaparamesvari D. Charities, G. T., Madras.

Wholesale Importers and Large Stockists of

GENUINE BRITISH MAKES

OF

TEXTILE STORES ACCESSORIES

★

Specialities :

Healds, Reeds, Bobbins, Sizing and Finishing Materials, Loom Sundries, Woollen Goods, etc.

Roller Skins, Pickers, Buffers, Wire Healds, Heald Cord, Dobby Twine, Dobby Harness Braim's Oil Cans, Barbour's Linen thread Reels No. 35 & 40, Card Comb Blades, Reed Hooks, Weaver's Comb, Lappets, Perforated Steel Strips, Loom Temples, Temple Rollers, Bow Springs, Back Springs, Boxend Springs, Weft Forks, Weft Grates, Dobby Springs, Shuttle Tongues, Loom Spindles etc.

★

Delivery from Ready Stocks

NAGINDAS KILABHAI & CO.

"THE VINTAGE"

Cox Street **Post Box No. 175** **Coimbatore**

Also Offices at : AHMEDABAD, BOMBAY, CALCUTTA & CAWNPORE.

ATTENTION

ARCHITECTS, ENGINEERS & BUILDING CONTRACTORS

How your buildings look after 50 years Depends on what you do now, Act now and ask for

MYSINDIA MOSAIC TILES

PARTICULARS:

Apply to: **THE MYSINDIA TILES & ENGINEERING COMPANY**

1 & 2, POONAMALLEE HIGH ROAD

P. T., MADRAS

ROWE INDUSTRIES LIMITED

Manufacturers of Textile Machinery and Spare Parts. Dealers in all other Textile Stores.

Specialised in Bobbins, Roving, Inter and Slubbing Spindles and other Steel Articles.

Head Office:

Janmabhumi Chambers,
Fort Street, - Fort, BOMBAY.

Phone Nos. 24645. 40491.

Branches:

669/39, Haridas Achartlal Market
Ahmedabad.

163, Mall Mill Road,
Coimbatore.
Phone No- 54

OUR SISTER CONCERNS:

RELIABLE CONSTRUCTION Co., Builders and Contractors,
BOMBAY & COIMBATORE.

RATILAL SHAH & Co., Cotton Merchants,
BOMBAY & COIMBATORE.

A Pair of Pious Gems! Grand New Year Attractions !!

Two Glorious Musical Screen-Hits !!!

BHAKTHA
VEMANNA

BHAKTHA
CHARUKADAS

TAMIL PURANIC PICTURES

CAST :

P. U. CHINNAPPA

K. MALATHI
Telugu "Sumati" Fame

M. R. SANTHANALAKSHMI

C. V. V. PANTULU

Comedian V. KUMARASWAMI

N. RAJALAKSHMI

CAST :

ISAI ARASU
M. M. DANDAPANI DESIGAR

T. PREMAVATHI

M. R. SANTHANALAKSHMI

Comedian V. KUMARASWAMI

N. RAJALAKSHMI

P. S. GNANAM

SAVITHRI BAI

Songs :
Papanasam SIVAN

Direction :
S. NOTANI

Story & Dialogue : T. V. CHARI

— *PRODUCERS :* —

RATNA STUDIO

SALEM

RELEASING
SHORTLY

LEO FILM'S, MAMMOTH PRODUCTION

SHIVAYOGI

Isai Arasu
M. M. Dandapani Desikar
K. Sarangapani
T. R. Ramachandran
Surabhi
Sulochana
R. Balasubramaniam
and others

Directed By.
KRISHNAN-PANJU
Screen Play &
Joint Direction
SOMAYAJULU

Music
S. V. VENKATARAMAN
Studio, NEWTONE

FOR PARTCULARS.. The Leo Films, 27, MOTILAL ST. MADRAS 17.
FOR NORTH & SOUTH ARCOT, CHINGLEPUT & PONDICHERRY. } KABALI PICTURES, ARCOT Rd. VELLORE.

Printed at the Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras 1—MS. 120A.